ஓம்

திருச்சிற்றம்பலம்

செந்தமிழ்ச் செல்வி

திருநெல்வேலித் தென்னிந்திய

சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தினின்றும்

திங்கள்தோறும் வெளிவருவது

சிலம்பு ௬	மெய்கண்டான்யாண்டு-௭௱௫ ஐப்பசித்திங்கள் 1928௵ அக்டோபர்௴—நவம்பர்௴	பரல் ௰

கோடுகுவெஞ்சிலை வடுகவேடுவர் விரவலாமைசொல்லித்
திடுகுமோட்டெனக் குத்திக்கூறைகொண் டாறலைக்குமிடம்
முடுகுநாறிய வடுகர்வாழ்முருகன் பூண்டிமாநகர்வாய் [னிரே.
இடுகுநுண்ணிடை மங்கைதன்னொடு மெத்துக்கிங்கிருந்தீரெம்பிரா

சுந்தரர்.

உரை:—

'கொடுந்தன்மை வாய்ந்த வளைந்த சிலைகளைத் தம் கைகளிலே உடைய வடுகநாட்டு வேடமக்கள் தமக்குள்ள அன்புகலவாத்தன்மையை வழிப்போக்கரிடம் வெளிப்படையாய்ச் சொல்லி அவரைத் திடுமெனப் பாய்ந்து மொட்டென வில்லம்பினாற் குத்தி அவர்மாட்டுள்ள உடை முதலானவைகளைக் கவர்ந்துகொண்டு ஆறலைக்கு மிடமாகிய, போர்த்திறந் தோன்றி விளங்கும் அவ் வடுக வேடமக்கள் வாழ்கின்ற திருமுருகன்பூண்டி யென்னும் பெருமைமிக்க நகரத்தின்கண் இடுக்கான நுண்ணிய சிற்றிடையையுடைய உமையம்மையோடு கூடி எமக்குப் பிரானாயுள்ள சிவபெருமானே! ஆறலைப்பார் எம்மை வழிபறிக்கும்போது நீவிர் இத் திருக்கோயிலின்கண் எதற்காக வாளா இருந்தீர்?'

'ஆறலைக்கும் இடமாகிய முருகன்பூண்டி நகர்வாய் எம்மை வழிபறிக்கும்போது நீர் இத் திருக்கோயிலின்கண் எத்துக்குவாளா இருந்தீர்' என்று உரைத்துக்கொள்க. இங்கு - இத்திருக்கோயிற்கண்.

நம்பியாரூரர் மலைநாட்டிலிருந்து சேரமான் பெருமாளிடம் பொருள் பெற்றுக்கொண்டு கொங்கு நாட்டின்கண் உள்ள திருமுருகன்

பூண்டித் திருப்பதியின் வழிபற்றி அதற்கருகாக வரும்போது, தாம் கொண்டு வந்த பொருள் முதலியவைகளெல்லாம் சிவபிரானாணையால் வழிபறிக்கப்பட்டமையின், அவர் இங்ஙனங் கூறினார். இங்ஙனங் கூறினமை சிவபிரான்பால் அவர்தமக்குள்ள தோழமையினாலா மென்க. என்னை?

"பேசின பேச்சைப் பொறுக்கிலரா கில்
இவரலா தில்லையோ பிரானார்" (திருப்பாச்சிலாச்சி, ௧௨)

"அடிகேள் உமக்காட் செய அஞ்சுதுமே" (திருப்பரங்குன்றம்)

"அட்டக் கொண்டுண்பது அறிந்தோமேல்
நாம்இவர்க்கு ஆட்ப டோமே" (திருவேள்வி,திருத்துருத்தி,௨)

என்பனவெல்லாங் கூறுதற்கேற்ற பெருந்தோழமை நம்பியாரூரர்க்குச் சிவபிரான்பால் உண்டாதலினென்பது.

கொடுகு திடுகு-கு சாரியை. வடுகநாடு - தெலுங்கநாடு. வேடுவர் - வேட்டையாடுபவர்; வழிபறித்தலும் ஒரு வேட்டையாமாதலின், கள்வ ரென்பதும் வேடுவரென்பதும் ஒன்று. 'வடுகவேடுவர் ஆறலைக்குமிடம்' என்றும், 'வடுகர் வாழ் முருகன் பூண்டி' யென்றும் வருதலால்,கொங்கு நாட்டிற்கு வடக்கேயிருக்கும் வடுகநாட்டின் மக்கள் அக்காலத்தில் முருகன்பூண்டியைப்போன்ற கொங்கு நாட்டிடங்களுக்கு வந்திருந்து வாழ்ந்து வழிபறிப்பாராயின ரெனபதொன்று போதருகின்றது. விரவ லாமைசொல்லலாவது, வழிப்போக்கருடன் தாம் அனபு கலவாமையை எடுத்துச்சொலலல்; அஃதாவது 'எங்கட்கு அன்போடு சேர்ந்த நட்பு நுமகள்பால் இல்லையென்று சொல்லல்;' ஆவது 'நீங்கள் உங்கள் பொருளைக் கொடாவிட்டால், உங்களைக் கொல்லுந் தன்மையே எங் கட்கு உண்டு' என்று வெளிப்படையாய்ச் சொல்லி நிற்றல். 'திடுகு' காலவிரைவையும், 'மொட்டென' வென்பது குத்தொலியையுங் குறிப் பன. ஆறு அலைத்தல்-வழியிலே வருததல்; அதாவது வழிபறித்தல். முடுகு-எதிர்ப்பு; ஆவது போர்த்திறம்; அன்றிச் சுறுசுறுப்புமாம்; அஃதா யின், உற்றநேரங் கண்டபொழுது சட்டென எதிர்த்துக் கவர்ந்து மறை யுஞ் சுறுசுறுப்பென்று கருத்துரைத்துக் கொள்க நாறுதல்-தோன்றுதல்; 'ஆம்பல் நாறும் தேம்பொதி நறுவிரை' (அந்திமாலைச், ௭௬) என்னுஞ் சிலப்பதிகார அடியிற் போந்த 'நாறும்' என்னுஞ் சொல்லுக்கு ஆசிரியர் அடியார்க்கு நல்லார் 'தோன்றும்' என்றே பொருளுரைத்தார். 'மங்கை தன்னொடு' என்றது, அருளோடு கூடி இருந்தும் இரக்கங் காட்டாது வாளாவிருந்தீரே யென்றற்கு. 'எம்பிரான் நீரே' யென்றது, எமக்குப் பிரானாயிருந்தும் உற்றுழிநுமது தலைமைப்பண்பைக் காட்டாது வாளா விருந்தீரே யென்றற்கு. 'எததுக்கு'-எற்றுக்கு என்பதன் திரிபு. இஃது எந்துகு' என்று தெலுங்கு மொழிக்கண் வழங்கும்.

திருவள்ளுவர் திருக்குறள்

[திரு. கா. சுப்பிரமணிய பிள்ளையவர்கள் M.A., M.L.,]

ஆசிரியர் திருவள்ளுவனார் திருக்குறள் செய்த காலம் இன்னதென்று தெளிவாக விளங்கவில்லை. திருவள்ளுவமாலையுள் மாமூலனாரென்பவர் பாடிய பாட்டுக் காணப்படுகின்றது. நரிவெரூஉத் தலையார் பாடலுங் காணப்படுகின்றது. இப்புலவர்கள் பரணர்க்கு முற்பட்ட காலத்தோர். திருவள்ளுவ மாலையுட் போந்த கோதமனாரென்பவர் களங்காய்க் கண்ணி நார்முடிச் சேரலைப் பாடிய கோதமனாரெனின், அவர் காலத்திற்கு முன்பே திருக்குறள் இயற்றப்பட்டிருக்க வேண்டும். களங்காய்க் கண்ணியின் முன்னோனாகிய இமயவரம்பனுக்குச் சிலப்பதிகாரக் கதா நாயகனாகிய கோவலன் குடும்பத்தில் ஒன்பது தலைமுறைக்கு முன்னிருந்த கோவலனென்பான் நண்பனென்று சிலப்பதிகாரங் கூறுகின்றது. சிலப்பதிகார காலம் கி. பி. ௧௪௪. சிலப்பதிகார காலத்துக்கு ஏறக்குறைய உ௱௰-ஆண்டுகட்கு முன்னே திருக்குறள் இயற்றப்பட்டிருத்தல் கூடும். மணிமேகலை சிலப்பதிகாரம் என்ற இரண்டு நூல்களிலும் திருக்குறளைப்பற்றிய குறிப்புக் காணப்படுகின்றது. கலித்தொகை முதலிய சங்கநூல்களிலுந் திருக்குறட் சொற்றொடர்களுங் கருத்துக்களும் வந்துள்ளன.

கோதமனாரென்பவர் தருமரைப்பற்றிப் புறநானூற்றுள் ஒரு பாட்டுப் பாடியுள்ளார். அத் தருமரென்பவர் யாரென்று விளங்கவில்லை. அவர் பாண்டவர்களில் ஒருவராகிய தருமரெனின், கி. மு. க௨-வது நூற்றாண்டிலேயே திருக்குறணூல் இயற்றப்பட்டிருக்கவேண்டும்.

திருக்குறள் நூலுள் "ஆவோடல்லது யகர முதலாது" என்னுந் தொல்காப்பியச் சூத்திரத்துக்கு மாறாகிய சொல்லொன்றுங் காணப்படாமையாலும், நாற்குல முதலிய கொள்கைகள் திருக்குறளிற் காணப்படாமையாலும், முதுகுடுமியைப் பற்றிய புறநானூற்றுப் பாடலுள் 'யூப' முதலிய வடசொற்கள் காணப்படுகின்றமையாலும், அச்செய்யுள் எழுந்த காலத்துக்கு முன்பேயே திருக்குறள் இயற்றப்பட்டிருத்தல் கூடுமாதலாலும், முதுகுடுமி காலம் மிகப் பழமையுடையதாதலாலும், தொல்காப்பியத்திற்குப் பின் ஏற்பட்ட இலக்கியங்களுள் திருக்குறளே முதலாய நூல் என்று கருத இடமுண்டு. முதுகுடுமியின் காலம் நான்காம் நூற்றாண்டேயாயின், திருவள்ளுவர் காலம் அதற்கு முற்

பட்டதாதல் வேண்டும். ஆகவே கி. மு. பன்னிரண்டாம் நூற்றாண்டிற்கும், கி. மு. ஐந்தாம் நூற்றாண்டின் முடிவிற்கும் இடையில் திருவள்ளுவர் நூல் தோன்றியிருத்தல்கூடும். கலித்தொகை, சிலப்பதிகாரம் முதலிய நூல்கட்கு முற்பட்டதென்பது தெளிவு.

ஆசிரியர் திருவள்ளுவரைப்பற்றித் தெளிவாகிய வரலாறு யாதுமில்லை. திருவள்ளுவமாலையுள் சில செய்திகள் அறியக் கிடக்கின்றன. திருவள்ளுவ மாலையானது வெவ்வேறு காலத்திருந்த பல புலவர்களால் இயற்றப்பட்ட பாடல்களின் தொகுதியாகத் தோன்றுகின்றது. நாமகள் முதலியோரால் கூறப்படுஞ் சில பாடல்கள் பிறரால் சேர்க்கப்பட்டனவோ வென்ற ஐயம் நிகழக்கூடியதே. ஆராய்ச்சிக்காரர் சிலர் திருவள்ளுவ மாலை முழுவதுமே வெண்பாயாப்பினால் ஒரே புலவரால் பல புலவர்கள் பாடியதுபோலப் பாடப்பெற்ற நூலென்று கருதுகின்றார்கள். எவ்வாறாயினும், திருவள்ளுவரைப்பற்றி யறிவதற்கு அஃதோர் பண்டைக் கருவி நூலாகத் திகழ்கின்றது. திருவள்ளுவர் ஆதிக்கும் பகவனுக்கும் பிறந்த எழுமக்களில் ஒருவரென்றும், அவர் வாசுகி யென்னும் வேளாளப் பெண்ணை மணந்தாரென்றும், ஏலேலசிங்கரென்னும் பெருஞ் செல்வரால் இவர் ஆதரிக்கப் பட்டாரென்றும், இவர் நெய்தற்றொழிலை மேற்கொண்டாரென்றும், இவர் மனைவி கற்புடைமையால் பல அற்புதச் செயல்கள் நிகழ்த்தினரென்றும் கபிலரகவல் என்ற நூலாலுங் கேள்விக் கதைகளாலும் அறிகின்றோம். இவர் தமது நூலுள் வேளாண்மையையும் உழவையும் எடுத்துக் கூறியவாறு நெய்தற்றொழில் முதலியவற்றை எடுத்துக் கூறவில்லை. இவர் மனைவி வேளாண் மரபினரென்னுங் கோட்பாடிருத்தலால், இவரும் பிறப்பால் வேளாளமரபினராயிருத்தல் கூடுமென்று அறிஞர் சிலர் கூறுகின்றார்கள். இவர் வள்ளுவர் மனையில் வளர்ந்திருத்தல்கூடும். மணிமேகலையுள், பசுவினாற் பாலூட்டி வளர்க்கப்பட்ட பார்ப்பனமகவு ஆபுத்திரன் என்றழைக்கப்பட்டதுபோல வள்ளுவர் என்ற பெயர் பெற்றிருத்தல் கூடும் 'மறந்தேயும் வள்ளுவனென்பானோர் பேதை' என்ற மாமூலனார் திருவாக்கினாலும் அதுவிளங்கும். ஞானமிர்த நூலுள் யாளிதத்தன் என்பானுக்கு ஒரு புலைச்சிமாட்டு ஏழு புதல்வர்கள் பிறந்தனரென்று கூறப்பட்டது. அவ்வெழுவர் யாரென்று கூறப்படவில்லை. யாளிதத்தன் என்பது வணிகப் பெயராகத் தோன்றுகின்றது. அக்காலத்தில் வேளாளரில் ஒரு பகுதியார் வணிகத்தை நடத்தினரென்பது வேளாளர் சிறப்புக்கூறும் பட்டினப்பாலைப் பகுதியினால் இனிது விளங்கும். இவ்வெழுவருள் ஔவையையும் ஒருவராகக் கூறுவர். ஔவையார் காலம் மாமூலனார் காலமே. யாளிதத்தன்

வரலாற்றினால் அப்பெயருடைய வேளாள வணிகனொருவனுக்கும், புலைச்சியொருத்திக்கும் பிறந்து வள்ளுவர் மனையில் வளர்ந்தவர் திருக்குறள் ஆசிரியரென்பது கருதப்படும். சிலப்பதிகாரக் காலத்துக்கு நெடுநாட்குப் பின்னிருந்த நக்கீரர் காலம் வரை ஆசிரியர் இருந்து உருத்திரசன்மரோடு சங்கப் பலகையில் வீற்றிருந்தாரென்று கொள்ளுதல் வரலாற்று முறைக்குப் பொருத்தமாகத் தோன்றவில்லை. இறையனாரகப் பொருள் தோன்றிய காலத்தே உருத்திரசன்மரோடு ஆசிரியர் திருவள்ளுவர் ஒருங்கிருந்தாரென்று கொள்ளுமிடத்து, அக்காலத்தே நக்கீரர் முதலாயினோர் இருந்தாரென்று கொள்ள இடமில்லை. ஆனால் அக்கொள்கைப்படி திருவள்ளுவர் காலம் கி. மு. நாலாவது நூற்றாண்டு என்று கருத இடமுண்டு. ஏனெனில், இறையனாரகப் பொருள் தோன்றிய காலம் பன்னிரண்டாண்டு நிலைபெற்றிருந்த ஒரு பஞ்சத்தின் முடிவுகாலமென்று அந்நூலுரையால் விளங்குகின்றது. அத்தகைய பஞ்சம் கி. மு. நான்காவது நூற்றாண்டில் நிகழ்ந்ததாக வரலாற்றாசிரியர்கள் கருதுகின்றார்கள் ஆதலி னென்க.

திருவள்ளுவர் கூறிய கருத்துக்கள் எச்சமயத்தாரும் ஏற்றுக்கொள்ளத்தக்கன வென்பது கல்லாடரியற்றிய திருவள்ளுவமாலை கூ-வது செய்யுளாலும், கல்லாடத்துள் 'சமயக் கணக்கர் மதிவழிகூறாது உலகியல் கூறிப் பொருள் இதுவென்ற வள்ளுவ' றென்றமையாலுந் தெளியப்படும். சீத்தலைச் சாத்தனாரென்பவர் மூன்று மன்னருக்குஞ் சென்னியில் அணியத்தக்க மாலை' யென்று திருக்குறளைச் சிறப்பித்தார். பரணர் பாடிய பாடலினால், 'உலகத்தார் மனதி லுள்ளவற்றை யெல்லாம் இரண்டடிக் குறள் வெண்பாவால், 'திருமால் உலகளந்ததுபோல அளந்து கூறியுள்ளார்' என்பது அறியக்கிடக்கின்றது. நக்கீரனார் இவரைச் சிறப்பிக்கும் பொழுது,

> 'தானே முழுதுணர்ந்து தண்டமிழின் வெண்குறளா
> லானு வறமுதலா வந்நான்கு—மேனோருக்
> கூழி னுரைத்தான்'

என்றனர். வடமொழிப் பற்றுடையவர் சிலர் வேதக்கருத்துக்களை மிகத் தெளிவுபடக் கூறியிருக்கின்றார். 'பாவிற்கு வள்ளுவர் வெண்பா' வென்றனர் கவிசாகரப் பெருந்தேவனார். அறம் பொருள் இன்பம் மூன்று பாவிற்கும் இயலமைப்பு திருவள்ளுவ மாலையில் உ௫, உகூ, உஎ-ம் பாட்டுக்களுட் காணப்படும். உ௮-ம் பாட்டினுள் திருக்குறள் அதிகா

ரம் ௧௯௯ என்பது குறிக்கப்பட்டது. அது காவிரிப்பூம் பட்டினத்துக் காரிக்கண்ணனாரால் பாடப்பட்டது. அவர்காலம் ஏறக்குறைய இற்றைக்கு இரண்டாயிரம் ஆண்டுகட்கு முற்பட்டது. இக்காலத்திற் சிலர் முதல் மூன்றதிகாரமும் ஆசிரியரால் இயற்றப்படவில்லை யென்று தமக்குத் தோன்றியவாறு கூறுகின்றார்கள். அதற்குப் போதிய ஏதுக்களில்லை.

பண்டைத் தமிழ்மறைகள் மறைந்தபின் அவை கூறிய அறம் பொருளின்பம் வீடென்னும் நான்கினையுந் தெள்ளிதிற் றெரிக்கும் பொதுமறை திருவள்ளுவர் நூலேயா மெனவுணர்க. இந்நூலுட் கடவுள் கொள்கைபற்றிய சொற்கள் யாவுஞ் செந்தமிழிலேயமைந்து நூலின் பொதுத் தன்மையை விளக்குவனவா யிருக்கின்றன. பிரமம், ஆன்மா, தத்துவம், ஞானம், வருணம், ஆசிரமம், வேதம், சாத்திரம், யாகம், விட்டுணு முதலிய சொற்கள் இதன்கட் காணப்படவில்லை. இல்லறம் துறவறமென்று மக்கள் வாழ்வு பிரிக்கப்பட்டதே யொழிய வடநூலிற் கூறும் நால்வகை நிலைபற்றி அப்பகுப்பு அமையவில்லை. நால்வகைக் குலமும் இந்நூலுள் விதந்தோதப்படவில்லை. பண்டைத் தமிழரது கடவுட் கொள்கையை நன்கு அறிந்துகொள்ளுவதற்கு இந்நூலே தக்க கருவியாம்.

ஆரியக் கருத்துக்கள் சிலவே இந்நூலுட் காணப்படினும் அவை பெரிதுந் தழுவிக்கொள்ளப்படவில்லை. அவற்றுள் வேள்வி ஒன்று.

"அவிசொரிந் தாயிரம் வேட்டலின் ஒன்றன்
உயிர்செகுத் துண்ணாமை நன்று"

என்றது காண்க. 'மானம்' என்னும் அதிகாரத்தில்

"இன்றி யமையாச் சிறப்பின வாயினுங்
குன்ற வருப விடல்"

என்னுந் திருக்குறளுக்கு உரை கூறுமிடத்து ஆசிரியர் பரிமேலழகியார்,

'இறப்பவருவழி இளிவந்தன செய்தாயினும் உய்க எனும் வடநூன் முறையை மறுத்து உடம்பினது நிலையின்மையையும், மானத்தினது நிலையுடைமையையுந் தூக்கி அவை செய்யற்க என்பதாம்.' என்றது காண்க. இவ்வாறே,

"ஈன்றாள் பசிகாண்பா னாயினும் செய்யற்க
சான்றோர் பழிக்கும் வினை"

என்றவிடத்தும் ஆரிய அறநூற் பொதுவிதி வினைத்தூய்மை யுடையானுக்கு எய்தாமையைப் பரிமேலழகர் விதந்தோதினமை காண்க. அறநூற் பொதிவிதி யாதெனில், "இறந்த மூப்பினராய இருமுதுகுரவருங் கற்புடைமனைவியுங் குழந்தையும் பசியான் வருந்து மெல்லைக்கண் தீயன பலவுஞ் செய்தாயினும் புறந்தருக" வென்பதாம். (ஆசிரியர் பரிமேலழகருரை)

சாணக்கியரும் சுக்கிரநீதிநூ லுடையாரும் தத்தம் பொருள் நூல்களிற் கள்ளினைச் சிறிதளவுண்ண இடங்கொடுத்திருக்க, ஆசிரியர் திருவள்ளுவனார் பொருட்பாலுட் கள்ளுண்ணாமையை நன்கு வற்புறுத்திப போந்தனர். சுக்கிர நீதியுண முதல் அத்தியாயம் ாகூ—ககக-ம் சுலோகங்களில் 'சிறிதளவு உண்ணப்படுங் கள் மதிநுட்பத்தையுந் தூய அறிவையும் அஞ்சாமையையும் மனவுறுதியையுந தருவதாகும்' என்றது காண்க. ஆசிரியர் திருவள்ளுவனார்

"துஞ்சினார் செத்தாரின் வேறல்லர் எஞ்ஞான்றும்
நஞ்சுண்பார் கள்ளுண் பவர்"

என்றது உற்றுநோக்கத்தக்கது. பிறவும் அன்ன.

திருக்குறள் கூறும் பொருள் இந்நாட்டிற் பலரும் அறிந்ததே. அந்நூலை நன்கு கற்பதனால் அஃது அறியத்தக்கது.

பாயிரத்துட் கடவுள் வாழ்த்தும் மழையைச் சிறப்பிக்கு முகத்தால் அக்கடவுளின் அருட் 'சத்தி' வணக்கமும், நீத்தார் பெருமையில், கடவுள் அருள்பெற்று உலகத்துக்கு உள்ளதை உள்ளவாறுணர்த்தும் கடவுளடியார் வணக்கமுங் கூறியபின்னர், எடுத்துக்கொண்ட பொருளாகிய அறத்தின் றன்மை விளக்கப் பட்டது. அறத்துப்பாலின் எஞ்சிய பகுதியினுள் இல்லறவியலும் துறவறவியலுங் கூறப்பட்டன. இல்லறவியலுள் இல் வாழ்க்கை, நன்மனைவி, நன்மக்கட்பேறு, அன்புடைமை, விருந் தோம்பல், இனியவைகூறல், செய்ந்நன்றியறிதல், நடுவு நிலைமை, அடக்கமுடைமை, ஒழுக்கமுடைமை, பிறனில் விழையாமை, பொறையுடைமை, அழுக்காறாமை, வெஃகாமை, புறங் கூறாமை, பயனில சொல்லாமை, தீவினையச்சம், ஒப்புரவறிதல், ஈகை, புகழ் என்னும் பொருள்களைப் பத்துப் பத்துக் குறள் களா லமைத்த அதிகாரங்களையுடையது. இல்லறவியலினாலே

ஒருவன் கற்புடைய நன் மனைவியோடு இல்லறம் நடாத்தி நன்மக்கட்பே றுடையவனுய், மனக்குற்றம மொழிக்குற்றம் மெய்யால் நிகழும் ஒழுக்கக் குற்றம் முதலியன இல்லாதவனுய்ச் சுற்றத்தார்பால் அன்பும், விருந்தின் மாட்டு விருந்தோம்பு தலும், உலகத்தார் மாட்டு ஒப்புரவறிதலும், வறியார் மாட்டு ஈகையு முடையனு யிருத்தல்வேண்டும் என்பதும், இவ்வுலக வாழ்க்கைக்கு ஈண்டே பெறும் பயன் புகழ் என்பதும் அறியற் பாலன.

துறவறவியல் பன்னிரண்டு அதிகாரங்களை யுடையது. இல்லறத்திற் குயிராக அன்பினையும், துறவறத்திற் குயிராக அருளினையும் ஆசிரியர் மேற்கொண்டனர். துறவறவியலுள் அருளொழுக்கத்தையே ஒன்பது அதிகாரங்களில் (உரு-முதல்-௩௩ வரை) பலவாருக வற்புறுததினர். துறவிகளின் போலித் தோற் றத்தையும், அதற்கேற்ற புறவொழுக்கத்தையுங் கடிந்துள்ளார்.

"மனத்தது மாசாக மாண்டார்நீ ராடி
மறைந்தொழுகு மாந்தர் பலர்"

"மழித்தலும் நீட்டலும் வேண்டா உலகம்
பழித்த தொழித்து விடின்"

என்பன காண்க. தவத்திஞல் கூற்றத்தையும் வெல்லலா மென்று இவர் கூறுதலால், இவர் யோகப பயிற்சியைத் தழுவிக் கொண்டன ரென்ப.

"காற்றைப் பிடிக்குங் கணக்கறி வாளர்க்குக்
கூற்றை யுதைக்குங் குறியது வாமே"

என்னுந் திருமந்திரக் கருத்து,

"கூற்றங் குதித்தலுங் கைகூடும் நோற்றலின்
ஆற்றல் தலைப்பட் டவர்க்கு"

என்ற திருக்குறட் கருத்தினை வற்புறுத்துதல் காண்க. தவத்தி ஞல் வேண்டிய வேண்டியாங் கெய்தலாம் என்றமையால், பயன் கருதிய இறைவழிபாடு குறிக்கப்பட்டமை காண்க.

துறவறவியலில் இறுதியில் நின்ற நான்கதிகாரங்களும் உலக நிலையாமை கண்டு யான் எனது என்னுஞ் செருக்கற்று எப் பொருட்குஞ் சார்பாய் நிற்கும் பற்றற்ற மெய்ப் பொருளினைப் பற்றி நின்று கண்டு கேட்டுத் தெளிநது அதனேடு சார்புற்று

முக்குற்றமற வொழுகி, இடையறா இன்ப வாழ்க்கையாகிய பேரா வாழ்வினைப் பெற முயல்வதே புலம்புரிந்துறையும் பேரறமா மென்று அறிவுறுத்துவன.

ஊழின் வலியைப்பற்றிக் கூறும் அதிகாரத்தோடு அறத்துப்பால் முடிகின்றது.

பொருட்பாலுள் அரசன் அமைச்சன் படை நாடு அரண் பொருள் நட்பு என்பவற்றைக் கூறுமதிகாரங்கள் எழுபது உள்ளன. வடமொழி ஆசிரியர்கள்போல அரசன் முதலி யோர் கடமைகளை மிக விரித்துக் கூறாது அன்னோர்க்கு இன்றி யமையாச சிறப்பினவாய விழுமிய கொள்கைகளை மட்டுமே திரு வள்ளுவனார் செவ்விதிற் றெரித்துள்ளார். பிற நூல்களுட் கூரிய இழிவுமிக்க சூழ்ச்சிகளை இவர் யாண்டுங் கூறிற்றிலர்.

மன்னனுக்கும் மன்னுயிர்கட்கும் ஒருதலையான் வேண்டப் படுவனவாகிய கல்வி, கேள்வி, பகுத்தறிவு, குற்றநீக்கம், நல்லா ரிணக்கம், சிற்றினஞ்சேராமை, இடமுங் காலமுந் தம்வலிவும் நோக்கித் தெரிந்து செயல், சோர்வின்மை முதலியவற்றையும், அரசர்க்கே சிறக்குஞ் செங்கோன்மை, ஒற்றாடல் முதலியவற் றையும் அரசியலுள் விதந்தனர். அரசர்க்கு இன்றியமையாத வினைத்திட்பம், வினைத்தூய்மை, குறிப்பறிதல், அவையறிதல், அவையஞ்சாமை, தூது, மன்னரைச் சேர்ந்தொழுகல் முதலிய வற்றை வகுத்தோதிய பின்னர், நன்னாடு, நல்லரண் நற்படை இவற்றினியல்பும, பொருள்செயல் வகை, நன்னட்புக் கோடல், தீநட்பு விலக்கல், கயமை, பெரியோரைப் பிழையாமை என்ப வற்றையுங் குடிமை, பெருமை, மானம், சான்றாண்மை, பண் புடைமை, நாணுடைமை, குடிசெயல்வகை, உழவு முதலிய குடி கட்கு இன்றியமையாது வேண்டப்படுங் குணஞ்செயல்களையும், வாழ்க்கைக்கு இடையூறான இருமனப்பெண்டிர், கள் கவறுகள், பெண்வழிச்சேறல், நன்றியில் செல்வம், இரவு, இரவச்சம் முத லியவற்றையும் நல்வாழ்வுக் கிடையூறாகிய பிணி நீக்கும் மருந் தினையும் இனிதெடுத் தியம்பினர்.

காமத்துப்பால் ௨௫ அதிகாரங்களாற் கூறப்பட்டது. காமத்துப்பாலுட் களவுங் கற்புங் கூறுமிடத்து முதல் ஐந்ததி காரத்துள் புணர்ச்சியினையும், ஏனையவற்றுள் பிரிவினையுமே சிறப்பித்தனர். குறிப்பதற்கண் மொழியினும் நோக்கே சிறந்த தென்பதைக்

"கண்ணொடு கண்ணிணை நோக்கொக்கின் வாய்ச்சொற்கள்
என்ன பயனு மில"

என்னும் திருக்குறளினாலே ஆசிரியர் அறிவித்தனர்.

"கண்டுகேட் டுண்டுயிர்த் துற்றறியும் ஐம்புலனும்
ஒண்டொடி கண்ணே உள."

என்னுந் திருக்குறளானது பல பெரும் புலவர்களால் எடுத்தாளப்பட்டுள்ளது. சேரமான் பெருமானாயனார் ஆதியுலாவின் இதனை இனிதெடுத் தாண்டார். ஆசிரியர் மெய்கண்டாரும்,

"கண்டுகேட் டுண்டுயிர்த் துற்றறியும் ஐம்புலனைக்
கண்டொனாய் மன்னுதலைக் காண்."

என்றது காண்க.

ஆசிரியர் திருவள்ளுவனார் புதிது புதிதாகப் பெறும் அறிவினால் வரும் இன்பத்தை அரிவையை பெறுங் காம இன்பத்திற்கும், நன்னட்பின் இனிமைக்கும் உவமித்தன ரென்பது,

"அறிதோ றறியாமை கண்டற்றால் காமஞ்
செறிதோறுஞ் சேயிழை மாட்டு."

"நவிறொறு நூனயம் போலும் பயிறொறும்
பண்புடை யாளர் தொடர்பு."

என்றனர். பிரிவாற்றாமைக்கண், தலைவி கூறுங் கூற்று மிகவும் நயம்பெற அமைக்கப்பட்டது.

"செல்லாமை உண்டேல் எனக்குரை மற்றுநின்
வல்வரவு வாழ்வார்க் குரை."

'பொழுது கண்டிரங்கல்' என்னும் அதிகாரத்துள், காதல்நோய் மிக அழகாக மலருக்கு உவமிக்கப்பட்டது.

"காலை யரும்பிப் பகலெல்லாம் போதாகி
மாலை மலருமிந் நோய்."

குழலிசையானது காதல்நோயை வளர்க்குமென்னுங் கருத்தினை,

"அழல்போலும் மாலைக்குத் தூதாகி ஆயன்
குழல்போலுங் கொல்லும் படை."

என்றனர்.

உழுவலன்பின் சிறப்பினைப் புலவிநுணுக்கத்துட் போந்த ஒரு திருக்குறளால் ஆசிரியர் குறிப்பித்தனர். அதாவது

"இம்மைப் பிறப்பிற் பிரியல மென்றேனாக்
கண்ணிறை நீர்கொண் டனள்."

ஊடலின் சிறப்பினை நகைச்சுவை விளைக்குமோர் குறளால் ஆசிரியர் விளக்கினர்.

"ஊடலிற் றோற்றவர் வென்றார் அதுமன்னுங்
கூடலிற் காணப் படும்."

திருக்குறள்களின் நயங்களைப் பற்றியும் ஆசிரியருக்கும் நூலுக்குமுள்ள பெயர்களைப் பற்றியும் பல அறிஞர் கட்டுரைகளும் நூல்களும் எழுதியுள்ளாராதலின், அவற்றைப்பற்றிக் கூறாது விரிவஞ்சி விடுத்தாம்.

பதினெண்கீழ்க் கணக்கு நூல்களுள் இதனை ஒன்றாகக் கூறக்கூடாதென்பது காலஞ் சென்ற திரு. தாமோதரம பிள்ளை முதலிய சில அறிஞர்களின் கருத்து. முப்பாலென்று வேறு நூல் காணப்படாமையின் இவர்கள் கருத்தைத் தழுவிக்கொள்ள முடியவில்லை. முப்பாலென்பது திருக்குறளென்று பலரும், அஃது அன்றென்று சிலரும் கருதுகின்றார்கள். தாமோதரம் பிள்ளையவர்கள் முப்பாலென்பது வேறு நூலென்று வற்புறுத்தினர். திருக்குறளே முப்பாலாயின், அஃது எல்லாக் கீழ்க்கணக்கு நூல்களுக்கும், முற்பட்ட முதல் கீழ்க்கணக்காகும். அது நான்கு உறுதிப் பொருளையுங் கூறுவதாய் ஏனைக் கீழ்க்கணக்குகள் போல ஐந்நூறு செய்யுட்களுக்குள் அடங்காது ஆயிரத்தின் மேற்பட்ட குறள் வெண்பாக்களால் அமைந்திருப்பதால், அது கீழ்க்கணக்காகாதென்பர். திருவள்ளுவ மாலையிற் பல பாடல்களில் முப்பால் என்ற பெயர் காணப்படுகின்றது. கல்லாடர், சீத்தலைச் சாத்தனார், மருத்துவன் தாமோதரனார், நாகன் தேவனார், கோதமனார், முகையலூர்ச்சிறுகருந்தும்பியார் முதலியோர்களாற் கூறப்பட்ட பாடல்களுள் வள்ளுவர் முப்பால் என்ற சொற்றொடர் வருகின்றது. நல்லந்துவனார், கீரந்தையார் முதலியோர் பாடல்களில், முப்பாலென்ற சொற்றொடர் தனியேயுங் காணப்படுகின்றது. 'முப்பா'லென்று வேறு நூல் காணப்படாமையின், திருவள்ளுவர் நூலே 'முப்பா'லெனக் கொள்ளத்தக்கது.

பதிற்றுப்பத்து

மூலமும் உரையும்

இரண்டாம் பத்து

[பண்டிதர். திரு. ந. மு. வேங்கடசாமி நாட்டாரவர்கள்.]

(௧௧) வரைமருள் புணரி வான்பிசி ருடைய
வளிபாய்ந் தட்ட துளங்கிருங் கமஞ்சூ
ணளியிரும் பரப்பின் மாக்கடன் முன்னி
யணங்குடை யவுண ரேமம் புணர்க்குஞ்
சூருடை முழுமுத றடிந்த பேரிசைக்
கடுஞ்சின விறல்வேள் களிறூர்ந் தாங்குச்
செவ்வா யெஃகம் விலங்குந ரறுப்ப
வருநிறந் திறந்த புண்ணுமிழ் குருதியின்
மணிநிற விருங்கழி நீர்நிறம் பெயர்ந்து
மனாலக் கலவை போல வரண்கொன்று
முரண்மிகு சிறப்பி னுயர்ந்த வூக்கலை
பலர்மொசிந் தோம்பிய திரள்பூங் கடம்பின்
கடியுடை முழுமுத றுமிய வேஎய்
வென்றெறி முழங்குபணை செய்த வெல்போர்
நாரரி நறவி னாரமார்பிற்
போரடு தானைச் சேர லாத
மார்புமலி பைந்தா ரோடையொடு விளங்கும்
வலனுயர் மருப்பிற் பழிதீர் யானைப்
பொலனணி யெருத்த மேல்கொண்டு பொலிந்தநின்
பலர்புகழ் செல்வ மினிதுகண் டிகுமே
கவிர்ததை சிலம்பிற் றுஞ்சுங் கவரி
பரந்திலங் கருவியொடு நரந்தங் கனவு
மாரியர் துவன்றிய பேரிசை யிமயந்
தென்னங் குமரியொ டாயிடை
மன்மீக் கூறுநர் மறந்தபக் கடந்தே.

துறை—செந்துறைப் பாடாண்பாட்டு.

வண்ணம்—ஒழுகு வண்ணம்.

தூக்கு—செந்தூக்கு.

பெயர்—(அ) புண்ணுமிழ் குருதி.

இதன் பொருள்:

௭-௧௬. சிவந்த வாயையுடைய வேல் மாறுபடும் பகைவரை யறுத்தலால் அரிய மார்பு திறந்த புண் உமிழாநின்ற குருதியினாலே நீலமணிபோலுங் கரிய நிறத்தினையுடைய கழியின் நீர் நிறம் மாறுபட்டுக் குங்குமக் கலவைபோலுமாறு, அரணினையழித்து, மாறுபாடு மிக்க தலைமையுடனே உயரிய ஊக்குதலை யுடையையாய், பலர் நெருங்கிப் பாதுகாத்த திரண்ட பூக்களையுடைய கடம்பினது காவலையுடைய பரிய அடி துணிபடு மாறு படையினை யேவி, வென்று அடிக்கப்படுகின்ற முழங்கும் முரசினைச் செய்த, வெல்லும் போரினையும், நாரானே வடிக்கப் பட்ட கள்ளினையும், ஆரமணிந்த மார்பினையும், போரிலே வெல்லுஞ் சேனையினையும் உடைய சேரலாத!

மனாலம்-குங்குமம். போல என்றது போலுமாறு என வினையெச்சப் பொருள்பட்டு நின்றது. 'அருநிறந் திறந்த' என முன் வந்த அடைச் சிறப்பானும், 'மணிநிற விருங்கழி நீர்நிறம் பெயர்ந்து, மனாலக் கலவை போல' எனப் பின் வந்த அடைச் சிறப்பானும் இதற்குப் 'புண்ணுமிழ் குருதி' என்று பெயராயிற்று. மாற்றாரது காவன் மரந்தடிதல் மரபு. கடம்பறுத்தது கடலின் கண்ணதோர் திடரினுள் என்பது இப் பத்தி னிறுதிச் செய்யுளா னறியப்படும். வென்றி முயசியற்றுவதனை 'கடம்பறுத்தியற்றிய வலம்படு வியன்பணை' (௧௭) எனப் பின் கூறுவதானுமறிக.

௨௧-௨௫. முண்முருக்கமரங்கள் செறிந்த மலைப்பக்கத்தே தூங்குகின்ற கவரிமான் பரந்து விளங்கும் அருவியையும், நரந் தம் புல்லையும் கனவிற் காணு நிற்கும் அருந்தவர் மிக்குள்ள பெரும் புகழ் இமயமும், தெற்கின் கண்ணதாய குமரியும் ஆகிய அவற்றுக்கு இடையேயுள்ள மன்னர்களில் தம்மை மீக்கூறுவா ரது மறம் கெடும்படி வென்று,

'கவிர்ததை சிலம்பிற் றுஞ்சு' மென்றது ஆண்டு உறையும் முனிவர தாணையானே முருக்கென்னும் முள்ளுடை மரமும், "மயிர் நீப்பின் வாழாக் கவரிமா" (திருக்குறள், ௯௬௯) என்று சிறப்பிக்கப்பட்ட தன் மயிர்க்கும் வருத்தஞ் செய்யாமையால், அக் கவிர் செறிந்த சிலம்பின்கண்ணே இனிதாக உறங்குமென்ற வாறு. 'அருவியொடு நரந்தம் கனவு' மென்றது அவராணை யானே பிறவிலங்கானும் மககளானும் வருத்தமின்றிப் பகற் காலத்துத் தான் நுகர்ந்த அருவியையும் நரந்தத்தையுமே கனவி னும் காணு மென்றவாறு. குமரியொடு வென்னும் ஒடு-எண் ணொடு. அவ்வென்னும் வகரவீற்றுப் பெயர் ஆயிடையென முடிந்தது. மன் என்பது அரசென்பது போல் அஃறிணைச் சொல். மண்களில் மீக்கூறு மென்க. 'மதந் தப' என்பது பாடமா யின், வலிகெட என்று பொருள் கூறுக.

௧-௬. மலையை யொக்கும் அலைகள் பெரிய திவலைகளாக உடையும்படி காற்றுப் பாய்ந்து உழக்கிய அசையா நின்ற பெரிய நிறைந்த சூலினையும், மிக்க பெரிய பரப்பினையும் உடைய கரிய கடலை யடைந்து, பிறரை வருத்துந் தொழிலையுடைய அவுணர்கள் தமக்குப் பாதுகாவலாக உண்டாக்கிய அச்சம் விளைக்கும் மாவினது பரிய அரையினைத் துணித்த பெரிய புகழினையும், கடிய சினத்தினையும், வெற்றியினையுமுடைய முருகவேள் களிற்றினை யூர்ந்தாற்போல,

பிசிர்-பிசிராக. கமஞ்சூல்-நிறைந்தநீர்; சூல்போறலாற் சூலெனப்பட்டது. 'அவுண ரேமம் புணர்க்கும் முழுமுத'லென்றது அசுரரெல்லாரும் தம்முட னெதிர்ந்தார் வலியிலே பாதி தங்கள் வலியிலே கூடும்படி மந்திரங் கொண்டிருந்து சாதித்த மாமர மென்றவாறு. அது கீழ் நோக்கிய தெனபது 'கவிழிணர் மாமுதல்' என முருகாற்றுப் போந்தமையா னறியப்படும். 'சூருடை முழுமுதல்' எனபதற்குச் சூரவன்மாத் தனக்கு அரணாகவுடைய மாவின் முதலென்றும், சூரணுதற் றன்மையை யுடைய மாவின் முதலென்றும் பொருள் கூறினும் அமையும். சூரவன்மனே மாமரமாய் நின்றானென்று புராணங் கூறுதலின் சூரணுதற் றன்மையையுடைய மாவெனல் சாலுமாறறிக. முன்னிப் புணர்க்கும் முதல் என முடிக்க. முன்னித் தடிந்த என முடிப்பினும் அமையும்.

௧௭-௨௰. மார்பின்கண் நிறைந்த பசிய தாரும் ஓடையும் விளங்கா நின்ற வென்றிமிகக கோட்டினையுடைய பழிக்கப்படாத யானையின் பொன்னணிந்த எருத்தத்தின்மேல் இவர்ந்து விளங்கிய நினது பலரும் புகழுஞ் செல்வத்தை இனிதாகக் கண்டேமென்க.

விளங்கும் யானை எனவும், நின் செல்வம் எனவும் கூட்டுக.

(௧௬) சேரலாத, (௨௫) மறந் தபக் கடந்து (௬) வேள்களிறூர்ந்தாங்கு (௧௪) யானை (௧௬) யெருத்தமேல் கொண்டு பொலிந்த நின் (௨௰)பலர் புகழ் செல்வம் கண்டிகு மென மாறிக் கூட்டி வினை முடிவு செய்க.

இனி, முருகவேள் மாக்கடன் முன்னி மாவினைத் தடிந்து களிறூர்ந்தாங்குஇவனும் கடலின்கண்ணே கடம்பினைத் துமித்து யானை யெருதத மேல்கொண்டு பொலிந்தனன் என உவமங் கொள்ளலுஞ் சாலும்.

இதனால் அவன் வெற்றிச் செல்வச் சிறப்புக் கூறியவாறாயிற்று.

(தொடரும்.)

திருவள்ளுவர் ஓர் மரநூல் பேராசிரியர்

[திரு. அ. மா. முத்தைய நாட்டாரவர்கள்]

(௫௮௫ - ம் பக்கத் தொடர்ச்சி)

வித்தில் மெய்யறிவு காட்டல்:

இனி, திருவள்ளுவர் எடுத்துக் காட்டிய உவமானத்தை ஒரு சிறிது பொதுவகையிலாராய்வாம். இங்கு எடுத்துக் காட்டிய வித்து, ஒடுங்கிய நிலையிலுள்ள ஒன்றாகும். அந்நிலையிலுள்ள ஒருவனை யாராயுங்கால், அவன், ஐம்புலவுணர்ச்சி நீக்கிச் சொப்பனதானத்திலுள்ள நிலையை எடுத்துக்கொள்ளுதலே மிகவும் மேன்மையுற்றதாகும் இந்நிலையில், ஒருவனிடம் (1) உயிருண்டு (2) மூச்சுண்டு (3) அகவுடலியக்கமுண்டு (4) தூக்கம் நீங்கியபின் விழிப்புண்டு. இவை எவருக்கும் நன்கு தெரிந்தனவே. அஃதேபோல் ஒரு வித்தை யாராயுங்கால், அதனிடமும் மேற்கண்ட குறிப்புகளும் விளங்குவதை நன்கறியலாம். காட்டாக:—

(1) ஒரு வித்தினிடம் உயிருண்டு:—வித்தினிடம் உயிருண்டென்பது நம் பண்டைத் தமிழருக்கு நன்கு தெரிந்ததொன்றே. நீரின் வழியாய், முளைக்குங்கால், உயிர் உள்செல்கின்றதென்பது பிற்காலத்தார் கண்ட நுண்ணூற்கு மாறுபட்ட கருத்து. நம் திருவள்ளுவர் கருத்து மஃதன்று வித்து காலத்தில் விதைக்கில் முளைக்கும்; நீண்டநாள் வைத்திருந்து பின் விதைக்கின் அது முளைக்காமையுமே தக்க சான்றாகும். நீண்டகாலம் வைத்திருப்பதால் வித்திலுள்ள உயிர் இறந்துவிடுதலே முளைக்காமைக்குக் காரணமாகும். இஃதை நீண்ட பழக்கத்தால் குடிகள் வித்தைத் தேய்த்தும், நுகர்ந்தும், தின்றும் பார்த்து வெகு இலகுவாய்க் கண்டுபிடித்து விடுவார்கள்.

(2) மூச்சுண்டு:—ஒரு வித்தும் மற்றைய எல்லாவுயிர் போலும், மூச்சு இடைவிடாது வாங்கிக்கொண்டிருக்கின்றது. நிலம் நீர் இவ்விடங்களில் வசிக்கும் எவ்வுயிரும் மூச்சின்றேல் நசிக்கும். சில வித்துக்களைத் தண்ணீரில் அமுக்கினால், சிறு குமிழிகள், வெளிவருவதைக் காணலாம். வித்தினின்றும் வெளிவந்த காற்றினாலாக்கப்பட்டதே இக்குமிழிகளாகும். அங்ஙனம் வெளிவரும் காற்றைக் கவர்ந்து ஆராயின், வித்தினின்றும் வெளிவந்த காற்றென்பது நன்குபுலனும்.

(3) அகவுடலிலியக்கமுண்டு:—வித்தினுள்ள மூலம் உயிரோடு கூடியதென முன் காட்டினோம். அம்மூலம் உயிருடனிருக்க அதற்கு உணவுப் பொருள் வேண்டும். மூலத்தின் ஒரு பகுதியில் (பருப்பில்) வித்திற்கு வேண்டிய உணவுப்பொருள் அமைக்கப்பெற்றிருப்பதைக் காணலாம். இவ்வுணவுப்பொருள்கள், மிகவும் சிறிதுசிறிதாய் உட்கொள்ளப்படுகின்றது. இதற்கு இடையறுவியக்கம் வேண்டும். இவ்வியக்கமே அகவியக்கமாகும்.

(4) தூக்கம் நீங்கியபின் விழிப்புண்டு:—விதைத்த பின் வித்து முளைக்க வாரம்பிக்கின்றது. முளைப்பதற்கு வேண்டிய நிலம் நீர் சூடு முதலிய புறநிகழ்ச்சிகள் ஏற்றவாறு உண்டேல் முளைக்கும். வித்தின் மூலம் ஒடுங்கி நிற்றலால் (Dormant Stage) அது முளைத்தல் தூக்கத்தினின்று விழிப்பதற்கு எடுத்துக் காட்டின் அது மிகையாகாது.

(5) விழித்தகாலை ஐம்புலவுணர்ச்சியுண்டு:—வித்துமுளைத்த காலையில், மரமாகவோ புல்லாகவோ வளரும். அங்ஙனம் வளருங்கால் அதற்கு ஐம்புலவுணர்ச்சியுண்டு. ஐம்புலவுணர்ச்சியுள் வாய்ப்பட்டதே புறநிகழ்ச்சியாகும். புறம் ஐம்பூதத்தாலாக்கப் பட்டது ஆதலின் ஐம்புலவுணர்ச்சி, ஐம்பூதத்தையும் அவற்றின் நிகழ்ச்சியையு மறிவதாகும்.

ஐம்பொறியும் ஐம்புலனும் ஐயறிவும்

தாவரங்களிடத்திற் சிறப்புற்ற பொறிகள் காணப்படவில்லை. ஆகிலும் இவைகள் தங்கள் உடலையே துணையாகக் கொண்டு புறமுணரும். சிறப்புற்ற பொருள்கள் கொண்டே புறமறியவேண்டுமென்பது அவசியமில்லையென்பதைப் பற்றி மேல் விரித்துக் கூறினும். என்றாலும் தாவரங்கள் ஐம்பூதங்களை யறிகின்றனவென்பதை ஒரு சிறிது விரித்துரைப்பாம்.

(1) நீர்:—நீரை மரங்கள் உணருமென்பது யாவரு மறிந்தவொன்று. திருவள்ளுவரும்

"விசும்பிற் றுளிவீழி னல்லான்மற் றாங்கே
பசும்புற் றலைகாண் பரிது"

என்று கூறியுள்ளார்.

(2) நிலம்:—மரங்கள் நில மறியும். உரனிட்ட நிலம் சால விளைவதும், உரனிடா நிலம் குறைந்து விளைவதும் உலகில் குடிகளுக்கு நன்கு தெரிந்ததொன்று. திருவள்ளுவரும்

'நிலத்திற் கிடந்தமை கால்காட்டும் காட்டும்
குலத்திற் பிறந்தார்வாய்ச் சொல்'

என்று கூறுகின்றார்.

(3) காற்று:—மரங்கள் காற்றை யுணருகின்றதென்பது பள்ளிச் சிறார்களுக்கும் தெரிந்ததொன்று. மரத்தடியில் இரவில் உறங்கக்கூடாதென்பதும், பகலில் உறங்கலாமென்பதும் மரங்கள் காற்றை யுட்கொண்டு பின் வெளிவிடும் மாறுபட்டதும் மாறுபடாததுமான காற்றின் குணம் கருதியன்றோ? நிற்க, ஒரு சிறு போத்தைத்தண்ணீர் நிறைந்துள்ள ஒரு சாடியிலமுக்கினால், சிலமணிநேரங்களிற் போத்தினின்று சிறு காற்றுக் குமிழிகள் வெளிவருவதைக் காணலாம். இது போத்துத் தாள் உட்கொண்ட காற்றை வெளிவிடுவதினாலன்றோ? காற்றை யுட்கொள்ளவும், காற்றின் நிகழ்ச்சிக் கேற்பத் தங்கள் நிகழ்ச்சியை மாறுபடுத்திக்கொள்ளவும் ஏற்றவாறு மரங்கள் சில சிறப்புற்ற உறுப்புகள் அமைக்கப்பெற்றிருக்கின்றன தாமரையின் தண்டுகள் போலியாய்ப் பல குழாய்களுட னிருப்பதும், நெல்லின் வேரும் மென்மையாய்ப் பல குழாய்களுடனிருப்பதும் அவைகள் வேண்டும் காற்றை ஏற்று வேண்டுழி பயன்படுத்தப் பொதிந்து வைப்பதற்கன்றோ?

(4) தீ:—மரம் தீயை யுணரும். கதிரவனிடமிருந்து உலகிற்குச் சத்தியை யளிப்பது மரங்களேயாகும் மரங்களிலவேல் விலங்குகள் சத்தியற்று நசிக்கும். என்னை? விலங்குகள் தாங்களே கதிரவனிடமிருந்து சத்தியை ஏற்கு மாற்றலற்றனவாசலின் இப்பகுப்பை இரண்டு உட்பிரிவாகப் பிரித்துணரவேண்டும். அவைகள் (a) மரம ஒளியை யுணரும்; (b) மரம சூட்டையுணரும் என்பதே. (a) கதிரவனொளியை, மரங்கள் உவப்புடன் கீழ்முகம் நோக்கித் தங்களிலையால் ஏற்பதைத் தெளிவுறக் கண்டும் மரங்கள் ஒளியை யுணராவென்றலென்னை? திருமணப்பந்தலில் விதைத்த நவதானியம் முளைத்து மஞ்சள் நிறமுடனிருப்பதை யாவருமறிவர். வெளியில் முளைத்தவைகளே பசுமையாயிருக்கின்றன. பந்தலுள் மஞ்சளாயிருக்கும் சிறு செடிகள் வெளியில் சிலமணிநேரங்களிருக்கப்பெறின் பசுமையாகின்றன. சூரியன் கதிருற்ற விடத்தும், கதிருறாவிடத்தும் செடிகள் இவ் வேற்றுமைகள் காட்டுதலெதனால்? சூரியன் கதிரை ஏற்றதினாலும் ஏற்காததினாலுமன்றோ? ஆதலின் மரங்கள் ஒளியை யுணராது என்பதென்னை?

(6) மரம் சூட்டை யுணரும்:—காலையிலும், நடுப்பகலிலும், மாலையிலும், மரத்தைச் சற்று உற்றுநோக்கின் அது

காட்டும் வேறுபாடுகள் எங்ஙனம் புறத்தில் மாறி நிகழும் சூட்டை யளந்து காண்பிக்கின்றதென்பதை யுணரலாம். சில மரங்களில் இவ்வுணர்வு மிக்கும், சில மரங்களில் இவ்வுணர்வு குறுகியுங் காணுறும். இஃதே விரிக்கிற் பெருகும். நிற்க, நக்கீரர் தானருளிய திருமுருகாற்றுப்படையில்,

"உலகமுவப்ப வலனேர்பு திரிதரு
பலர்புகழ் ஞாயிறு கடற்கண் டாஅங்கு"

என்று கூறியதும், மணிவாசகர் திருப்பள்ளியெழுச்சியில் 'அருணனிந்திரன் திசையணுகினன், நயனகடிமலர்மலர, வண்டுகள்முரல்வன, பூங்குயில்கூவின, கோழிகள்கூவின, பறவைகளொலித்தன, நமக்கு விருப்பொடு ஒருப்படுகின்றது' என்று கூறியதும், சூரியன் கதிர் பூமியின் மேற்புறம் வீசுமுன்னமே அக்கதிரவன் சூட்டை எல்லாவுயிரும் எங்ஙனமுணர்ந்து மறித்தும் ஆனந்திக்கின்றன என்பதைத் தெளிவுறுத்தும். இஃதேயன்றி, மரங்கள், இடி, மின்னல் இவைகளை யுணர்ந்து அவைகளுக் கிணங்கத் தங்கள் நிகழ்ச்சிகளை எங்ஙனம் மாறுபடுத்துகின்றனவென்பதை டாக்டர் ஜே. ஜி. போஸ் நீண்டவாராய்ச்சி செய்து விளக்கியுள்ளார். மேலும் அவர் காட்டியுள்ள சில குறிப்புகளில், மரங்கள் எங்ஙன மின்சாரசத்தியை, கம்பியின் மூலமும், கம்பியில்லாமலும் ஏற்று அதற்கேற்றவாறு தங்கள் நிகழ்ச்சியை மாற்றிப் பதிலளிக்கின்றனவென்பதை யுணருங்கால் எவ்வுயிரும் பராபரன் சந்நிதியுமாகையால், சிறப்புற்றதும் சிறப்புறாததும் சிலபொதுவான ஒத்த குணங்களுடையதாயு மிருக்க வேண்டுமென்பதை வலியுறுத்துகின்றது. மேற்கூறியவாற்றால் மரங்களும், ஐம்புலவுணர்ச்சியை நன்கு உணர்கின்றனவென்பதும், அவ்வுணர்ச்சியின் பெருக்கம், சிறப்புற்ற உயிர்க்கேற்றவாறு பெருகியோ குறுகியோ விருக்கின்றதென்பதும் வெளிப்படை.

நம்தமிழ் நாட்டில், உரையாசிரியர்களும், சொற்பொழிவாளர்களும் மலிந்து, ஓரறிவுயிர்முதல் ஆறறிவுயிரீறாகவென உபயோகப் படுத்துவதை எளிதில் காணக்கூடும். அவ்விடங்கள்தோறும் ஓர் அறிவுயிர், இரண்டறியுமுயிர் எனபொருள் கொண்டே விளக்கப்படுகின்றன. மேற்காட்டிய காரணங்களால் எல்லா உயிரும் ஐயறிவுயிரே. ஆகையால், ஓரறிவுயிரென்ற காலையில், எந்தவொன்றை யறியுமுயிர் எந்த விரண்டையறியுமுயிர் என்னும் கேள்விக்கிடனாய், அவைகளுக்குத் தகுந்த பொருள்கூற வியலாததாய், நுண்ணூற் கருத்துக்கு முரண்படு

வதையும் காண்க. தொட்டால்மட்டு மறிவது ஓரறிவுயி ரென்னில், எவ்வுயிரும் புறத்தோடு கூடிய காலையில் புறமுணரு மேயன்றி, கூடாதவழி ஒன்றையுமுணராது. இவ்வுண்மையைச் சிவஞானபோதத்தின் பிற்பகுதியிற் காண்க. நிற்க, கண்ணில் ஒளிபட்ட காலையே கண் காணும்; காதில் ஒலி பட்ட காலையே காதுகேட்கும்; நாற்றப் பொருளமைந்த காற்று மூக் கிற் பட்ட காலையே மூக்கு நுகரும். இங்ஙனமே மற்றவைகட் கும் பொருந்துதல் காண்க. தொட்டகாலையில் பொறிக ளுணருவதால் எல்லாம் ஓரறிவுயிரேயாகும்போலும்! பின் நம் பண்டைத் தமிழ் மக்கள் ஓரறிவுயிர் ஈரறிவுயிரெனக் கூறிய தென்னையோவெனில் கூறுதும். இவ்வுலகின் பல்லுயிர்த் தொகுதியை முறைப்படுத்தத் துணிந்த நுண்ணூலாசிரியர்கள் உயிர்கள்மாட்டுக் கண்ட புற உறுப்புகள் கொண்டே முறை (Classification) செய்திருக்கின்றனர். தற்கால நுண்ணூலா சிரியர்கள், உயிர்மாட்டுக் கண்ட, பல ஒற்றுமைப் பட்ட உறுப்பு கள் கொண்டே முறை செய்கின்றனர். ஆனால் நம் தொல்காப்பி யர், உயிர்மாட்டுப், புற மறிய அமையும் சிறப்புற்ற பொறிகள் கொண்டே பல்லுயிர்த் தொகுதியை முறை செய்தனர். இப்பல் லுயிர்த் தொகுப்பில், ஒவ்வோருயிரும், தன்னையும் தன் குலத் தையும் காத்துக்கொள்ள, மற்ற ஒவ்வோருயிருடனும் இடை விடாப் போர் செய்கின்றது. (Struggle for existance.) இதின் காரணமாய், ஒவ்வோருயிரும் தன்னைப் பிறவுயிரினின்று காத் துக் கொள்ளவும், பிறவுயிரைத் தோல்வி செய்யவும் என்றும் சிறப்புறும் வழியிலேயே முயல்கின்றது (Evolution). ஆகையால் ஒவ்வோருயிரின் புறவுறுப்புகளும் அகவுறுப்புகளும் ஒவ்வொரு தொழிலையும் தனித்தனி சிறப்புற்ற வழியில் நடத்தச் சிறப்புறு கின்றன. அம்முறையில் உயிர்மாட்டுச் சிறப்புற்ற பொறிகள் விளக்கம் பெறும் (Specialized Organs.) இம்முறையில் தனித் தனிச் சிறப்புற்ற பொறிகள் தோன்றி விளங்குவதையே தொல் காப்பியனார் முறைப்படுத்தி, ஓரறிவுயிர் இரண்டறிவுயிர் என முறைப்படுத்தியுள்ளார். அந்தக் காரணங்கள் விலங்குகளின் மேற்பட்ட நிலையிலுள்ள உயிர்மாட்டுத் தோன்ற வாரம்பித்த லால், ஆறறிவுயிர் என்பது எல்லா வுயிருக்கும் பொதுவன்று. இஃதை ஒரு தனிக் கட்டுரையி லாராய்வாம். இக் காரணம்பற் றியே நம் திருவள்ளுவர் இம்முறையைக் கொண்டாரில்லை. அவர் தன் திருக்குறளில் இக்குறிப்பை எங்கும் காட்டாததே தக்க சான் றாகும். திருவள்ளுவரைப் பின்பற்றி நம் மணிவாசகரும், இக் கொள்கையை, தான் வழங்கும் அமையம் பல வேற்பட்டிருந் தும் கையாளவில்லை. தொல்காப்பியர் காட்டிய இம்முறையைக் குற்றமென்று நம் திருவள்ளுவர் கொண்டாரில்லை. இம்முறையும்

பொருத்த முடையதென்பது நம் திருவள்ளுவர் கருத்தாம். தொல்காப்பியர் கொண்ட இம்முறையும் நுண்ணூற்கு மிகப் பொருத்த முடையதே. இஃதையே, சில மாறுபாடுகளுடன் தற்கால நுண்ணூ லாராய்ச்சிக்காரர்கள், கையாண்டு வருகிறார்கள் என்பதே நம் தொல்காப்பியர் பண்டை நுண்ணூலாராய்ச்சிக் கருத்தை மிகவும் விளக்கும். தொல்காப்பியர் நுண்ணூ லாராய்ச்சியின் பெற்றியை அமயம் நேர்ந்துழிப் பின் ஆராய்வாம். ஆகிலும் நம் திருவள்ளுவர், தான் எடுத்துக் கொண்ட நூற்கிணங்க இம்முறை வேண்டற்பாற்றன்றாகலானும், தான் வேறொரு நிலை(அகம்)யினின்று இப்பல்லுயிர் தொகுப்பையாராய்ந்து உள்ளாராதலானும் அந்நிலைக்கேற்ப, இப்பல்லுயிர்த் தொகுதியை மரம் விலங்கென இருவகையுளாய் வகுத்து, பின் விலங்கையும் பல் வகையில் முறை செய்து சென்றிருக்கின்றார். இஃதை இங்கு விரித்தாற் பெருகும். இம்முறையையும் தொல்காப்பியர் காட்டியுள்ளார். இதுகாறும் ஒரு வித்துக்கும், ஐந்தும் காத்த ஒருவனுக்கும் உள்ள ஒற்றுமைகளை ஒருவாறு பொதுவகையி லாராய்ந்தோம். இனி ஒரு வித்தைச் சிறப்பாகச் சிறிது ஆராய்ந்து, அக்கருத்துடன் திருவள்ளுவர் கருத்துச் ஒத்திருக்கின்ற தென்பதைக் காட்டுவாம். (தொடரும்)

விருந்தோம்பல்

[அ. சிதம்பரநாதனவர்கள் B. A.]

உலகில் மானிடராய்ப் பிறந்தார் யாரும் இன்பந் துய்த்தலிலே விருப்பமுடையவரேயன்றி வெறுப்புடையவரல்லர். சிலர் சிற்றின்பத்திலும் வேறு சிலர் பேரின்பத்திலு மிச்சைகொள்ளலுலகவியற்கை. அவ்வா றிச்சை வைப்போர் ஒவ்வொருவரும் ஏனையோரைப் போன்று இவ்வுலகில் அவர்தம் வாழ்நாள் மிகச் சிலவே என்று அறிந்துகோடல் வேண்டும். நேற்றிருந்தவன் இன்றைக் கிறந்தானென்னும் பெருமையையுடைய இவ்வுலகிற் கற்றோரு மற்றோரு மறிந்து செயற்பால அறச் செயல்களுள் விருந்தோம்பலென்பது தலை சிறந்ததாகும். இல்லற நெறி நிற்போர் யாவரும் விருந்தினரைப் பேணவேண்டியது அவர தங் கடன். இது குறித்தே தெய்வப் புலமை நாயனாரும் "இருந்தோம்பி யில்வாழ்வதெல்லாம் விருந்தோம்பி வேளாண்மை செய்தற் பொருட்டு" எனக் கூறியுள்ளார். இல்லறம் பொருளின்விற் கேற்பச் செய்யப்படுதலான், அவரவர் தத்தமக்கியன்ற

வளவு இம்மியே யாயினும் ஈயக்கடவர். இசையும் பொருளைதை யுமில்லையென்னாது தருதலே போற்றத் தக்கது. கைத்துண்டாம் பொழுது கரவாது பகுத்துண்ணக் கடவர். இதை

"முன்னரே சாநாண் முனிதக்க மூப்புள
பின்னருமப் பீடழிக்கு நோயுள—கொன்னே
பரவன்மின்! பற்றன்மின்!! பாத்துண்மின்!!! யாதுங்
கரவன்மின் கைத்துண்டாம் போழ்து"

என்பதாலறியலாம்.

கைத்துண்டாம் போழ்து கரவாது பொருளைப் பகுத்துச் செலவிடும் விதம் ஆறு. அவையாவன தென்புலத்தார்க்கும் தெய்வத்திற்கும விருந்திற்கும் ஒக்கலுக்கும் தனக்கும் மன்ன னுக்கும ஒவ்வோர் ஒத்த பகுதியாம். பழிக்கஞ்சிப் பொருளைச் சம்பாதிக்கு மொருவன் இவ்வாறு பங்கிட்டு உண்பானாயின், அவன் சந்ததிக ளென்றுங் குறைதலில்லை. அவனன்புடன் விதித் தனசெயின், துறவறம் புகுந்தடையும் பலனினு மிகப்பெறுவன். இவ்வாறு பகுதிகளில் மன்னனுக்குக் கொடுக்கும் பகுதி அம் மன்னனால் ஒவ்வொருவருந் தாந்தாம் அடையும் சில நலன் களைக் கருதி யளிக்கப்பட வேண்டியிருப்பதாலும், ஒக்கலுக்குந் தனக்கும் செலவிடப்படும் பொருள் உண்மையிற் பிறர் பொருட் டுச் செலவிடப்படுத லில்லையாதலாலும், தென்புலத்தார்க்குந் தெய்வத்திற்குமென்று நினைத்துச் செய்யப்படுபவை அவ்விரு பகுப்பாராலுங் கண்கூடாக வேற்கப்படுத லில்லையாதலாலும, ஆனால் விருந்தினர்க்குச் செய்பவையோ தன்னையன்றிப் பிறரைச் சேர்வதோடன்றிக் கொள்வோரை நேரிற் கண்டு கொடுக்கக் கூடியதாயிருப்பதாலும் விருந்தோம்பல் சாலச் சிறப்புடைத் தாகவே கருதப்பட்டு வருகிறது.

அத்தகைமைத்தாய விருந்தோம்பலை மேற்கொள்ளுவதற்கு மனைவியின் நற்குணமே நற்றுணையாவது. பொருள் இல்லா விடினுமில்லாள மனம் வைப்பின் நொடிப் பொழுதிற் பல விருந்தினரைப் பேணக்கூடும். அவள் மனமில்லையாயின் இட மிருந்தும பொருளிருந்தும் அவரைப் பேணவியலாது.

"இருந்து முகந்திருத்தி யீரோடு பேன்வாங்கி
விருந்துவந்த தென்று விளம்ப—வருந்திமிக
ஆடினாள் பாடினா ளாடிப் பழமுறத்தாற்
சாடினா ளோடோடத் தான்"

என்றபடி திருவிளையாட்டுகள் புரியக்கூடிய பெண்ணை நாயகியாக ஒருவன் பெற்றிருப்பி னென்பயன்? அம்மனையாளிற் பேய் நன்றன்றே! மாண்புடை மனையாளைப் பெற்றவனே விருந்தோம்ப முற்படுங்கால் "இருக்கை யெழலு மெதிர் செலவு மேனை விடுப்ப வொழிதலோ டின்ன" வற்றைக் குன்றா வொழுக்கமாக் கொள்ளவேண்டும்.

இவற்றினும் அவனுக்கு இன்றியமையாத தின்சொல்லாகும். அவனிட மின்சொல் லின்றேல் அவன் யாது புரியினும் பயன் பெறான். "அகனமர்ந் தீதலி னன்றே முகனமர்ந்து இன் சொலனாகப் பெறின்" அல்லவா! இன்னாரினையர் எமர் பிற ரென்று பாராது யாவர்மாட்டு மின்சொற் கூறவேண்டியதே யாயினும், விருந்தினர்மாட்டு அவை சிறப்பாக வழங்கப் படவேண்டும். ஏனெனின், இன்சொற் கேளா விருந்தினர் விருந் துண்ண மறுப்பினும் மறுப்பர். முகமலர்ச்சி காணாதவிடத்தே புண்ணுறும் நெஞ்சுடை விருந்தினர் இன்சொற் கேளாவிடத் திருக்கவுமொப்புவரோ! அனிச்சப் பூவைக் கையிலெடுத்து மூக்கினால் முகர்ந்தால் வாடும்; ஆனால் விருந்தினரோ பிறர் தூரத்தி லிருந்து பார்க்கும் பார்வையினாலேயே வருத்தமடைவர். ஆதலால், விருந்தினர் வரின் அவர்க் கின்முகங் காட்டி, இன்சொற் கூறி நற்சோறு படைக்கவேண்டியது இல்வாழ்வோர் கடன்.

அவ்வாறு அன்னமிடும்போது விருந்தினரைத் தனியே புறக்கடையிலோ வெளிவாயிலிலோ வைத்துண்ணச் செய்தல் தகாது. இதுபற்றியே திருவள்ளுவரும் "விருந்து புறத்ததாத் தானுண்டல் சாவா மருந்தெனினும் வேண்டற்பாற் றன்று" என்று கூறினார்போலும்! உண்ணப்படும் பொருள் தேவாமிர்த மாயிருந்தாலும் வந்த விருந்தினர் கடைப்புறத் துண்பதாகவுந் தானடுப்பகத்துண்டல் விரும்பத்தக்கதல்ல. (வெறுக்கக்கூடியது) என்ற பொருளில்தான் இக்குறட்பா வரையப்பட்டதுபோலும்! புறப்பாட்டிலும் "இந்திராமிர்த மியைவதாயினு மினிதெனத் தமிய ருண்டலுமிலரே"* என்று கூறப்பட்டுள்ளது. தேவாமிர்தமே படைக்கப் பெறினும் இனிதாயிற்றே யென்றெண்ணித் தன்னுடனுண்ணா வீட்டில் தனியாக உண்டலுமிலரே எனப் பொருள் கூறினுமமையும். ஆதலால், விருந்தினராய் வரும் 'தனக்கென முயலா நோன்றாட் பிறர்க்கென முயலும் பெரியார் தனித்துண்ண மறுப்பரல்லவா?' அக்காலை விருந்தோம்புவோனும் உடனுண்ண வேண்டாமா? அவனுண்ணாவிடினும் அவன் மக்களையாவ துடனுண்ணும்படி செய்யவேண்டாமா? அன்றியும், விருந்தினராய் வருவோர் மானத்தை இழந்தவரல்லர்

மானங்கெடவரின் உயிர் நீக்கும் பெற்றிவாய்ந்த பெரியார் ஒருவேளை யுண்டிக்காக மானத்தை யிழந்து புறக்கடையில் வைத்திடப்படு முண்டியை யேற்றுக்கொள்ள உடன்படுவர். அங்ஙனங் கடைப்புறத்து வைத்தன்னமிடும் செல்வர் தொடர்பு எற்றுக்கு ?

"யாமாயினெம் மில்லங் காட்டுதுங் காணவே
தாமாயிற் கற்பழியு மென்பார்போ—ஞணிப்
புறங்கடை வைத்தீவர் சோறு மதனல்
மறந்திடுக செல்வர் தொடர்பு."

என்பதைக் காண்க.

அதான்று, 'மருந்தேயாயினும் விருந்தோடுண்' என்ற பழமொழியை யுற்றுநோக்கினு முண்மை புலனுகாது போகாது. இங்கு மருந்தென்றது சாவாமருந்தினை. சாவா மருந்தை யுண்பதாயிருந்தாலும் விருந்தினருடன் உண் என்பதிதன் பொருள். 'விருந்தோடுண்' என்றதனால் விருந்தினரது பக்கத் தமர்ந்து அவருடன் கூடியுண் என்ற பொருள் கொள்ள இடமுண்டு. சிலர் பழமாதியவற்றைப் பிறர் பார்க்க வுண்பர். வேறு சிலர் கமண்டலத்தைக் கையாலோ துணியாலோ மறைத்துத் தண்ணீர் பருகுவர். சிற்றுண்டியை மறைத்தும் மறைக்காமலு முண்பார் சிற்சிலருண்டு. அன்னமெனின், பெரும்பாலோர் மறைத்தேயுண்பர். அன்னுர் சாவாமருந்தெனின், இருந்த விடத்தைக்கூடக் காட்டாதுண்பர். ஆனல், சாவாமருந்தேயாயினும் பிறர் பார்த்தலினுலோ பிறருட னுண்ணலினுலோ வரு மிழுக்கோ பழியோ ஒன்றுமில்லை. அவ்வாறிருக்க அன்னத்தையாதல் தண்ணீரையாதல் மறைத்துக்கொண்டும் மூடிக்கொண்டு மொளித்துக்கொண்டும் உண்ணவேண்டியதில்லை என்றே கூறப் பட்டிருக்கிறது என்பது என் சிற்றறிவுக்கெட்டியவாங்குப். பிறப் பினு லொழுக்கத்தினு மறிவினுலும் மனிதவகுப்பினுந் தாழ்ந்தவையாகக் கருதப்படும் பூனை எலி எறும்பு ஈ முதலிய வுயிர்களுக்குள்ள வுரிமைகூட நாம் நமது நாட்டு ஆறறிவுயிர்களுக்கு அளிக்க மறுக்கிறோமென்றால், அதனினு மிக்க கொடுமையுண்டோ? பூனை எலி முதலியவை கொண்டாட்டம்போடு மடுப் பகத்து நாம் நமது விருந்தினரையோ மற்ற மக்களையோ அழைத்துச் செல்ல மறுப்பதென்கொல்?

விருந்தோம்ப லென்னுமறத்தை வேள்வியென்பதாக தெய்வப்புலமை நாயனுர் கூறியிருக்கவும், அவ்வேள்வியிற்கூட வேள்வியேற்பான் வரும் விருந்தினர் நெஞ்சு புண்பட அவரைப்

புறக்கடையில் வைத்தன்னமிட்டு நாம் பின்னரோ முன்னரோ அடுப்பகத்துச் சென்றுண்ணலென்பது சிறந்ததன்று. விருந்தோம்பல் அன்பினடியாகப் பிறத்தலுண்மையாயின், அவ்வன்பு காரணமாய் நிகழ்த்தப்படுஞ் செய்கைகளில் வேற்றுமை அறவே யொழியவேண்டும். அன்புடையார் தமதென்பையும் பிறர்க்குக் கொடுப்பர் என்று கூறப்பட்டிருக்கும்பொழுது அவர் சிறிது நேரம் விருந்தினருட னிருந்துண்ண மறுத்தல் தகுதியோ! விருந்திடுவோர் உடனுண்ணு தளிக்குமுண்டி யறுசுவையுடையதே யாயினுஞ் சுவையிலதாயும் உண்டிச்சாலையில் விற்கப்படுமுணவிற் கொப்பானதாயுந் தோன்றும். விருந்தினராய் வருஞ் சான்றோர் தமியராயுண்ண விரும்பார். ஆதலால், விருந்திடுவோர் விருந்தினரை வரவேற்று இன்சொற் கூறி யுடனழைத்துச் சென்று உடனிருந்தன்னம் படைக்கச் செய்துண்ணக்கடவர். விருந்தினரைத் தலைவாயிலில் வைத்தன்னமிட்டனுப்பிவிட்டுத் தாமடுப்பகத்துச் சென்று உண்ணுதிருக்கக் கடவர். 'விருந்து புறத்ததா' எனவரும் குறட்பாவு மிக்கருத்துப் பெற்றதேபோற் றோன்றுகிறது. திருவள்ளுவர் கருத்து யாதோ ஒருவருமறியோம்; அறிவதுமரிது. பரிமேலழகர் எழுதிய வாங்கே திருவள்ளுவர் கருத்தாஞ் சென்றது என்று கூறுவது விரைவில வாயையடக்க வுதவும வாய்ப்பூட்டேயன்றி உண்மையைக் கண்டறிய வுதவுவதன்று எல்லோரும் ஓர்ந்தாய்ந்து மெய்பபொருள் காண விரும்புவதே அறிவுடைமையாகும்.

வரும் விருந்துடன் கூடவுண்பது பரிமேலழகர்க்கு முடன்பாடென்பது அவர் 'செல் விருந்தோம்பி வருவிருந்து பார்த்திருப்பா னல் விருந்து வானத்தவர்க்கு' என்ற குறட்பாவிற் கெழுதியிருக்கு முரையிலிருந்து வெளியாகிறது. "தன்கட்சென்ற விருந்தைப் பேணிப் பின் செல்லககடவ விருநதைப் பார்த்துத் தானதனுடனுண்ண விருப்பவன, மறுபிறப்பிற் றேவனாய் வானிலுள்ளார்க்கு நல் விருந்தாம்" என்று பரிமேலழகர் எழுதியிருப்பதன் கருத்தியாதெனில் 'உன் வீட்டிற் குன்வேண்டுகோள் மீதுண்ண வருவதாக வாக்களித்துள்ள விருநதினர் யாரோ அவருடனுண்ண அவர் வரும்வரை யெதிர்நோக்கிய வண்ணமிரு. ஆனாலிடையே வேறொரெதிர்பாரா விருந்து வருமாயின் அவ்விருந்தை யோம்பவேண்டியதுமுன் கடமையே. எவ்வாறாயினும் நீ யெதிர்பார்க்கும் விருந்துடன் கூட உண்பதற்காகக் காத்திருக்கவேண்டும். அவ்வாறு காத்திருநதுண்பாயேல் வானிலுள்ளாருமுனக்காகக் காத்திருந்துண்பர்' என்பதாம். ஆகவே விருந்துடன்கூட உட்காந்துண்பதில் பரிமேலழகர்க்கும் யாதொரு மாறுபாடில்லை என்பது வெள்ளிடைமலை.

மேற்கூறியவாங்கு இன்முகங் காட்டி நல்ல விருந்தினரைப் பேணுவோனதில்லத்திற் றிருமகள் மனமுவந்து வாழ்வா ளென்று மவனது விளைநிலம் வித்திடாமலே விளையுமென்றுங் கூறுப. இவ்வுலகில், விருந்தினரைப் பேணுமுறையிற் பேணு வோன் விண்ணுளோராற் பெருமகிழ்வுடன் வரவேற்கப் படுவா னென்ப தொருதலை. ஆதலால், இல்லற நெறிநிற்போர் ஒவ் வொருவரும் விருநதோம்புதலை மேற்கொள்ளவேண்டும். இன் றேல், அவர்கள் கொன்னே பொருளை வருந்திக் காத்திழக்க நேரிடும். விருந்தோம்பாதார் பொருள் பெற்றிருப்பினும் பெற் றிலரேயாவர், அப்பொருளால் என் பயன், பிறர்க்குதவாக்கடை? ஆகலின், ஒவ்வொருவரும் தத்தமது பொருளியல்புக் கேற்ற வாறு விருந்தினரையோம்பி நல்கதிபெற இறைவன் திருவருள் கூட்டுக. "செய்த நன்றல்லா லுறுபயனோ வில்லையுயிர்க்கு"

வறுமை*

[காழி. சிவ. கண்ணுசாமி B.A.]

"ஆங்காலம் ஒருவன் நன்குற்றல் ஆன்றவும் விழைதக்கதே; எனினும் அல்காலம் நன்குற்றலோ பெரிதும் போற்றிப் பாராட் டற்குரியதாகும்" என ஒரு அயல் நாட்டு அறிஞர்[1] கூறினர். இது பலர்க்கு மொப்ப முடிந்ததோர் பேருண்மையாகும். செயற்கரிய செய்து புதுமை படைத்துப் பெருமை யெய்துவது சிறந்ததோர் அருஞ்செயலெனின், அது போன்றவை பெரிதுந் தோற்றமுறுவது வறுமைக் காலத்துத் தான். "தவறு புனைந்த இம் மனிதத இயற்கையினும் ஒருவன் இன்ப துன்பங்களா டிய கவலை கடந்து நிற்குங் கடவுள்நிலை யெய்தப் பெறின், அதுவே தனிச் சிறப்பாகும்" எனவும் மேற்கூறிய அறிஞர் அறைந்துளர் ஓர்பால். இதனைச் செய்யுள் வழக்கி னன்றி உலக வழக்கில் யாங் காணுமாறில்லை. என்னை? இல்லது புணர்த்தி எழிலுறப் புனைந்து உள்ளதுபோற் காட்டும் உயர் திறன் செய்யுளமைக்கும் புலவர்க்கே உரித்தாகலின், நெஞ்சறிந்த பொய்ம்மையும் ஆற்றல்சான்ற புலவர் வாய்ப்படின் மெய் போலும்மே! மெய்போலும்மே! புரொமேதியஸ் என்பானது தளை தறித்து உயிர்மீட்க ஹெர்க்யுலீஸ் என்ற மாபெரும் வீரன் ஒரு மட்பாண்டத்தின் துணைகொண்டு எழுகடலையுந் தாண்டிச் சென்றனென்பது விந்தையன்றோ?[2]

---

* பேக்கன் கட்டுரைகளினின்றும் மொழிபெயர்க்கப்பட்டது.

புரொமோதியஸ் என்பவன் உயிரையும், மட்பாண்டம் உடலையும் எழுகடல் உலகப்பற்றையும் ஹெர்க்யுலீஸ் என்பான் கடவுட்பற்றையும் குறித்து நிற்க, அவற்றை மேற்கூறியாங்கு நலம்படப் புணர்த்தி யளித்த புலவனது திறன் வியக்கற்பால தன்றோ ?

இது நிற்க, நடுநிலை நின்று நோக்குழி, பெரும் பொருள் படைத்த காலை உண்மைப் பொருளாகிய அடக்கத்தினூங்கு உயிர்க்கு ஆக்கம் வேறில்லை யென்பதுணர்ந்து அறிவறிந்து நெறி நின்றொழுகலே சீரிதாம்; அறிவறிந்த அடக்கமே உடைமையின் உயர்பண்பாகும்; அனைத்தே நல்கூர்ந்த காலத்து நெஞ்சுவந்து பொறுத்தல்; நிறையுடைமை தெரிக்கும் பொறையுடைமையே வறுமையின் உயர்பண்பாகும். உடைமையி னுயர்வது அடக்கம்; வறுமையில் மிளிர்வது பொறை; பின்னதே அறஞ்சார்ந்த நல்குரவு.

உடைமையால் யாண்டும் நன்மையும் வறுமையால் யாண்டும் தீமையுமே பெருகுதல் முறையெனக் கோடல்வேண்டா. என்னை ? உடைமையாற் றீமையும் வறுமையால் நன்மையும் விளைவது முண்டாகலின். கரியதோர் திரையினில் வெண்ணிறம் கொண்டு தீட்டிய இன்ப ஓவியமே, வெண்டுகிலில் கருநிறங் கொண்டு தீட்டிய துன்ப ஓவியத்தினும் விழைந்து கொள்ளப் படுவதாகும். சுடச்சுட ஒளிரும் பொன்போற் படப்பட ஒளிர்வதே சால்பு. உடைமையிற் பிறர்க்குப் புலனாதல் ஒருவனது இழுக்கமே; ஆனால் வறுமையிற் புலனாதலோ அவனது ஒழுக்கமாகும்.

பொருளின் பிண்டக் கருத்து

வறுமையாலாம் நன்மையும் உண்டு. நிறையுடைமையாக் கருதப்படும் பொறையுடைமை வறுமையானுணரப்படும். வறுமையே ஒழுக்கத்தி னுறை கல்.

மேற்கோள்

செல்வத்தைப் பெற்றாற் சினங்கடிந்து செவ்வியராய்ப்
பல்கிளையும் வாடாமற் பாத்துண்டு—நல்ல
தான மறவாத தன்மையரே லஃதென்பர்
வானகத்து வைப்பதோர் வைப்பு. அறநெறிச்சாரம்

நெறியுளார் செல்வம் பெற்றா னெறிநின்று நீடு வாழ்வா
ரறிவிலார் செல்வம் பெற்றா லளவிலா வகந்தைப் பேயும்
பிறிதுகண் டெரியா நோயும் பிடித்திடு மவையை மாற்ற
வறுமையே தண்ட மென்னு மிரண்டுமா மருந்து மாதோ.
திருக்குற்றாலத் தலபுராணம்

எல்லார்க்கு நன்றும் பணிதல் அவருள்ளுஞ்
செல்வர்க்கே செல்வந் தகைத்து.

காக்க பொருளா அடக்கத்தை யாக்க
மதனினூஉங் கில்லை யுயிர்க்கு. தமிழ்மறை

குறிப்பு:

1. ஸெனெக்கா என்ற உரோமாபுரி அறிஞர்; தத்துவம் நிறைந்த வித்தகர்; நீரோ என்ற அந்நாட்டு மன்னர்க்கு ஆசானும் அமைச்சனும் இருந்தவர்; பெரும்பொருள் படைத்த பிரபுவாயிருந்து சிறப்பெய்தியவர். நீரோ ஒழுக்கந் தவறிக் காமக் கடலுள் மூழ்கித் திளைக்கத் துவங்கியதும் தன்னை வெறுத்துத் தன்னுடைய பொருளின்மீது ஓர் கண் வைத்திருந்தானெனத் தெரியவே தன் பொருளனைத்தையும் அரசர்க்கே யொப்படைத்துத் தான் அயல் நாடு சென்று வசிப்பதாக வாக்களித்தார். ஆயினும் அதை யொப்புக் கொள்ளாமல் அரசன் தன் நட்புக் குறையவில்லை யென்று உறுதியளித்து அறிஞரை வேற்றூர் புகவிடுத்துச் சிறிது காலத்தில் அரசு பிழைத்த அருங்குற்றஞ் சாட்டி அவரதுயிரை வாங்கினன்.

2. துறக்கத்தினின்றும் தீயைக் கவர்ந்து வந்து புரொமோதீயஸ் என்பான் இம்மண்ணிடை யுதவினன். இப்பெருங் குற்றத்திற்காகவும் இன்னுமிவைபோன்ற பல குற்றங்கட்காகவும் இறைவனது ஆணையால் நளிகடல் நாப்பணிருந்த காக்கஸஸ் மலைக்குக் கொண்டுவரப்பட்டு ஆண்டிருந்த ஒரு தூணொடு இறுகப்பிணிக்கப்பட்டான். பகலெல்லாம் அவனருகே ஒரு கழுகிருந்து அவனது குடலைப்பிடுங்கித் தின்னும்; ஆனால் இரவில் அவ்வாறு குறைந்த பகுதி வளர்ந்துவிடும். ஆகவே எண்ணில் காலம் அவன் ஈறில் துன்பமுழந்து வந்தான். இவ்வாறாக, ஒப்பில் பெரும் புகழ்படைத்து மாபெரும் வீரனாகத் திகழ்ந்த அக்கால மேனாட்டுப் பீமனெனக் கருதப்பட்ட ஹெர்க்யுலீஸ் என்பான் பரிதி யுவந்தளித்த ஒரு வட்டிலனைய மட்பாண்டத்தின் உதவிகொண்டு, கடலைக் கடந்து காக்கஸஸ் மூகட்டை யடைந்து தன் கையம்புகளால் கழுகைக்கொன்று புரொமோதீயஸின் கட்டையவிழ்த்துச் சிறை மீட்டான். இது வழக்காறு.

அத்துவித உண்மை யாராய்ச்சி

[திரு. மா. வே. நெல்லையப்ப பிள்ளையவர்கள் B. A.]

அத்துவிதம் என்பது இறைவன் உயிர்கள் என்னும் இருவகைப் பொருள்களுக்கும் அநாதிதொட்டு எப்பொழுதும் உள்ளதாகிய ஒற்றுமைத் தொடர்பு என்பதும், இந்தத் தொடர்பு அறிவு வேட்கை செயல் என்னும் மூன்றினும் நிகழும் என்பதும் முன் எழுதிய கட்டுரைகளிற் கூறப்பட்டன. இறைவனுக்கும் உயிர்களுக்கு முளதாகிய தொடர்பு பற்றியே உயிர்களில்

ஒன்றுகூடும் மற்றொன்றுக்கும் உள்ள தொடர்புஉண்டாகின்றது. உயிர்களில் ஆறறிவுடைய மக்களுயிர்களை மாத்திரமெடுத்துக் கொண்டு அவர்களுக்குள் இத்தொடர்பு நிகழ்ச்சி எவ்வாறு வளர்கின்றது என்பதைப்பற்றி ஆராய்தலே இக்கட்டுரையின் கருத்தாகும்.

2 இறைவனுக்கும் மர்களுயிர்களுக்கும் அநாதிதொட்டு எப்பொழுதும் உளதாயுமுள்ள தொடர்பற்றிய ஒன்றுநிலை, வேறுநிலை உடனிலை என்று கூறிய மூன்று நிலைகளில் இறைவனைப்பற்றிய அளவில் அந்நிலைகள் எப்பொழுதும் நிறைவாயிருககின்றன. அவன் அநாதிதொட்டு எப்பொழுதும் எண்குணன் (மாயாகுணமல்ல) ஆதலின் அவனது நிலைகள் என்றும் ஒரு தன்மைத்தாய் நிறைவாயிருக்கின்றன. மக்களுயிர்கள் ஆணவம் வினை மாயை என்றும் மும்மல வயப்பட்டவர்கள் ஆதலின் அவர்களுக்கு இறைவனுடனுள்ள தொடர்பு நிலைகள் மூன்றும் குறைவுகள் உடையனவாகவே யிருக்கின்றன. உயிர்களை அநாதியே ஆணவமலம் செம்பிற் களிம்புபோலப்பற்றி நிற்பதனால் அவைகள் தங்களுக்கு இறைவனுடன் உளதாகிய தொடர்பு நிலைகளை அறியக்கூடவில்லை உயிர்கள் அவ்வாணவ மலத்தினின்று அந்நிலைகளை நீங்கி அறிந்து தம்முடன் சேர்ந்து பேரின்பம் நுகர்தல் வேண்டும் என்னும பேரளிகொண்டே இறைவன் அவைகள் இவ்வுலகில் வாழ்ந்து உண்மை அறிவு அடையும்படி மாயாமலத்திலிருநது உடல் உட்கருவி நுகர்நிலம் நுகர்பொருள் தனு கரணம புவனம்போகம் என்னும் நான்கினையும் படைத்து அவைகளுக்குக் கொடுத்தனன். உயிர்கள் இநநான்கினையும் பெற்று உலகில் உயிர்வாழுங்கால் வினை செய்கின்றன. ஆகவே உடல் உட்கருவி நுகர்நிலம் நுகர்பொருள் ஆகிய நான்கும் வினையும ஆணவமல நீக்கத்தின் பொருட்டு உயிர்களுக்கு வந்தன. ஆயினும் உடல், உட்கருவி, நுகர்பூமி, நுகர்பொருள் ஆகிய நான்கிற்கும் முதலாகிய மாயாமலமும வினைக்கு முதலாகிய வினைமலமும் (கான்மியமலம்) ஆணவமலத்துடன் சேர்த்து அநாதியாயுள்ளவைகள் என்று கூறப்படும்.

3 மேலே கூறியவாறு மூன்று மலங்களின் சேர்க்கையால் மககளுயிர்கள் இறைவனுடன் தொடர்புபட்ட அறிவு வேட்கை செயல என்னும மூனறு நிலைகளினும் குறைவை உடையனவாக இருக்கின்றன. இக்குறைவுகள் நீங்கி உய்யும்பொருட்டே மக்களுக்கு இறைவனால் உலக வாழ்வு அமைந்துள்ளது. மககள் எவ்வாறு இந்தக் குறைகளினின்றும் நீங்கி இறைவனுடன் நிறைவான அத்துவிதத் தொடர்பு நிலைகளை அடைகிறார்கள்; அஃதா

வதுமக்கள் தங்களுடைய அறிவு வேட்கை செயல் மூன்றும் வளர்ச் சியுற்றுத் திருத்தம் அடைந்து இறைவனுடன் இரண்டறக் கலந்து பேரின்பம் அடைகிறார்கள் என்பதுபற்றி இனி நாம் கருதுவாம்.

4 உலக வாழ்வு நடைபெறுவது அறிவு வேட்கை செயல் என்னும் மூன்றினாலேயே. சிறிய நிகழ்ச்சியாயினும் பெரிய நிகழ்ச்சியாயினும் அறிவு வேட்கை செயல்களினாலே அந்நிகழ்ச்சி நடைபெறுகின்றது. ஒருசிறிய குடும்பம் அறிவு வேட்கை செயல்களாலே நடைபெறுகின்றது; ஒரு பெரிய அரசியலும் அறிவு வேட்கை செயல்களாலேயே நடைபெறுகின்றது. யாதொரு நிகழ்ச்சியும் இம்மூன்றின் ஊடாட்டத்தினாலும் (interaction) தொழிற்பாட்டினாலும் (activity) அன்றி இவ்வுலகில் நடைபெறாது. யாதாமொரு நிகழ்ச்சி செவ்விதாய் நடைபெறுகின்றது அல்லது செவ்விதாய் நடைபெறவில்லை என்பது இம்மூன்றின் ஊடாட்டத்தையும் தொழிற்பாட்டையும் பொறுத்தேயிருக்கின்றது.

5 துவக்கத்தில் மக்களுடைய அறிவு வேட்கை செயல்கள் மூன்றும் முரடாய் (திருத்தமில்லாதனவாய்) இருக்கின்றன; வேட்கை மேற்பட்டு நின்று அதன்வழி அறிவும் செயலும் நிகழ்கின்றன; வேட்கைவழி அறிவு செல்கின்றது அன்றி அறிவின் வழி வேட்கை செல்லுகின்றதில்லை; முரட்டு மக்கள் தங்கள் உள்ளத்தில் ஒரு வேட்கை எழவும் அவ்வேட்கை தகுதியானது அல்லது தகுதி அன்று என்பதைச் சிறிதும் நினையாது உடனே அதனை நிறைவேற்றிவிடுகிறார்கள். அவர்களது உளளம் ஐம்புலன்களுடன் துன்பம் தரத்தக்க ஒரு தீயவழியிற் சென்றாலும் அவர்கள் அவ்வுள்ளத்தை அதிற்செல்லவிடாது தடுத்து நன்றின்பாற் செல்லவிடுதற்கு அறிவாற்றல் சிறிதுமில்லாதவர்களா யிருக்கிறார்கள். அவர்கள் தங்களது செயலால் பிறர்க்கு வரும் கேட்டினை நினைக்கிறதே யில்லை. தங்களுக்கு வருமின்பத்தை மாத்திரங் கருதி ஒழுகுதலினும் அப்பொழுது உடனே அடையும் அற்ப இன்பமல்லாது நீண்ட காலப் பயனை அவர்கள் கருதுகிறதில்லை. இவ்வாறு அவர்கள் ஒழுகுதலின் பயனாகத் துன்பம் பல தரம் அடைந்து அத்துன்ப உணர்ச்சியானது வேட்கை வருங்கால் அதனைத் தடைப்படுத்துகின்றது. ஆயினும் முதலில் வேட்கை முற்றிலும் தடைப்பட்டு அறிவின்வழிச் செல்லுகிறதில்லை. பல பிறப்புகளடைந்த துன்ப வுணர்ச்சியால் வேட்கைக்கும் அறிவுக்கும் இகலுண்டாகி ஒருகால் வேட்கையும் மற்றொருகால் அறிவும் மேலிடுகின்றது. இவ்வாறு மக்கள் வேட்கை மேலீட்டினால் ஒழுகிவருங் காலமெல்லாம், காமம்

வெகுளி மயக்கம் என்னும் சுழல்களிற்பட்டு உழன்று வருந்துகின்றார்கள். பின்னர் அவர்கள் துன்ப நுகர்ச்சியினால் ஒருவாறு தேறி வேட்கை வந்தபொழுது அதனை அடக்கி அறிவு மேலாகும்படி செய்கிறார்கள். அப்பொழுது அவர்கள் அறத்தின் வழி உலகில் ஒழுகத் தொடங்குகிறார்கள். நிலையாக அறிவு மேலிட்டு அவ்வறிவு வேட்கை அடங்கி அவர்கள் உலகில் ஒழுகுங்காலத்தில் அவர்கள் உலகத் தொழில்களை எல்லாம் செவ்விதினறிந்து செய்யத் திருவள்ளுவர் திருக்குறள் சஅ-ம் அதிகாரத்திற் கூறிய அறிவாற்றலுடையவர்களாகின்றார்கள். அவர்கள் இந்நிலையில் உலகத்தொழில்களை யெல்லாம் தங்கள் பயன் கருதியும் பிறருக்குத் தீங்கு நினையாமலும் செய்யாமலும் அறத்தின்வழி நின்றும் செய்து வருகிறார்கள். இம்மைப்பயனும் மறுமைப்பயனும் கருதியே அவர்கள் தங்கள் அறிவு வேட்கை செயல்களை வழங்கி வருகிறார்கள். ஒரு தொழில் செய்யுங்கால் துவக்கத்தில் இம்மைப்பயன் அவர்களது உள்ளத்திற் பெரிதாய்த்தோன்றும்; பின்னர் இம்மைப்பயனாகிய பொருளும் புகழுமுடன் மறுமைப்பயனும் பெரிதாய்த்தோன்றி அப்பயன்களை முன்னிட்டே அவர்கள் தங்கள் தொழில்களை அறத்தின்வழி நின்று செய்து வருகிறார்கள். எத்தனையோ பிறப்புகளில் அவர்கள் இவ்வாறு செய்து வந்து இம்மைப்பயனையும் மறுமைப் பயனையும் அடைந்து அடைந்து அவைகளின் நுகர்ச்சியினால் தங்களுக்கு நிலையான இன்பம் உண்டாகவில்லை என்னும் உணர்ச்சி அவர்களது உள்ளத்தில் உண்டாகிறது. இந்த உணர்ச்சி அவர்களது உள்ளத்திலுண்டாகவே உலக வாழ்வில் நிலையுள்ளன எவை நிலையில்லாதன எவை என்னும் பகுத்தறிவும் அது பற்றி நிலையில்லாதனவற்றை விட்டு நிலையுள்ளனவற்றை நாடி அடைதல் வேண்டும் என்னும் கருத்தும் அவர்களுக்கு உண்டாகின்றன. அறவழி ஒழுகும் மக்களது உள்ளத்தில் இந்த நிலை உண்டாகும்வரை அவர்கள்; உலக வாழ்வில் அறநெறிக்குட்பட்டுச் சிற்றின்பம் நுகர்ந்து அச்சிற்றின்பத்தை அடைதற் பொருட்டு இறைவனது வணக்கமும் செய்து வருகின்றார்கள். இந்த நெறி உலக நெறி என்று கூறப்படும்.

6 உலக நெறியில் மக்கள் அறவொழுக்கத்தில் ஒழுகுங்கால் அவர்கள் வேண்டியவாறே அவர்களுக்கு இறைவன் சிற்றின்ப நுகர்ச்சிப் பொருள்களை யெல்லாம் கொடுக்கின்றான்; அஃது எதற்காகவெனின், அவர்கள் அச்சிற்றின்பங்களை யெல்லாம்நுகர்ந்து அவைகளால் நிலையான இன்பம் அடைதல்கூடாது என்றும் உண்மையைத் தாங்களாக அறிந்து அவைகளின் மேலுள்ள பற்று நீக்குதற்பொருட்டு இப்படிச் செய்தல் இறை

வனுடைய ஐந்தொழில்களில் ஒன்றாகிய மறைப்புத் தொழில் ஆகும். இந்த உலக நெறி வாழ்வில் இறைவன் மக்களுடன் ஒன்றாயும் வேறாயும் உடனாயுமுள்ள அத்துவித நிலைகளிற் கலந்து நின்று அருள் செய்து உதவிபுரிகின்றான். ஒவ்வொருவருக்கும் அவரது தகுதி அளவு அருள் செய்து வருகின்றான். இவ்வாறு இறைவன் உதவிபுரிந்து வருதலை இந்நிலையில் மக்கள் அறிகிறதே யில்லை. அறியாமலிருக்கிறதினால் இந்த உலக அறிவு நிலையானது அறிவறியாமை நிலையாக இருக்கும். உலகத்தை அளிக்கிற தினால் அறிவு நிலையும் இறைவனை அறியாமலிருக்கிறதினால் அறியாமை நிலையும் உள்ளன. இறைவனை அறியாமலிருப்பதனால் மக்களுக்குப் பொருட்சார்பும் உயிர்ச்சார்பும் அச்சார்புகளைப் பற்றி விருப்பு வெறுப்புக்களும் உளவாயின. விருப்பு வெறுப் புக்களால் நல்வினை தீவினைகளும் அவைபற்றிப் பிறப்பிறப்புக் களும் அவர்களுக்கு உண்டாகிக் கொண்டேவரும்.

7 இனி வீட்டு நெறியில் அத்துவிதத் தொடர்பு நிலை எவ்வாறு உளது என்பது கருதுவாம். உலகநெறி வாழ்வில் சிறிது நல்லுணர்வு மேலே கூறியவாறு உண்டாகவும் மக்கள் வீட்டு நெறியில் காலெடுத்து வைக்கின்றார்கள். வீட்டு நெறியில் காலெடுத்து வைக்கவும் அவர்கள் தங்களுடைய அறிவு வேட்கை செயல்களை யாதொரு பயனும் கருதாமல் வழங்கி இறைவனது அருள்வழி ஒழுகுகிறார்கள். அவைகள் தங்களுடைய உள்ளம் நாக்கு உடல் மூன்றினாலும் செய்கிற செயல்களெல்லாம் இறைவனது பணியாகச் செய்கிறார்கள். அவர்கள் தங்களுடைய உள்ளத்தையும் ஐம்புலன்களையும் சிற்றின்ப நுகர்ச்சியின் செல்ல விடாது இறைவனிடத்துச் செல்லும்படி அறிவின் வன்மையால் செய்கிறார்கள். இவ்வாறு ஒழுகும் தவ ஒழுக்கத்தில் முதலாவது படி சார்பு (சரியை) என்றும், இரண்டாவது படி செயல் (கிரியை) என்றும், மூன்றாவது படி சேர்தல் (யோகம்) என்றும், நான்காவது படி மெய்யுணர்வு (ஞானம்) என்றும் கூறப்படும். இந்த நான்குபடிகளும் மெய்யுணர்வு நிலைகளில் அரும்பு மலர் காய் கனி போலுள்ளன. பொதுவாக நோக்குமிடத்து முதலாவது படியில் காற்பங்கு மெய்யுணர்வும், இரண்டாவதுபடியில் அரைப் பங்கு மெய்யுணர்வும், மூன்றாவது படியில் முக்காற்பங்கு மெய் யுணர்வும், நான்காவது படியில் முழுமெய்யுணர்வும் வீட்டு நெறியில் ஒழுகும் மக்களுக்கு உண்டாகின்றன என்று நாம் கூறலாம். மேற்படி தவ ஒழுக்கங்களால் மக்களுக்கு மலபரி பாகமும இருவினை ஒப்பும் உண்டாகின்றன. மலபரிபாகமாவது மலவலிதேய்தற்குரிய துணைக்காரணங்களெல்லா வற்றோடு கூடு தலாம். இருவினையொப்பாவது அறம் மறம் என்னும் இரண்டி

லும் விருப்பு வெறுப்பில்லாமையும் அவ்விரண்டின் பயன்களாகிய இன்பதுன்பங்களிலும் ஒப்ப உவர்த்தலும் அறிவின்கண்ணே நிகழ்தலாம். மலபரிபாகமும் இருவினையொப்பும் உண்டாகவும் அருளானது அவர்களது அறிவிற்பதியும் அருள் பதிந்த அளவில் விளக்கின்முன் இருள்போல் அறிவறியாமை நீங்கி மெய்யுணர்வு உண்டாகும். இந்த மெய்யுணர்வு முற்றிய பொழுது சிவப்பேறு உண்டாகும்.

8 மேலே கூறிய வண்ணம் வீட்டு நெறி வாழ்வில் உலக நெறி வாழ்விலுள்ள அறிவறியாமை நீங்கி மெய்யுணர்வு உண்டாகத் தொடங்கவும் மக்கள் தங்களுடன் இறைவன் ஒன்றாயும் வேறாயும் உடனாயும் அத்துவிதமாய்க்கலந்து நின்று உதவி புரிந்து வருதலை அந்த மெய்யுணர்வினால் தங்களது அறிவில் அறியத் தொடங்குகிறார்கள். இறைவனது அறிவு வேட்கை செயல்கள் நிகழ்ந்தாலன்றித் தங்களுடைய அறிவு வேட்கை செயல்கள் நிகழா என்னும் உண்மையை அவர்கள் மெய்யுணர்வினால் அறிந்து கொள்ளுகிறார்கள். தவம் முதிர முதிர மெய்யுணர்வும் வளர்ந்து முதிர்கின்றது; மெய்யுணர்வு வளர வளர இறைவனது அத்துவிதத் தொடர்பு அறிவும், மக்களுயிரறிவில் விளங்குகின்றது. இப்படி விளங்குங்கால் அறிவு விளங்கப்பெற்ற உயிர்கள் இறைவன் தங்களுக்குச் சலிப்பின்றி இடைவிடாது செய்து வருகின்ற பேருதவியை நினைந்து நினைந்து அந்நினைப்பு மறவாமை நிலையை அடைகின்றனர்; மறவா நினைப்பினால் அவர்கள் தங்கள் நெஞ்சம் கரைந்து கரைந்து கண்ணீர்வார உருகி இறைவனைப் பற்றுகிறார்கள். இப்படிப் பற்றுகின்ற மெய்யன்பினால் அவர்கள் இறைவனது திருவடிகளை அடைந்து என்றும் அழியாப்பேரின்ப வாழ்வு அடைகிறார்கள். இவ்வாறு வீட்டு நிலையிலும் அறிவு வேட்கை செயல்கள் மூன்றும நிகழ்கின்றன; ஆனால் திருந்திய நிலைகளில் அவைகள் நிகழ்கின்றன. இந்தப் பெருவாழ்வை மெய்கண்டதேவர் சிவஞான போதம் ௧௧-வது சூத்திரத்திலே,

'காணுங் கண்ணுக்குக் காட்டு முளம்போற்
காண வுள்ளத்தைக் கண்டு காட்டலின்
அயரா வன்பின் அரன்கழல் செலுமே'

என்று கூறினார்.

9 உயிருக்கு ஒன்றனைச் சார்ந்து நிற்றலும், அஃது எதனைச் சார்ந்ததோ அவ்வண்ணம் ஆதலும், அதற்கு இயற்கைப் பண்பு ஆகும். மக்கள் முதலாவது உலக நெறியில் உலக இன்பத்தைப்

பெரிதாக நினைத்து அதனையேபற்றி நிற்கிறார்கள். உலக இன்பத்தைக் கருதி அதன் வழியே அவ்வின்பந்தரக்கூடிய உலகப் பொருளில் பற்றுவைக்கிறார்கள்; உடலுறவுள்ள தாய் தந்தை மனையாள் முதலிய மக்களிடத்திலும் தங்கள் உலக வாழ்க்கைக்கு உதவியாயுள்ள மக்களிடத்திலும் அவர்கள் பற்றுவைக்கிறார்கள். இவ்வாறாக அவர்கள் உலகப் பொருளிடத்திலும் உயிர்ப்பொருளிடத்திலும் பற்றுவைத்தல் தங்களைப்பற்றிய சார்பேயாகும். தங்களைப்பற்றிய சார்பு நீங்காதிருக்கும் வரையில் மக்களுக்கு இறைவனது அருளாலுண்டாவதாகிய மெய்யுணர்வு உண்டாகாது. வீட்டு நெறியில் மக்களுக்குத் தங்களைப்பற்றிய சார்பு நீங்கி இறைவனிடத்தில் சார்பு உண்டாகிறது. அப்பொழுது அவர்களுக்கு மெய்யுணர்வு உண்டாகிறது. முதிர்ந்த மெய்யுணர்விலே அவர்கள் வீட்டின்பமடைகிறார்கள். இவ்வாறாக மக்கள் முதலாவது உலகத்தைப்பற்றுதலுக்கும் பின்னர் இறைவனைப் பற்றுதலுக்கும் அவர்களுக்குத் துணையாய் நின்ற பண்பு ஒரு பொருளைச் சார்தலும் சார்ந்தவண்ணமாதலும் ஆகும். இந்தப் பண்புக்கு அடிப்படையாயுள்ளனவாய் நிற்பவை அவர்களுடைய அறிவு வேட்கை செயல்கள் ஆகிய மூன்றும். அறிவு வேட்கை செயல் ஆகிய இவைகளில் யாதாமொன்றினால் மக்கள் ஒரு பொருளைச் சார்தலும் சாராதவண்ணம் ஆதலும் முடியா என்பது வெளிப்படையான உண்மையாகும்.

10 ஸ்மார்த்தர்களாகிய ஒரு பொருள் வழக்கர்களும் (கேவலாத்து விதிகளும்), மாத்துவர்களாகிய இருபொருள் வழக்கர்களும் (துவிதிகளும), வைணவர்களாகிய அடைபொருள் வழக்கர்களும் (விசிட்டாத்து விதிகளும்) முன்கட்டுரைகளிற் கூறியபடி தனித்த ஒவ்வொரு நிலையையே கொள்ளுகிறார்கள். சுத்தாத்துவிதசைவர்கள் அவ்வாறு ஏனைய மூன்று வழக்கர்களும் கூறுகிற பேரின்பவாழ்வு எவ்வாறு அடைதல் கூடும் என்பதை அறிஞர்கள் உய்த்துணர்ந்து கொள்க.

ஆடலும் பாடலும்

[திரு. M. S. பூரணலிங்கம்பிள்ளையவர்கள், B.A., L.T.]

க. கூத்து

இயலிசை நாடகமெனும் முத்தமிழ் என்பர் தமிழின்வகையறிவார். நாடகமென்பது கதை தழுவி வருங்கூத்து. நாடக நூல் இரு கூறுபாட்டினை யுடைத்து. அவை வேத்தியல், பொது

வியலாம். முதலது அகமெனப்படும், பின்னது புறமெனப் படும். கூத்தும் இருகூறும். வசைக்கூத்து, புகழ்க்கூத்து. வரிக் கூத்து, வரிச்சாந்திக்கூத்து; சாந்திக்கூத்து, விநோதக்கூத்து; ஆரியம், தமிழ்; இயல்புக்கூத்து, தேசிக்கூத்து என்பனவாம். கூத்து, ஆடல் ஒருபொருட் பன்மொழி. கூத்தில் அவிநயமிருந் துளது. நாயகன் சாந்தமாக ஆடிய கூத்து சாந்திக் கூத்தெனப் படும். அது பலவகையாகும். சொக்கமென்பது சுத்த நிருத் தம். தேசி, வடுகு, சிங்களமென மெய்க்கூத்து மூவகையாம். மெய்த்தொழிற்கூத்து மெய்க்கூத்தாம். அகக்கூத்து குணத்தின் வழியது. குணம் இராசதம், தாமதம், சாத்துவிகம் என மூன் றும். அவிநயம் பாவகம் அவிநயக்கூத்து நிருத்தக்கை தழு வாது பாட்டினது பொருளுக்குக் கைகாட்டி வல்லபஞ் செய் வதாம். அவிநயம் இருபத்துநான்கு வகைத்து. வெகுளி, ஐயம், சோம்பல், களி, உவப்பு, அழுக்காறு, இன்பம், தெய் வம், ஏமுறுதல். (ஞஞ்ஞை) உடன்படல், உறக்கம், துயிலுணர் தல், சாவு, மழையில் நனைதல், பனிப்படுதல், வெயிற்படுதல், நாணம், கண்ணோவு, தலைநோவு, அழற்றிறம், சீதம், வெப்பம், நஞ்சுண்டல், இவையுடையோன் காட்டும் புறக்குறிகளாம். விநோதக் கூத்து குரவை, கலிநடம், குடக்கூத்து கரணம, நோக்கு, தோற்பாவை யெனப் பலவாம். குரவை காமமும் வென்றியும் பொருளாகக் குரவைச் செய்யுள் பாட்டாக எழுவ ரேனும் எண்மரேனும் ஒன்பதின்மரேனும் கைபிணைந்தாடுவது. அது வரிக்கூத்தினொருறுப்பு. கலிநடம கழாய்க்கூத்து. குடத் தாடல் குன்றெடுத்தோனாடல். கரணம் படிந்தவாடல். நோக்கு பாரம் நுண்மை முதலியனவுடையது. தோற்பாவை தோலாற் பாவைசெய்து ஆட்டுவிப்பது. விதூடக்கூத்து வசைக்கூத்தா கும். வெளியினுலாடல், தெய்வமேறியாடல் இவையுஞ் சேர்க்க. வென்றிக்கூத்து மாற்றானொடுக்கமும் மன்னனுயர்ச்சியும் மேற் படக்கூறும். வசைக்கூத்து பல்வகை யுருவமும் பழித்துக்காட் டும். விநோதக்கூதது விநோதங் காணுங் கூத்தாகும். கொடித் தேர் வேந்தரும் குறுநிலமன்னரும் முதலாக உடையோர் பகை வென்றிருந்த விடத்து விநோதங் காணும். இவையன்றி

'அல்லியம், கொட்டி, குடை, குடம், பாண்டரங்கம்,
மல்லுட னின்றாட லாறு'

'துடி, கடையம், பேடு, மரக்காலே, பாவை
வடிவுடன் வீழ்ந்தாட லேந்து'

அல்லியம் (அலிப்பேடு) மாயவனாடிய கூத்து. கொட்டி கொடு விடையோனாட்டம். கொடு கொட்டி திரிபுரம் தீமடுத்தெரியக்

கண்டு இரக்கமில்லாமற் கைகொட்டி ஆடிய ஆட்டம். அறுமுகத் தோனுடல் குடையாம்; பாண்டரங்கம் பாரதி (பைரவி) முக் கணுனட்டம். உருவொடு வாணனை வெல்லுதற்கு மல்லனாக நெடியவனுடல் மல்லாடல். துடியாடல் சூரனைவென்ற முருக னுடல். காமன் மகன் அநிருத்தனை உழையென்பாள் காரண மாக அவுணவாணன் சிறைவைத்தலின் அவனுடைய சோ வென்னும் நகர வீதியிற் சென்று பஞ்சலோகங்களாலும் மண் ணுலும் வளையப்பட்ட குடங்கொண்டு நிலங்கடந்த நீலநிறவண் ணன் ஆடின ஆட்டம் குடக் கூத்தெனப்படும். இந்திராணி யாடல் கடையம் கடைசிக்கூத்து பெண்ணுருவில் காமனதாடல் பேடாடல். துர்க்கையாகிய மாயவள் மரக்கால்கொண்டு ஆடல் மரக்காலாம். கொல்லிப் பாவை வடிவில் திருமகளாடல் பாவை யாடலாம். இவை அசுரரைக் கொல்ல அமரர் ஆடின ஆட்டங் களாம்.

அவிநயத்துடன் சொல்லும் நிகழும். சொல் மூன்று வகைப்படும். அவை உட்சொல், புறச்சொல், ஆகாயச் சொல் லாம். அவை முறையே நெஞ்சொடுகூறல், கேட்போர்க்குரைத் தல், தானே கூறல் ஆக மூன்றும். சொல்வகை நான்காம். நான் கடியால் வருவது சுண்ணம். எட்டடியால் வருவது சுரிதகம். நானன்கு (பதினறு) அடியால் வருவது வண்ணம். முப்பத் திரண்டு அடியால் வருவது வரிதகம். வண்ணம்—பெருவண் ணம் ஆருகவும், இடைவண்ணம் இருபத்தொன்ருகவும். வனப்பு வண்ணம நாற்பத்தொன்ருகவும் வரும. சேதம் ஆரியந் தமிழ் என இருவகைப்படும்.

வரி என்பதனை பல்வரிக் கூத்தென்பாருமுளர்.

'வரியெனப் படுவது வகுக்குங் காலைப்
பிறந்த நிலனுஞ் சிறந்த தொழிலும்
அறியக் கூறி யாற்றுழி வழங்கல்'

வரி எட்டுவகையாம். அவை கண்கூடு, கானல்வரி, உள் வரி, புறவரி, கிளர்வரி, தேர்சசிவரி, காட்சிவரி, எடுத்துக்கோள் வரி என்பன. சிலப்பதிகாரத்தில் கானல்வரி, வேட்டுவரி, ஊர் சூழ்வரியையும், ஆய்ச்சியர் குரவை, குன்றக் குரவையையும் பார்க்க.

உ. பாணி (பாடல்)

பாணியென்பது பாட்டு. பெருந்தேவபாணி, சிறுதேவ பாணி எனப் பாணி இருவகைத்து. இவ்விரு பாணியும் பத்து

வகைப்பட்ட இசைப்பாவி லிரண்டாம். மற்றெட்டும் செந்துறை, வெண்டுறை, முத்தகம், பெருவண்ணம், ஆற்றுவரி, கானல்வரி, விரிமுரண், தலைபோகு மண்டிலமாகும். நாடகத் தமிழில் பெருந்தேவபாணி பலதேவரையும், சிறுதேவபாணி வருணப் பூதரையும் மூவடி முக்கால் வெண்பாவால் துதிக்கும். அவ்வுழி அவரணியுந்தாரும் ஆடையும் நிறனுங் கொடியும் துதித்து அவராற் பெறவேண்டுவனவுந் துதிக்கப்படும். தேவபாணியில் முதனிலையாகியது மாயோன்பாணி. ஏனெனில் மாயோன் காவற்கடவுளாய் அருளை அருத்தும். இறைவனையும், சந்திர சூரியர்களையும் துதிக்கும் தேவபாணி யென்பது. வருணப்பூதர் நால்வகையும் பரவும் நால்வகைத் தேவ பாணி என்பதை மதிவாணனார் இவ்வாறு விரித்துரைக்கின்றார்.

'அந்தணர் வேள்வியோ டருமறை முற்றுக
வேந்தன் வேள்வியோ டியாண்டு பலவாழ்க,
வாணிகரிரு நெறி நீணிதி தழைக்க,
பதினெண் கூலமும் உழவர்க்கு மிகுக,
வரங்கியற் கூத்து நிரம்பி வினைமுடிக.'

'தோரிய மடந்தை வாரம்பாடல்.' வாரம் ஒரொற்றுவாரம், ஈரொற்றுவாரமென இருவகைப்படும். பாணியென்பது தாளத்தையுங் குறிக்குமாதலால் அவை தாளத்து ஒரு மாத்திரையும் இரண்டுமாத்திரையும் பெற்றுவரும். தோரியமடந்தையார்? ஆடிமுதிர்ந்தார் பின்பு ஆடன் மகளிர் காலிற்கு ஒற்றறுத்துப் பாடுமவள்.

'தலைக் கோலரிவை குணத்தொடு பொருந்தி
நலத்தகு பாடலு மாடலு மிக்கோள்
சொலப்படு கோதைத் தோரிய மகளே.'

* வாரம் நாடகவகை பத்தினொன்று. வாரம் அன்பு, உரிமையென்ற பொருளிலும் வரும். கலிப்பா வுறுப்பாறனுளொன்றாகிய சுரிதகத்தையுங் குறிக்கும் செய்யுள் வகையில். வாரப் பாடலில் சொல்லொழுக்கமும், இசையொழுக்கமுமுள. கூடைப் பாடலில் சொற்செறிவும் இசைச் செறிவுமுள.

பண் பாடுபவர் பாணர்; ஆடுமகள் விறலியெனப்படுவர், பண்பாலை நிலத்திற்குரியதாய்ச் சிறந்து விளங்கும். செம்பாலை, படுமலைப்பாலை, செவ்வழிப்பாலை, அரும்பாலை, கோடிப்பாலை,

விளரிப்பாலை, மேற்செம்பாலை என்று ஏழுபாலை சொல்லப் படும்.

இவற்றினை மதிவாணனுர் நாடகநூற் சூத்திரங்களாலும் வி. கோ. சூரியநாராயண சாஸ்திரிகளின் நாடகவியலாலும் தாளசமுத்திரமென்ற நூலாலும் உணர்க.

தேவாரத் தனியுரை

[காரைக்குடி திரு. G. வைத்தியலிங்கம் பிள்ளையவர்கள்]

தேவாரத் தனியுரையென மேற்கொண்டது தேவாரத் திருமுறைச் செய்யுட்கள் முழுதுமன்று. இவைபோல வேற்பன வொன்ருக விரண்டாகப் பலவுமாக வாய்ப்புழியெல்லாந் தனித் தனி யுரைசெய்து தொடர்ந்து செல்லுதற் கென்க. அல்லதூஉம்; அரும்பதவுரை, அப்பொருள் விளக்கம், அடையடுத்த தொடர்மொழியுரை. அவ்வுரை விளக்கம், முடிபுணர்த்தும் பலவாய சொற்ருெடர்நிலை. அப்பிண்டப் பொழிப்பு, அவ்விரிவுரை, உணர நின்ற குறிப்புரை, சித்தாந்தக்கருத்து, வேண்டுழி வரூஉம் இலக்கணக் குறிப்பென்றிவை கூறுந் தனியுரையெனலு மாம்.

வலிவலம்

திருஞானசம்பந்தசுவாமிகள்

பிடியத னுருவுமை கொளமிகு கரியது
வடிகொடு தனதடி வழிபடு மவரிடர்
கடிகண பதிவர வருளினன் மிகுகொடை
வடிவினர் பயில்வலி வலமுறை யிறையே.

பிடி - பெண்யானை. உரு - வடிவம். உமை - சத்தி. மிகு - பெரிய. கரி - ஆண்யானை. இடர் - துன்பம். கடி - ஒழிக்கின்ற. வர - தோற்ற. பயில் - வாழ்கின்ற. உரை - எழுந்தருளிய. இறை - தலைவர்.

பிடியதன் அன் சாரியை. மிகு ஈண்டு அருட்டன்மையது. கரியென்றது வலிவலமுறை யிறையை. இடர் பிறவித் துன்பம். கடிகணபதி வினைத்தொகை. வடி கடைக்குறை.

(இதன் பொருள்.) வலிவலமென்னுந் திருப்பதியில் எழுந் தருளிய விறைவர் (சிவபெருமான்) உமாதேவி பிடியினுருவைக் கொள்ளாநிற்க (தாம்) கரியினுருவத்தைத் தாங்கித் தமது திரு

வடிகளை வழிபடுவார்க்குப் பிறவித்துயரை யறுக்கின்ற கணபதி
யைத் தோன்றும்படி யருள் செய்தா ரென்றவாறு. பதிபுண்
ணியமே (தாங்கள் பிறந்த பயனெனக்கொண்) டொழுகுவார்
வாழும் வலிவலமென்க.

தனது மிகு அடியென வியைக்க. தனதென்றது வலிவல
முறை யிறையதென்பதாம். பெரிய தாள்களென்பது. பெரிய
தாள் திருவடியெனலுமாம். தாட்குப் பெருமை பிறவியறுத்
தலும் வீடுபேற்றிற்கு அதிகாரியாக்கலுமாகிய வருட்டன்மை.
திருவடி வீடுபேறாகிய திருவை யடைவிக்கும் அடி. அவரென்று
சுட்டியது அடியார்களை; வழிபடுவோர் அடியாராதலின் அவர்க்
கெய்து மிடரென்க. இடரைக் கடியும் கணபதியென்பதாம்,
இறை தானே பிறவியறுத்த லொல்லாதோவெனின்; ஒல்லு
மேனும் விகார மெய்தாவண்ணம் தம் வயத்தனாய் நிற்கும்முதல்
வன் தனது சத்தி சங்கற்ப மாத்திரையா லனைத்துஞ் செய்வன்
என்பது சித்தாந்தமாகலி னது செய்யாரென்பது. வரவென்
னுஞ் செயவெனெச்சங் காரியப் பொருட்டாய் அருளின னென்
பதனோடு முடிந்தது. பிடியுருவுமை யென்றதனானும் (தான்)
கரிவடிகொடென்றதனானும் அருளினனென்றதனானும் கண
வனும் மனைவியும் புணர்ந்து கருவுற்றுச் சூலுளைந்து வருந்தி
யீனும் ஏனையுயிர்கள் போலாது இறைக்கும் உமைக்குந் திரு
வருட் குறிப்பு மாத்திரையானே தோன்றிய கணபதியென்பது
பெறப்படும். கணபதி யானை முகத்தினராதலான் அதற்கேற்ப
உமையும் இறையும் முறையே பிடியுங் கரியுமாயினரென்றதனை
னவ்வுருக்கொடு புணர்ந்தீன்றரென லமையாதாலோவெனின்;
வித்தில்லாத சம்பிரதாய மேலுமில்லைக் கீழுமில்லை யென்னும்
மரபு பற்றியும் அம்மரபினைக் காத்தன் முறைமையானுங் குறிப்
புணர்த்தியதேயல்லது அஃதமையாதென்க. எனவே உமை
பிடியும் இறை கரியுமாகிய வடிவுகொண்டென்றது உபசார
மாம்.

இவ்வருட்பாவினாற் கூறியது வலிவலமுறையிறை தன்னை
வழிபடுவார்க்குப் பிறவியை யறுக்க வல்லார். பிறவி வேண்
டாது வீடுபேற்றை விழைவோரெல்லாம் வலிவலத்தின்கட்
சென்று அவ்விறையை வழிபடுக வென்பது.

தனது அடி வழிபடுமவரிடர் கடிகணபதியெனத் தன
தைக் கணபதிபோலத் தாக்கியுங் கரியைஅவர்க்காக்கியும்உரைத்
தலும் ஒன்று. இப்பொருட்குக் கரியது வடிகொடு தனதடி வழி
படுமவரிடர் கடிகணபதியென முழுதுமொரு தொடராக்குப.

பிரமபுரம்

தோடுடைய செவியன்விடை யேறியோர் தூவெண்மதி சூடிக்
காடுடைய சுடலைப்பொடி பூசியென் னுள்ளங்கவர் கள்வன்
ஏடுடைய மலரான்முனை நாட்பணிந் தேத்தவருள் செய்த
பீடுடைய பிரமாபுர மேவிய பெம்மானிவ னன்றே.

தோடு - காதணி. விடை - காளை. காடு - சுடுகாடு. சுடலை - எரி. பொடி - நீறு. கவர் - இழு. ஏடு - பூவின் புறவிதழ். பீடு - பெருமை. பெம்மான் - தலைவன்.

தோடு பெண்ணணி. அது புல்லின் வேறுபாடாகிய ஓலையைச் சுருட்டிச் செய்வதோர் அணி. அஃதீண்டு அவ்வணியை யணிதற்குரிய சத்தியை யுணர்த்தி நின்றது; இறைவன் உமையொரு கூறுடைமையின், அல்லதூஉம்; உமையொடு மிறைவனொருங்கருளினமையானும், தமக்குத் திருமுலைப்பாலூட்டிய திறனை நினைந்தும், இறைவனையே வாச்சியப் பொருளாக்கொண்டதஞ் செய்யுளி னருளின்றி யிறையின்மையாற் சத்தியையு முடன்வைத் துணர்ததினரெனலுமாம்.

விடை தமிழ்மொழி, வடமொழிச்சிதை வன்று. அஃதற வடிவு மறிவு வடிவுமாம். சின்மயத்தனி மால்விடையேறினன் சிவனே என்ப கந்தபுராணத்தும், தரும வடிவிற்கு வந்துழிக் காண்க.

எண்ணின் சிறுமையாகிய ஓர் ஈண்டு மதியினிளமை யுணர்த்தி நின்றது, இளம்பிறையென்பது. மதிதண்மையுடையதாகலின் இறைவர திரக்கமுடைமை யுணரநின்றது. இரக்கம் உயிர்கட்குப் பசுத்துவ நீக்கிச் சிவத்துவ மளித்தற்கணுளதாகிய விரக்கமாம். "நிலவுலாவிய வேணிய" னென்ப பெரிய புராணத்தும்.

எல்லாவற்றையுந் தன்னுளொடுக்கி மாசங்காரத்தைச் செய்யு மொடுங்கி யொருவன் அது செய்தற் கிடனுகக் குறியீடு கொண்டமையிற் காடு கூறப்பட்டது. 'காடலால வாயிலாய்' எனப் பிறண்டு மோதுப.

பொடிக்கப்படுதலிற் பொடியாயிற்று. எழுதப்படுதலி னெழுத்தானுற்போல. இறுதியினெல்லாந் துகளாய்த் தானொருவனே அழியாவியல்பினனு யெஞ்சி நிற்பனென வுணர்த்தலிற் பொடிகுறியீடாம். "மண்டமர் பலகடந்து மதுகையா னீறணிந்து" என்ப கலித்தொகையினும்.

கவர் கள்வன் வினைத்தொகை. முக்காலமும்படவருதலின் அடியாரைப் பருவமுணர்ந்து வலிந்தாட்கொள்ளு முறைமை யவர்க் கென்ஞான்று மரபாமென்பது பெறப்படும். கவர்தல் வசித்தலென்னும் பொருட்டாய் வலிந்தாட்கொள்ளுந் தேசிக முறைமை யினிது விளக்கிற்று. "இரும்புதரு மனத்தேனை யீர்த் தீர்த்தெ னென்புருக்கி" யென்ப திருவாசகத்தும்.

ஏடு மலரலரும் பருவத்த புறவிதழ். அதுதான் றடித்துப் பருத்து உள்ளிதழ்களினியன்ற மணம் வெளிப்படாவண்ணம் அடக்கிக் காப்பதோ ராதார வுறுப்பு. புல்லின் வேறுபாடுக ளாகிய தோடும் மடலும் ஓலையுமென்றிவற்றில் தோடு அம் மூன்றனுள்ளும் முதிர்வை யுணர்த்துமாறு போல, ஏடே யிதழே யென்றிவற்றின் ஏடு மலரலரும் பருவத்ததென்க. இதழ் முதிர்ந்த நிலை ஏடு. இதழ் உள்ளுறுப்பு. அலருமுன் அரும்பும் முகையும் நனையும் மொக்குளு மென்றிவற்றி னவ்வுறுப்புக்க ளிலவோவெனின்; உளவேனும் அவை மணமுண்டாந் தன்மை நிறையப் பெறாமையின் அவையுளவாகப் புலனெறி வழக்கஞ் செய்யாமை காண்க. கருப்பையிற் கிடந்த குழவிக்கு மூன்றுந் திங்க டொடங்கி உறுப்புப் பிளவுகளும், ஆறுந்திங்களிலபிண்ட வுறுப்புக்களும், பத்தாந் திங்களி லவ்வுறுப்புக்கள் நிறைந்த காட்சியுமுளவேனும் அவைதாம் அத்தத்துவங்கள் நிறைவெய் தாமையி னுறுப்பெனப்பட்டது. பொதுவரையாற் கருவென் றே வழங்கலுங் காண்க. மலரை அன்புணர்த்த நின்றதெனக் கூறவேண்டியிருத்தலின் ஏட்டை யிவ்வளவும விளக்கவேண்டி வந்தது.

மலர் அன்பின் மேலதாம், "பத்திமலர்சொடு" என்பது மேற்கோள். ஆ ச; ஏடுடைய மலரானென்பது முதிர்ந்த அன் பெனப்படும் இப்பொருட்கு மலரான் என்பதின் கருவிப்பொரு ளாய ஆனை ஒடுவெனக்கொண்டு உடனிகழ்ச்சிப் பொருள் கொள்க. மூன்றனுருபு களாய ஆனும் ஒடுவும் முறையே கரு வியு முடனிகழ்வுங் கொள்ளினும் உடனிகழ்ச்சி ஆனுக்கும் ஒடுவுக்கும் பொதுவாகலான் ஆனேயமையுமெனின்; பொது வாயினும் ஒடுப்போல வுடனிகழ்ச்சி யானுக்கு அத்துணைச் சிறப்பின்மையின் ஆனையொடு வாக்கலே சால்புடைத்தென்க. ஒடுவொடு மயங்கு மெனலும் இழுக்காதென்க. "உறழ்மணியா னுயர்மருப்பின்" எனவும், "உங்கையிற்பிள்ளை யுனக்கே யடைக் கலமென்—றங்கப் பழஞ்சொற் புதுக்குமெம் மச்சத்தால்— எங்கள்பெருமா னுனக்கொன் றுரைப்போங்கேள்" எனவும் இவற்றின் மணியானென்பது மணியோடெனவும் அச்சத்தா

லென்பது அச்சத்தோடெனவும் ஆலும் ஆனும் ஒடுவும் ஒடுவு மாக வருமாறு காண்க. "தளமலரெடுத்துன் னருச்சனையாற் றிச் சாலநின்றிருவருள் பெறவும்" என்பது சிவதத்துவ விவேகம்.

முன்னைநாள் முற்பிறவி. பிறவி தொகுதி யொருமை. பல பிறவிகளில் என்பதாம்.

ஏத்தவென்னும் இறந்தகாலப் பெயரெச்சம் ஏதுப் பொருட்டு. மழைபெய்ய நெல்விளைந்தது என்பதுபோல. அஃது அருள்செய்த வென்பதனோடு முடிந்தது.

பிரமாபுரமென விரியும் வழிவிரிந்தது விகாரம். பிரம புரம் என்பது. அது சீகாழிக்குரிய பன்னிரண்டு திருப்பெயர் களிலொன்று. அவையாவன :—பிரமபுரம், வேணுபுரம், தோணிபுரம், சிரபுரம், புகலி, வெங்குரு, புறவம், சண்பை, காழி, கொச்சை, கழுமலம், பூந்தராய் என்பன.

பெம்மான் பெருமான் சிதைவு. அன்றே அசை.

(இ - ள்.) தோடுகளையணிந்த செவிகளையுடையவன், இடப வாகனத்தில் ஊர்ந்தவன், தூயவெள்ளிய இளம்பிறையைச் சூடி யவன், திருநீறு பூசியவன், எனது உள்ளத்தைத் தன்வயப்படுத் திய கள்வன், முற்பிறவிகளிலே (யான்) மலர்கடுவி யருச்சித்து வணங்கி துதித்தமையினாலே (இப்பொழுதெனக்கெழுந்தருளி) யருள்செய்த பெம்மானிவன் (யாவனெனின்) பிரமாபுரமேவிய பெம்மான் என்றவாறு.

இனி, அருள்செய்த பெம்மானென்றது முன்னைநாள் மல ராற் பணிந்தேத்தியவன் பிரமனாகலின் அதனான் அவ்வூர் பிரம புரமென வழங்குதலான் அருள்செய்த பிரமபுரமென முடிக்க லாமெனின்; பாலூட்டியார் யாவரென வினவினார்க்கு அவ்வரு ளைச் செய்தானிவனெனச் சுட்டுதலன்றி மற்றொருவர்க்கருள் செய்தவிவனெனக் கூறல் அத்துணைச் சிறப்பன்றெனக. காட் டப்பட்டார்க்குங் காட்டியார்க்கு முளதாய சம்பந்தம் மலரான் முன்னை நாட்பணிந்தேத்தியதாகலின் ஏத்தியது ஆளுடைய பிள் ளையே என்க. பிரமன் வழிபட்டருள் பெற்றது வேறு இதுவும் வேறென்க. பொருணிலை திரியா வப்பெயரெச்சம் தனக்குரிய பீடுடைப் பெம்மானையே கொண்டு முடிந்தது. அங்ஙனம் முடி யாக்காற் பொருணிலை திரிந்ததாகும். ஆளுடைய பிள்ளையார் சிவன் மைந்தனாதலின் அவர்க்கேது பிறப்பும் வழிபடுதலுமெ னின்; "காதலியார் மணிவயிற்றிலுருத்தெரிய வரும்பெரும்பே

றுலகுய்ய வுளதாக" என்னும் பெரியபுராணத்துப் பொருளு
மியைபு மின்றி யொழிதலன்றி, "ஆன்மாக்களுக்கு முற்செய்த
தவத்தால் ஞான நிகழும்" என்னும் சித்தாந்தமும் "ஆளுடைய
பிள்ளையார் முதலிய நாயன்மார்க்குத் தவமின்றியு ஞானநிகழ்ந்
தாலோவென்னும் மாசங்கை நீக்குதற்கும் படிமுறையானன்றி
யிவ்வொரு பிறவியிற் செய்த தவநதானே யமையாதென்பது
ணர்த்துதற்கும் முற்செய் தவமென விசேடித்தார்" என வரும்
மாபாடிய முடையார் சான்று மிழுக்குமாறுணர்க.

இனித்: தோடென ஓகாரத்தை முற்கொண்டு தொடங்கி
யது பிரணவத்தை யுட்கொண்டென்க. அற்றேல் ஓகார
மென்றே நின்று அப்பொருளை யுணர்த்துமாலோவெனின்;
ஓகார வடிவமே பிரணவவடிவாகலானும், மக்களுடம்பில் யாது
னுமோருறுப்புக் குறைபடினும் அக்குறைவானேயவன் வேறு
படாது மனிதனெனவே வழங்கப்படுதல் போல
மகரங் குறை படினும் பிறப்பாரொருபுடை யொத்து
அகரவுகரங்கலந்த வோகாரமும் பிரணவமா மெனலுமாமென்
பது. அல்லதூஉம் அகரவுகரங்கலநத சமட்டியிற் பிறந்த
வோகாரத்துடன் "தலைவரன்னவர்க்கே சரண் நாங்களே" யென்
புழிப்போல ஆன்மாவாகிய எனது எனவருமு பரியாயத்தான்
மகரமுங்கொண்டு மூன்றெழுத்தானுமியன்ற ஓம் எனப் பிரணவ
வெழுத்துக்கள் மூன்றையும நிறைத்துணாத்தினு ரெனலுமாம்.

தகரமெய்யின் மேலேற்றி யோகாரத்தைக் கொண்டார்;
தகரமெய் வடமொழிக் காயத்திரியின் முதலெழுத்தாகலானும்,
அது வைதிக மூலமந்திரமாகலானும், ஞானப்பாலூட்டித் தேசி
கன் தம்மை வலித்தாட்கொண்டு சைவநெறியிற் புகுத்து முன்
ஆளுடையபிள்ளை யம்மரபிற் பிறந்தோராகலானும் வடமொழி
யின் வான்மீகா முதலிய விருடிகளால் ஆட்சிபெற்றுத் தகர
மெய் மங்கலமுதலெழுத்தா யமைதலுண்மையானும். அவ்வு
யர்வு கருதியென்க. கருதினுரேனும் "மெய்யினியக்க மகரமொடு
சிவணும்" என்றாற்போலத தனித்தியங்கும் ஆற்றலில்லாத தக
ரம் ஓகார வூர்தியாயினமையிற் பிரணவம்போல அத்துணைச்
சிறப்பெய்தாவாய்மையுங் கொள்ளககிடக்கின்றமையுணாக. அன்
றிப் பிரணவத்தை முன்வைத்தன்றிக் காயத்திரி தனித்து வழங்
காமையுங் காண்க.

இனித்; தோடு இறைவன் செவிக்கணியாவது போல
வெனது புன்சொல்லும் அவர் செவிக்கினிதாகுமென்பார் செவி
யனென்று குறித்தார். இது விண்ணப்பங் கூறுமுறைமை.

இனி; விடையேறியெனப் பெம்மானது தருமஞான வடி
வத்தினையும் மதிசூடியென வவனது தண்ணளியினையும், பொடி
பூசியென வவன்றன் தேசிகத்தன்மை மேற்கோடலையும், கவர்
கள்வனென அன்பராயினாரை யவ்வாசிரியன் வலிந்தாட்கொள்
ளுமுறைமையினையும் உணர்த்துமாறுங் காண்க. இப்பொருட்டு
ஏறி, சூடி, பூசி யென்பனவைகளை யெச்சமாக்கிக் கவர்கள்வனென்
பதனோடு முடிக்க. முடிய, என் அழுகை கேட்டு, எனக்கு மவற்
குமுளதாய அநன்னிய தருமமுணர்ந்து அவ்வுரிமையானே
யென்பால் தண்ணளி சுரந்து என்னையநாதியே பிணித்த சகச
மலத்தை யறுத்துத் தூய்மையனாக்கி யாட்கொண்டருளிய
திறனிதுவெனப பிள்ளையார்தாங் குறித்துணர்த்து மாறு
முணர்க. இப்பொருட்டுப பொடிபூசி யென்பதனான் மலநீக்கங்
கொள்ளுமாறு "பாசமுமங்கது கழியப் பண்ணுதிரு வெண்
ணீறு——மதைதி" எனவும், 'சித்தமல மறுவித்துச் சிவமாக்கி
யெனையாண்ட' எனவும் வருமிக்தொடக்கத்த வுறுதிமொழிக
ளானு முன்னும் காண்க. பின்னதிற் சித்தமலமறுத்தென்னாது
அறுவிததெனப் பிறவினை வாய்பாட்டாற கூறிய மலநீக்கம்
அருட்சத்தியானாவதாகலாற் றேடுடையமெனச சத்தியையு
முடன்வைத்துணர்த்தியதா மென்றதற்குஞ் சான்றாத லறிக.
பாசநீங்கிய வழியும நெடிது காலங் கண்டெரியாது பிறவிக்குரு
டனாயிருந்த வொருவன் இடையிற் குருடு நீங்கிக் கட்புலனெய்தி
னனாக வெய்தியஞான்றும பழைய வழக்கம வந்து பற்றுதலான்
வழிதெரியாது மயங்கி மேட்டைப பள்ளமென்றும், பள்ளத்தை
மேடென்றுங் கருதித் தடுமாறித், தாவியுங் குதித்துந் தள்ளா
டித் திரிதருதல்போல வப்பழக்க முனைத்தலுஞ்செய்யும், மேல்
தள்ளாடிய குருடல்லாக் குருடனைக் கயவனொருவன் கோல்காட்டி
யீர்த்து வழியிலுய்க்குமாறுபோலத் தேசிகன்மேல் ஆட்கொள்
ளலும வேண்டும. அவ்வாறே கவர்தலுஞ் செய்தார். கவர்ந்
தாட்கொண்ட வள்ளலைக் கள்வனென்றார்; பிறர் வயப்பட்ட
தொரு பொருளைக் கள்வனொருவன் அவரை யச்சுறுத்தி வலித்
துப் பொருள்பறிக்குமாறு போலப் பாசப்பிணியை யறுத்து
மீட்டலின் என்க. ஒளிமுன் னிருள்வலி மடங்குதல்போல விறை
முன் மலவலி குன்றி யொடுங்குதன் மரபென்க. இனிப் பசுக்க
ளுக்குப் பாசததை யரித்தலான் அரனென்னும் பொருட்டாய்க்
கள்வனென்பதுமாம. அல்லதூஉம்; யானறியாதேயும் என்
னுணர்வைப் பறித்து வலிந்தாட்கொண்டமையாற் கள்வனென்
றதுமாம் இவ்வாறே "அருந்தவர் காட்சியிற்றிருநத வொளித்
தும்"....... "ஒளிக்குஞ் சோரனைக் கண்டன"மெனவும, "......
கள்வனேயன்னே" யெனவும்,

"பெண்வழி நலனொடும் பிறந்த நாணொடும்
என்வழி யுணர்வுநா னெங்குங் காண்கிலேன்
மண்வழி நடந்தடி வருந்தப் போனவன்
கண்வழி நுழையுமோர் கள்வனே கொலாம்"

எனவும் ஆண்டானடிமைத்திற மரபுண்மையுங் காண்க.

இனி; ஏடுடைய மலரென்றதனான் அன்புணர்த்தி மனமும், பணிந்தேத்த வென்றதனாற் பொறியுணர்த்தி மெய்யும் வாயுங் கூறி மனமெய் மொழிகளான் வழிபட்டமையுந் தெளிக. ஏடு அன்பின் குணம் குவிதற்கிடனாய உறுப்பின்மேனின்றது. உள்ளிதழ் அன்பிற் கிடனாயவாறு அன்பு மணம்.

இனி; உயிர்கட்கென்றே யிறைவன் சாங்கோபாங்கங்களை மேற்கோடலியல்பு. சாங்கம் உரியது. உபாங்கம் உடைமை. ஈண்டுச்சாங்கம் செவியும், உபாங்கம் விடையும் மதியும் பொடியுமாயின. "அருளரன்றன் கரசரணாதிசாங்கம்......தருமருளுபாங்கமெல்லாந்...தனக்கொன்றின்றி, யருளுருவுயிருக்கென்றே யாக்குவனமலன்றானே" என்ப சித்தித் திருவிருத்தத்துள்ளும். விடையும் மதியும் பொடியுமாகிய உடைமை பூண்டு, உருவக் காட்சி யுணர்த்த நின் தனதியற்கை வடிவே குருவடிவாக முன்னின்று பாலூட்டன் வாயிலாய் உபதேசித்தாண்டமை யுணரப் படும்.

இனி; ஆளுடைய பிள்ளையார் வைதிகமரபிற் பிறந்தாராகவிற் செவியும் விடையும் மதியும் பொடியுங் கீழ்ப்போன சகுணோபாசனைக்குரியவென வொதுக்கி, நிர்க்குணோ பாசனையே தம்மரபென வம்மரபினர் உயர்த்து நிறுத்து மியல்பினராகலாற் குணமற்றதெனக் கொள்ளுமவர் போலாது, குணமற்றது பிரமமாவெனிற் பதியியல்பு குன்றுமாதலின் நன்றாய்க் குணமுமிழிக்கப்படும். அதுவாகாதே பின்னை இறைவன் வேண்டுதல் வேண்டாமையில னாதலின் சமயாதீதப் பழம்பொருள் என்றாற் போலக் குணத்தையுங் கடந்து அப்பாற் பட்டவனென்றும் உண்மைப்பொருள் நிறீஇ நிர்க்குணோ பாசனையை உயர்த்து வைத்தும் சகுணமும் அதற் கங்கமாயுயர்த்தப்படுவதோர் சிவோபாசனையாமெனக் கொள்ளும் சைவநெறியுயர்ந்ததென்ப வாகலானும் பிள்ளையை இறைவன் பாலூட்டி வைதிகப் பிறப்பினின்று மாற்றி ஞானசம்பந்தப் படுத்திச் சைவப்பிறப்பளித் தமை தோன்றப் பிரமபுரமெனப் பிரமப்பெயரான் அறிவுறுத்தினாரெனலுமாம். உறுத்த; இறைவன் பிள்ளையாரைச் சமய தீக்கை செய்து சைவநெறியிற் புகுத்திய முறைமையுமினிது

விளங்கும். இதற்கேற்பப் பீடடையைப் பிரமபுரத்திற்கேற்றது தேசிகன் என்னும் பொருளில் நிற்கும் பெம்மாற்கேற்றுதலே சால்புடைத்தென்க. இது கருதியே அகத்தியரும் "பீடுடைத் தேசிகன் பேரருளாகும்" எனக் கூறியவாறுமுணர்க. பீடுடைப் பிரமபுரத்திற் கடையாக்கின் இறைவன்றான் இவ்வாறு எழுந்தருளிவந்து அமர்தற்கு அத்திருப்பதிதான் முன்னாடுடைய பெருமையை யுணாததுமென்க.

இனி: மேவியது பண்டுதொட்டுத் திருக்கோவில் கொண்டு மேவியதும், இப்பொழுது பல்லோருங் காண விடையேறி மதி சூடிப் பொடிபூசி மேவியதுமென விரண்டினுமியையும்.

இனி, விசும்பிடைத் தோன்றுமிறைவனைச் சேய்மைக்கட் சுட்டாகவவனெனச் சுட்டாது அண்மைக்கண்ணதாகிய விவனெனச் சுட்டியது சேய்மைக்கட் டோன்றினானேனும் தொன்றுதொட்டே யெனக்கவனன்னியனல்லன் அனன்னியனுமென்றுணர்த்துதற்கெனக. இதனை ஞானசம்பந்தனென்னும் பெயருண்மையானுமுணர்க "அன்னியரின்மையி னரன்கழல் செலுமே" என மெய்கண்டாருரைத்துங் காண்க.

இனி, 'நீ யார்தந்த பாலையுண்டாய்' என வெகுண்டு, 'எச்சின்மயங்கவுனக்குப் பாலை யூட்டினாரைக் காட்டு' என வொரு கோலானோச்சிக் கடிந்து வினவினார்க்கு யான் வாய்விட்டழுதேனாக என் அழுகைகேட்டு யான் முன் வழிபட்ட காரணத்தானே தனது சத்தியுடன் விடையேறி மதிசூடிப் பொடிபூசி என்னைக் கவர்ந்து அருள்செய்தான் இவன் அவன் எனக்கேயன்றி உமக்கும் வேறல்லன், வேறு புலத்தனுமல்லன் உம்மால் முப்பொழுதும் வழிபட்டேத்தும் பிரமபுரமேவிய பெம்மானே யாமென்றாரென வினைத்துக்கொள்க.

இனி; "எல்லாச் சொல்லும் பொருள்குறித்தனவே" என்பவாகலின் அன்றே யசைநிலை. இசைப்பொருளொன்றே தரும் ஏனையசைகள்போலாது 'அன்றீற்றேயுங்...குறிப்பொடுகொள்ளும்" என்பதனான் இவனை முன்னைநாள் மலராற் பணிந்தேத்தினமையானே அப்பயனை யெனக்கவ னுகர்வியா தொழியுமோ வென்னுங் குறிப்புணர்த்தினாரெனலுமா மென்க. எனவே எனக்குப் பாலூட்டியா னிவனல்ல தில்லை என்றவாறாயிற்று.

இனி, இச்செய்யுள் தேசிக முறைமையும் இனிது விளக்கியவாறும். "தம்முதல் குருவுமாய்த் தவத்தினிலுணர்த்தவிட்டு" என்பதோத்தாகலின், தோடு கூற்றுப் பித்தா மூன்றும் பீடுடைத்தேசிகன் பேரருளாகும் என்பதனானுணர்க.

இனி அத்தேசிக முறைமை மூன்றுவகைப்படும். அவை உருவக்காட்சியும், அருவக்காட்சியும், உருவருவக்காட்சியுமாம், அவற்றுட் பிரமாபுரமேவிய பெம்மான் என்றதனான் "மன்றுளே மாறியாடு மறைச்சிலம்படிகள் போற்றி" என்புழிப்போல உருவக்காட்சியும், 'தோடுடைய செவியன் விடையேறி மதிசூடிப் பொடிபூசி' என்றதனான் "ஏற்றுக்குன்றுளே யிருந்து காட்சி கொடுத்தருள் கோலம்போற்றி" என்புழிப்போல வுருவருவக் காட்சியும், என்னுள்ளங் கவர்கள்வன் என்றதனான் "புலன்களைந் தார் மெய்யுணருள்ளந்தோறுஞ் சென்றுளே யமுதமூற்றுந் திருவருள்போற்றி" என்புழிப்போல அருவக்காட்சியு முணர்த்துவ துணர்க. உணர, ஆளுடையபிள்ளையார் மூவகையுயிர்களும் பெறும் மூவகைக்காட்சியும் ஒருங்கே யேந்திய பேரருளாளர் என்பதும் பெறப்படும்.

விரிவஞ்சி யிவ்வளவி னித்திருப்பாட்டுரை முடிந்ததென்க.

தேரையர் மகாகரிசல்

[திரு. மா. வடிவேலு முதலியாரவர்கள்]

இத் தமிழ் நாட்டில் பலர் மருத்து நூல்கள் செய்திருக்கின்றனர். அவர்கள் சித்த வகுப்பினரென்றும், மருத்துவ வகுப்பினரென்றும் இருவகையினர் என்று கூறுப. அவர்களில் தேரையர் என்பார் மருத்துவ வகுப்பினராவர். இவரைத் தேரையர் என்று வழங்கப்படும் பெயரைக்கொண்டு பார்ப்பனரென்று பகர்வாருஞ் சிலர் உளர். அற்றன்று. இவர் தாம் செய்த நூல்களிலெல்லாம் தம்பேரைத் தேரன் எனவே சொல்லியிருக்கின்றனர். அது, வேலன் என்கிறபோ வேலையன் என்றாயினாற் போலத் தேரன் என்கிற சொல் தேரையன்என வந்த தொன்றே யாமென அறிஞர் கொள்வர்.

இவரால்,

"சிகாமணி வெண்பாநி கண்டு சேகரப்பா
தேரையர் காப்பியந் தருநாட கமந்தாதி
மிகாவண்ண நாண்மாலை யமக வெண்பா
விளங்கெதுகைப் பாவிவையெல் லாரு மெச்சு
மகாமகிமைக் கரிசலெனு முறையீ ராறும்"

என்றபடி பன்னிரண்டு நூல்கள் செய்யப்பட்டன வென்ப. இவற்றில் முதலில் மகாமகிமைக் கரிசலை இச் செல்வி வாயிலாக மருத்துவா யாவருக்கும் பயன்படுமாறு விரிவுரையோடு எழு தத் துணிந்தனன். இது கற்றோர், இதிற் குற்றமுளதேல் அன்பு கூர்ந்து தெரிவிப்பின் அதைத் திருத்திக்கொண்டு அன்னார் பேருடன் வெளியிடத் துணிந்துளேன்.

விரிவுரை

பாயிரம்

மூத்தப்பிள்ளையார் வணக்கம்

நேரிசை வெண்பா

நல்லாயுள் வேதமுறை நண்கரிச லாசிரியஞ்
சொல்ல வெனக்குத் துணையாமே—வில்லைக்
கணையா லடலையைத்தீக் காய்தலினவ் வைக்குத்
துணையான பாதத் துணை.

சொற் கூட்டு:—அவ்வைக்குத் துணையான பாதத்துணை, நல்லாயுள் வேதமுறை நண்கரிசல ஆசிரியம் சொல்ல, எனக்கு வில்லைக் கணையால் அடலை ஐத்தீக் காய்தலின் துணை ஆம்: ஏ; என்பது.

(சொ-ள்) அவ்வைக்கு=ஔவையாருக்கு, துணை ஆன=(சுந் தரமூர்த்தி சுவாமிகள் சேரமான் பெருமாள் நாயனாரோடு தன் னைக் கயிலாயத்திற்குச் சேர்க்க) உதவியாயிருந்த, பாதத்துணை= (மூத்த பிள்ளையாருடைய) இரண்டு திருவடிகள், நல்=உயர்ந்த, ஆயுள் வேதம் முறை=தெனமொழியாலான ஆயுள் மறையில் சொல்லப்பட்ட முறைப்படி, நண்=(நோய்க்குறிகளும் மருந்து களும்) பொருந்தியிருக்கின்ற, கரிசல்=(மகா) கரிசல் என்னும் பேருள்ள இந்நூலை, ஆசிரியம=ஆசிரிய (குறுந்தாழிசைவருக்க) மாக, சொல்ல=சொல்லுதற் பொருட்டு, எனக்கு(உம்)=என் பொருட்டும், வில்லை=மனோசிலையை.கணையால்=சிறு திப்பிலியின் நீரால், (பண்ணின) அடலை=வெண் பொடியானது, (பஸ்பம்) ஐ தீ=நீர்ச் சுரத்தையும், (ஐயம், சிலேஷ்மம) அதின் கிளைநோய் களையும், காய்தலின்=போககடிப்பது போல, (போக்கி உடலைக் காப்பதுபோல) துணை ஆம்=(இந்நூலுக்கு யாதோர் இடையூறு முண்டாகாமல் அவற்றையெல்லாந் தடுத்து) உதவியாய் (இந் நூலை) நன்றாய் நிறைவேற்றும். (எ-று)

ஏ-அசை.

பாதத்துணை, சொல்ல, துணையாம் என முடிக்க.

(பொ-ரை) ஔவையாருக்கு உதவியாயிருந்த மூத்த பிள்ளையாருடைய இணையடிகள் உயர்ந்த தமிழ் ஆயுள் மறைகளிற் சொல்லப்பட்ட முறைப்படி நோய்க்குறிகளும், மருந்துகளும் அடங்கியிருக்கிற கரிசல் என்னும் பேருள்ள இந்நூலை, ஆசிரியக் குறுந்தாழிசை வர்க்கமாகப் பாடுதற்கு, என் பொருட்டும் மனோசிலையைத் திப்பிலிச் சாற்றால் பண்ணின வெண்பொடியானது ஐய சுரத்தையும் அதன் கிளைநோய்களையும் போக்கி உடலைக் காப்பதுபோல இந்நூற்கு யாதோர் இடையூறும் உண்டாகாமல் அவற்றையெல்லாந் தடுத்து உதவியாய் (இந்நூலை) நன்றாய் நிறைவேற்றும் என்பது.

இந்நூல் இத் தமிழ் நாட்டிற்குரிய தாதலின் பல தமிழ் மருந்து மறைகளை ஆராய்ந்து செய்யப் பட்டதென்பார், 'நல்லாயுள் வேதமுறை' என்றார்

வில்-சிலை. அது மனோசிலைக் காயிற்று. இவ்வாறு கூறுதல் இந் நூற் றலைவர் வழக்கம்.

'அவ்வைக்குத் துணையான பாதத்துணை' எனவே, அதற்குரிய முதல் அவாய் நிலையான் வந்தது.

இன்-உவமவுருபு.

இதனால் திப்பிலிச் சாற்றால் மனோசிலை வெண்பொடி (பஸ்பம்) ஆகுமெனவும், அவ்வாறான வெணபொடி ஐய சுரத்தைப் போக்கடிக்கும் எனவும் விளக்கியவாறாம்.

மனோசிலை ஐய சுரத்தை நீக்குமென்றதை,

"　　—கொடிய குஷ்டம்
காய்ச்சல் நடுக்கலஜ கல்லிரைப் புச்சிலந்திப்
பேச்சறுமனோசிலைக்குப் பேசு."

எனவரும் பொருட் பண்பு நூலால் (குணபாடம்) உணர்க.

ஐய சுரத்தின் தன்மையை,

"வாக்கதனு லேயைய சுரத்தின் செய்கை
　　வகுத்துரைக்க மானேகேள் வழுவில்லாத
நாக்குமுகம் வெளுத்திருக்கு மிடறு மார்பும்
　　நவிலரிய வலியெடுக்கு மிருமலுண்டாம்
ஆக்கையெலாந் தினவாகு மேல்மூச் சாகும்
　　அரோசகமா கும்மூச்சுத் தடைய தாகி
நீக்கரிய தாகமுட னிரைப்பு மாகி
　　நெருங்கியவிக் கலுமருவி நிகழுந் தானே"

திருப்பொன்னூசல்

"மூக்குத்தண்டு புருவமிமை முகநோவாகி முகமறைத்து
நாக்குமுதடும் வழுவழுத்து மலம்வீழாம னடுக்கமுற்றுத்
தூக்கமில்லா துடற்றியிர்த்துத் தொலையாவாய்நீர் தான்பெருகும்
தேக்குமணிசேர் மலர்க்குழலாய் சேத்மசுரத்தின் செயலிதுவே"

"சந்தாப* மானசிலேத் துமசு ரத்தைச்
சாற்றிடவே நாக்குமுகம வெளுத்துக் காணல்
மந்தாப† மார்நோத விருமல் விரைத்து
வருகுதல்வாய் துவர்த்துமே யுருசி யில்லை
முன்றுப மூச்சுவிடப் போகா மற்றுன்
முயங்கியே விக்கலொடு தாகங் காணல்
சிந்தாப‡ மிடறநொந்து மேன்மூச் சாதல்
திணவெடுத்தல் தியங்கிடுதல் செப்பு நூலே."

என வரும் இச் செய்யுள்களா னுணர்க.

ஆசிரியஞ் சொல்ல என்றதால் இவர்க்கு யாப்பைச் சொல் லுதலும் வழக்குப்போலும்! (௧)

(தொடரும்)

திருப்பொன்னூசல்

[இளவழகனார்]

சீர்ஆர் பவளம்கால் முத்தம் கயிறாக
ஏர்ஆரும் பொற்பலகை ஏறி இனிது அமர்ந்து
நாராயணன் அறியா நாள்மலர்த்தாள் நாய்அடியேற்கு
ஊர்ஆகத் தந்தருளும் உத்தர கோசமங்கை
ஆரா அமுதின் அருள்தாள் இணைபாடிப்
போர்ஆர்வேல் கண்மடவீர் பொன்னூசல் ஆடாமோ.

(திருவாசகம், திருப்பொன்னூ, ௧)

'சிறப்புப் பொருந்திய பவளத்தூண்களே கால்களாகவும், முத்துக் கோவைகளே கயிறுகளாகவும் அமையப்பெற்ற அழகு நிறைந்த பொன்னு லான இவ்வூஞ்சற் பலகைமேல் ஏறி இனிமையா யமர்ந்து, திருமால் தேவனும் அறியமாட்டாத புத்தம் புதிய தாமரை மலரை யொத்த திரு வடியை நாய்போன்ற அடியேனுக்கு இருப்பிடமாகக் கொடுத்தருள் கின்ற திருவுத்தரகோசமங்கைக்கண் எழுந்தருளியிருக்குந் தெவிட் டாத தெள்ளமுதமாகிய சிவபிரான்றன் அருண்மிக்க இரண்டு திருவடி

* சந்தாபம்-துன்பம். † மந்தாபம், மந்தம்+ஆபம்-மெதுவாக நீர் நிறைதல்.

‡ சிந்தாபம், சிந்து+ஆபம்-மூக்கு நீர் சிந்துதல்.

களையுங் குழைந்து யாடிப் போர்த்தொழில் வாய்ந்த வேல்போலுங் கண்களையுடைய இளநலம் வாய்ந்த பெண்களே! நாம் பொன்னூஞ்சல் ஆடுவாம்' என்பது.

சீர் - பவளத்துக்கும் முத்துக்கும் உள்ள ஒளிச்சிறப்பு. பவளமும் முத்தமும் அருபெயர்களாய் முறையே அவற்றாலான தூணையுங் கோவையையும் உணர்த்தா நின்றன. இங்கிவர் கூறினாற்போலவே சிலப்பதிகார ஆசிரியரும் "வயிரமணித் தூண்"* என்று தூணினைச் சிறப்பித்தல் காண்க. 'பவளம் ஆக' வென்று கூட்டிக்கொள்க. இங்குக் கூறப்பட்ட முத்துக்கள் பெருமுத்துக்கள். இனிது அமர்தல் - மகிழ்ச்சியுடன் அழகுந் தோன்றும்படி உட்காருதல். நாள்மலர்த் தாள் - அன்று பூத்த புதுப்பூவைப் போலுந் திருவடி; அதாவது மலர்ச்சியுங் கிளர்ச்சியும் அழகும் மணமும் நறவும் மிக்க தாமரைப் பூவையொத்த திருவடி; அவற்றைத் திருவடிக்குக் கொண்டு கூட்டும்போது அழகும் அருளின்பங்களுமுடைய திருவடியென்று உரைக்க. ஊர் - ஆகுபெயராய் இங்கு இருப்பிடத்தை யுணர்த்திற்று. நாண்மலர்த்தாள் நாயடியேற்குத் தந்தருளினமையால், அவன் அருட்டாளிணை பாடிப் பொன்னூசலாடுவாமென்பது. பெண்களென்பார், தோழிகளென்று கொள்க. 'ஊசல்' என்பதே பின்பு 'ஊஞ்ச'லென்று விரிந்தது. 'ஆடுவா'மென்பது 'ஆடா'மென நின்றது. ஓ - அசை.

தலைவனுக்குந் தலைவிக்கும் நிகழ்ந்த திருமண நிகழ்ச்சியினால், தலைவன் தனது திருவடி நிலையை இருப்பிடமாகத் தலைவிக்குக் கொடுத்து ஆண்டுகொண்டானென்பது பெறப்படுதலால், அவ்வுண்மை யுணர்ந்த தலைவி அங்ஙனந் தன் தலைவன் தனக்கு வாழ்விடமென் றளித்த அருளும் அருமையும் நிறைந்த அவன்றன் றிருவடியிணைகளைத் தன் தோழியருடன் பாடி அவனோடிருந்து பொன்னூசலாடுகின்றாளென்க. பெரியார் திருவடி யென்பது அப்பெரியார்தம் அருளேயா மாதலாலும், அதனையே மேலுள்ள பொன்னூசற் பாட்டில் 'அருள்தாள்' என்று மாணிக்கவாசகப்பெருமான் குறித்திருக்கின்றனராதலாலும் ஈண்டுத் தலைவிக்கு வாழ்நாளிருப்பிடமென்று கூறப்படுந் தலைவன் றிருவடி அவன்றன் அருளியல்பே யாகுமென்று அறிந்துகொள்க. என்னை? தலைவனது அருளியல்பே தலைவியின் வாழ்நாளின்பத்துக்கு ஏதுவாதலி னென்பது.

இனித் தோழி செவிலிக்கு அறத்தொடு நின்ற தலைவியின் களவொழுக்கச் செய்தி, நற்றாய்க்குந் தந்தை தமையன்மார்க்கு மெல்ல மெல்ல எட்டினமையின், அவரெல்லாம் அதனைப் பொறுமையுடன் ஆழமாக நினைந்து பார்த்துத் தலைவியின் ஒழுகலாறு குற்றமில்லதென்றும், அறநெறியே யாகுமென்றும், அந்தமட்டும் அஃதவட்கு நேர்ந்தது நன்றேயாமென்றும், தீங்கு பயவாது நன்மைக்கே ஏதுவான இச்செய்தி திருவருட்குறிப்பின்றி நிகழ்ந்திருக்கமாட்டாதென்றும், ஆகவே நாமெல்லோமும் அவள் செய்கையோடு ஒன்றுபட்டு அவள் விரும்பியவாறு அவடன் காதலனுக்கே அவளை மணஞ்செய்து காணற்பாலமென்றும் பொருத்தமான முடிவுக்கு வந்து அதற்கேற்ற முறையிற் றிருமணத்

---

*சிலப், மங்கல, ௬௨.

தினை நடத்திவைப்பர். செவிலி நற்றாய் முதலியோர் நுண்ணுணர்வு சாலாராயிருந்தவிடத்துத் தலைவியின் றிருமணம் நிகழ்தற்குச் சிறிது காலந் தாழும். தோழி தான் அறத்தொடு நின்றமையால் நற்றாய்முதலியோர் என்ன முடிவுக்கு வருகின்றார்களென்பதை மிக்க வேட்கையுடன் உற்று நோக்கி யிருந்து, அவரெல்லாரும் மேற்காட்டியவாறு திருமணம் நிகழ்த்துதற்கே எண்ணித் துணிந்த முடிவினைச் செவிலியால் அறிந்து அம்முடிவு தன்னெண்ணத்துக்கு மாறுபடாமை முடிந்தமைக்கு மகிழ்ந்து திருவருளை வாயார வாழ்த்தியபடியாய்த் தலைவியிடம் வந்து நிகழ்ந்ததனைக் கூறி உளந்துளும்பிய மகிழ்ச்சியிற் றிளைப்பள். நற்றாய் முதலியோர்க்கு எட்டிய தனது களவுச் செய்தி ஏதாய் முடியுமோ வென்று அலைபாய்ந்த நெஞ்சத்தோடு அமைதியின்றி மறுகிக் கிடந்த தலைவியும் அது கேட்டுத் திருவருளால் தனதெண்ணம் பலித்தமைக்கு வியந்து ஆராத பேரின்பப் பெருக்கினிற் றேக்கினள். இவரெல்லாம் இவ்வாறொரு முடிவுக்கு வந்து உவகைக் கடலிற் படிந்திருக்குஞ் செய்தியினை ஒருவழித்தணந்து வந்த தலைவன் தோழியாற் கேட்டு இதுகாறுந் தான் தலைவியைப் பிரிந்து கூட்டமின்றி ஒருவழித் தணந்து நின்றமையாலான பிரிவுத் துன்பமெல்லாம் முற்றும்அற்றுப்போகத் தன்னைமறந்த உள்ளக் களிப்பெனும பேராற்று வெள்ளத்தில் நீராடலானான்.

இங்ஙனமாகத் தலைவன் உளப்படப் பெண்வீட்டாரெல்லாருந் தலைவிக்கு நிகழவிருக்குந் திருமண நிகழ்ச்சிப் பொருட்டுப் பெரிதும் மகிழ்சசி யுடையராய் அதனை அவாவியிருக்கையில், அந்தத் திருமண வேற்பாட்டை நிறைவேற்றுவித்தற்குத் தான் செய்யவேண்டும் முன் முயற்சிககாகத தலைவன் தன் தலைவியைப் பிரிந்து பொருள்தேடிச் செல்வான். வரைதற்பொருட்டுப் பொருள்தேடக் கருதித் தலைவன் தன தலைவியைப் பிரிந்து செல்லலால், இப்பிரிவு ‘வரைபொருட் பிரிவு’ என்று கூறப்படும். பிரிந்து சென்று வேண்டும் பொருள்களைச் சேகரித்துக்கொண்டு மீளுந் தலைவன், தன் சுற்றத்தவர்களை முன்கொண்டு தலைவியின் இல்லம் அண்மி மணமுரசு ஒலித்துப் பெண் பேசுவிப்பான். அஃதறிந்த தலைவியின் சுற்றத்தவர்கள் தமது இல்லத்தை நிறந் தீட்டித் தோரண முதலியன நாற்றிக் கவின்படுத்திப் பொற்குடங்களும் ஐந்தலை விளககுகளும் பிறவும் நிரல்பட வமைத்துத் தலைவன்றன் சுற்றத்தவர்களைத் தாமும் எதிர்மண முரசு ஒலித்து அன்புடன் வரவேற்று அவர் விரும்புமாறு பணிந்தொழுகி அவரவாகககு வேண்டும் இருக்கையுஞ் சிற்றுண்டி முதலாயினவும இனிதுகொடுத் தாட்டி அளவளாவி இவ்வளவும் இனிமையாய் நடந்தேறியபின, ஒரழகிய கூடத்தில் எல்லாருமாய் ஒருங்கமர்ந்து எல்லாம் வல்ல தமது வழிபடு கடவுளை அன்பினால் உருகி வழுத்தி வந்தவர் கருத்தறிந்து இருந்தவர் பெண கொடுத்துத் திருமணம் நடப்பித்தற்கு ஒரே நினைவாய் உளம் நேர்வார்கள். உடனே திருமணம் நிகழ்தற்குரிய நாளும் நாழிகையும் ஆங்குள்ள அருட்பெரியாராற் குறிக்கப்படும். அந்நாளும் நாழிகையும் நேர்படுங்காறுந் தலைவி தலைவன் சுற்றத்தவரெல்லாரும் ஒரே நெஞ்சாய் ஒரு பெரும் மகிழ்ச்சிப் பெருக்கிற் றிளைப்பவர்போல இருந்து திருமண வினைக்கு வேண்டிய எல்லா முன் முயற்சிகளையும் ஒழுஙகுபட முடித்துக்கொண்டிருப்பர். அந்நாட் பொழுதுகளெல்லாம் அவரெல்லார்க்கும் இன்பத் தேறலைச் சொட்டிக்கொண்டிருக்கும் நற்பொழுதுகளாகத் தோன்றும்.

இனி, எதிர் நோக்கிய நாளும் நாழிகையு நேர்ந்ததும் தலைவியின்
வீடு ஓரழகிய திருமணக்கூடமாக ஒளியும் மணமும் பெற்று இனிதாய்த்
திகழவும், இன்னிசை மிக்க மணமுரசொலிகள் பலப்பலவாய் நின்று
ஓயாது இசைப்பவும், தலைவியின் இல்லத்தார் மணமிக்க பூந்தொடை
களுஞ் செண்டுகளும், சுவைமிக்க பழங்களுந் தின்பண்டங்களும், நறு
மணக் கலவைகளும் பிறவும் இளநலமிக்க மங்கைப் பெண்கள் ஏந்தி
எதிர்கொள்ளத் தாமும் எதிர்கொண்டு தலைவனையும் அவன் சுற்றத்த
வர்களையுங் கலந்து வரவேற்றுப் பெரிதுமகிழ்ந்து அவர்கட்கு இருக்கை
யமர்த்தித் தலைவனையுந் தலைவியையுங் கண்டார்தங் கண்ணையுங் கருத்
தையுங் கவருமாறு மணக்கோலஞ்செய்து திருமணக்கூடத்துக்கு
அழைத்துக்கொண்டுவந்து ஒருவர் பக்கல் ஒருவராக அவரை அமர்த்தி,
இவ்வாறிவர்தாங் கூடுமாறு முதலிலிருந்தே உறுபெறுந்துணையாய் நின்று
உதவிவந்த எல்லாம் வல்ல ஆண்டவன் திருவருளை எண்ணி நெஞ்சுருகி
வழுத்தி அம்மணமக்களின் கூட்டம் மேன்மேலுஞ் சிறந்து பழமும்
அதன் சுவையும். கதிரும் அதன் ஒளியும்போல ஒத்தொழுகி அறிவிலும்
ஒழுக்கத்திலும் ஆன்றோர் பணியிலும் மேம்பட்டு இல்லறம் நிகழ்த்தி
அங்ஙனம் நிகழ்த்துமாற்றால் இறைவனை வழிபடுமுறை யுணர்ந்து உள்
ளந் துறந்து வழிபட்டு அவ்வாண்டவன் திருவருளை முற்றப் பெற்றிடுக
வென ஆங்குக் குழுமியிருந்த அருட்சான்றோரெல்லாரும் முறை முறை
யும் ஒருங்குமாக வாழ்த்துக்கூற, அம்மணமக்கட்குத் திருமணஞ்செய்
விப்பர். செய்வித்து அம்மணமக்களை ஊஞ்சலிலமர்த்தி அவர்தாம்
ஒருங்கிருக்குங் கூட்ட வழகினையும் அவர்தம் திருவுருவக் கட்டழகினை
யுங் கண்களிப்பக்கண்டு, ஆராமகிழ்ச்சியிற் றோய்ந்து அயர்ந்தனராய்ப்
பின்பொருவாறு ஒருணர் நிலைக்கு வரப்பெறறு உடனே அம்மக்கள்
தாம் தமது இல்லத்திலேயே இருத்தற் கில்லாமையை யெண்
ணிப் பொதுவாக அவர்தம் பிரிவுக்குஞ் சிறப்பாகத் தலைவியின்
பிரிவுக்கும் இனைந்து உள்வருந்தி ஆற்றாராய்ப் பின்னர் அதன்கணின்
றும் ஒருவாறு தேறித் தலைவி தன் காதலனொடு கலந்து மகிழ்தற்கும்
இல்லறம் நிகழ்த்தற்கும் உதவியாகுமாறு சில பொருள்களையுந் தட்டு
முட்டுக்களையுந் தின்பண்டங்களையும் உடைமணி முதலியவற்றையும்
அன்பின் அளித்துத் தலைவியை அவள் தலைவனோடு அவன் சுற்றத்தவ
ருந் தம்மவரிற் சிலருஞ் சூழ அவனூர்க்கு அனுப்பிவிடுவர். திருமண
நிகழ்ச்சி என்று நேருமோ, எவ்வாறு நேருமோ வென்று ஏங்கி எதிர்
நோக்கியிருந்த தலைவி, தான் பெற்ற திருமணக் களிப்பினால் தன்பெற்
றோரின் பிரிவுத்துன்பமும் ஒருவாறு ஆறுதலடையப் பெற்றுத் தலைவ
னோடு அவனில்லம்போந்து அவன் மகிழுமாறு இசைந்தொழுகிக் காத
லன்பிற் சிறந்து இல்லற நிகழ்த்தித் திருவருள் காணத் தொடங்கு
வள்.

என்று இதுகாறுங் கூறிய இம்மணமக்களின் திருமண நிகழ்ச்சி
யுரைப்பொருள்கொண்டு, அரும்பெறன் மணிகள்போல ஆங்காங்கு மிளி
ரும் அரும்பெருங் கருத்து நுட்பங்களைப் பகுத்தெடுத்துப் பின்னவற்
றை விளக்கி நிறுத்துங் கட்டாயம் இக்கட்டுரைக்கு உண்மையால், அவை
தாமும் இனி ஆராயற்பாலன. அவற்றை ஆராயு முன்னர் மேற்கூறிய
பண்டைத் திருமண நிகழ்ச்சிப் பழக்கவழக்கங்கட் கெல்லாம் பழநூற்
சான்றுகள் காட்டி நிறுத்திக்கொள்ளல் நன்றாம்.

தலைவன் திருமணத்திற்காக வரைபொருட் பிரிந்து பொருள் சேகரித்துக்கொண்டு மீளும்போது தன் சுற்றத்தவர்களை முன்கொண்டு தலைவியில்லம்போந்து பெண்பேசுவிப்பா னென்பதும், அவன் சுற்றத்தவர்கள் தாமேயல்லாமல் தம்மோடு அறநிலைசான்ற வேறு சான்றோர்களை வைத்தும் பெண்பேசுத லுண்டென்பதும் 'தலைமகன் றமர் பார்ப்பார் சான்றோரை முன்னிட்டு அருங்கலங்களொடு வரைதற்குப் புகுவார்'* என்னும் இறையனாரகப்பொருளுரையினுற் றுணியக்கிடக்கின்றன. அங்ஙனந் தலைவன் றன் சுற்றத்தார் அறநெறிச் சான்றோரையும் உடன்கொண்டு சென்று தலைவியில்லம் அண்மி மணமுரசொலித்துப் பெண் பேசும்போது தலைவியின் சுற்றத்தார் தமதில்லத்தைத் தோரண முதலியன நாற்றிக் கவின்படுத்திப் பொற்குட முதலானவைகளும் நிரல்பட வமைத்து எதிர்கொள்ளும் வழக்கம் 'தேர்வரவு கூறுநின்ற நிலைமைக் கண் மணமுரசு கேட்டு மனையிலுள்ளார், இஃதிவளை நோக்கி யொலியா நின்றது மணமுரசென உட்கொண்டு யாம் பூரண பொற்குடந் தோரண முதலாயினவற்றான் மனையை யலங்கரிப்போமென மகிழ்வொடு கூறா நிற்றல்'† என்னுந் திருக்கோவையாருரையினுற் பெறப்படுகின்றது. தலைவியின் வீடு அழகுபடுத்தப்படும் இச்செய்தி ஒரு துறைப்பொருளாகவே எடுக்கப்பட்டுப்,

"பூரண பொற்குடம் வைக்க மணிமுத்தம் பொன்பொதிந்த
தோரண நீடுக தூரிய மார்க்கதொன் மாலயற்குங்
காரண னேரணி கண்ணுத லோன்கடற் றில்லையன்ன
வாரண வும்முலை மன்றலென் றேங்கு மணமுரசே"

என்று அதற்கோரழகிய செய்யுளும் அருளப்படுகின்றது.

இனி இவ்வாறு தலைமகன் இல்லத்தார் பெண் பேசச் சென்றஞான்று தலைவியின் இல்லத்தார், உண்மைக் களவொழுக்கத்தின் நன்மைப்பேற்றையும், தலைவன் தலைவியரின் ஒருமைப்பாட்டையும், எவரானுந் தடுக்கப்படாது அவ்வெல்லார் தடையினும் மீறிச் செல்லும் அவர்தம் ஒழுகலாற்று நுட்பத்தையும், அவ் வொழுகலாறு தலைவன் றலைவியரின் ஆற்றலுக்கும் அடங்காது திருவருட் கடலில் அவரைக் கொண்டு சேர்க்கும் ஒரு பெரும் புணையாந் தாழ்ப்புத் தன்மையையும், அது திருவருளியலாலும் ஊழ் வலியாலுமே நடைபெறுமாற்றையும் நுணுகியறிந்து அவர்தம் வாழ்க்கையைத் தாமே முனைந்து நின்று செம்மைப்படுத்துத் திருவருட் போக்குக்கு இசைந்து நிற்றற்குரிய ஒள்ளறிவு சாலாத வெள்ளறிவினராயின், 'பரியம்' வேண்டுமென்றும், தலைமகன் அதனைத் தருமிடத்து, நிரம்பக் கொடுத்தல் வேண்டுமென்றும், அவர் விரும்பியவாறே அவன் நிரம்பக் கொடுத்த விடத்தும் 'நாள் பார்த்து வரல்வேண்டும்' 'புள்திருத்தி (சகுனம் பார்த்து) வரல் வேண்டு' மென்றும், இங்ஙனமே இன்னும் பிறவாறுங் கூறிப் பெண் கொடுக்க இசையார். இன்னும் யாங்கள் எங்கள் மகட்கு இவ் வாண்டிற் றிருமணஞ் செய்ய வியலாது; இனி வரும் யாண்டிற்றான் செய்தல் வேண்டுமென்று கூறியும் மறுப்பா. இவ் வுண்மைகளெல்லாமும்,

---

*இறைய, உக. †திருச்சிற், உகக௬.

"வரைவெதிர் கொள்ளாது தமரவண் மறுப்பினும்" *

என்னும் இறையனார் நூற்பாவானும், 'பரியஞ் சிறியதென்றாயினும், இளையளாலோ வென்றாயினும், நாளும் புள்ளுந் திருத்தி வாரீரோ வென்றாயினும் அங்ஙனம் மறுத்தாரென்ப' என்னும் அதன் உரையானும் அறியக்கிடக்கின்றன. இவ்வாற்றாற் காதற் களவொழுக்கம் இத் தமிழ் நாட்டில் யாண்டும் பரவி நன்முறையில் நடைபெற்று வந்த காலத்தினும், ஒருசாரிருந்த அறியாமை விஞ்சிய கீழ்மக்களிடத்தில் இவ்வாறான திருமண வாணிகமும் பிற தாழ்ந்த இயல்புகளும் இருந்தன வென்பது வெளிப்படுகின்றது என்னை? அறியாமையும் அறிவுமே உலகமாதலின். இனி இம் மறுப்புரைபோல்வனவே அறிவுடைய பெருமக்கள் கூறி வரைவெதிர் கொள்ளாது மறுப்பாராயின், அவரெல்லாம் அங்ஙனம் உண்மையிற் கூறி மறப்பாரல்லர். மற்று அருமை புலப்படுத்தற்காகவே இங்ஙனம் மறுத்துரைத்துத் தலைவனையும் அவன்றன் றமரையும் அகற்றி அணுகுவிப்பரென்று அறிந்துகொள்க 'தலைமகன்றமர் பார்ப்பார் சான்றோரை முன்னிட்டு அருங்கலங்களொடு வரைதற்குப் புகுவர்; புக்கவிடத்து ஒரு காலைக்கு மறப்பர் பிற; போதாக் குமரியை யுடையார் போலக் கதுமென நேர்ந்திடாரன்றே' * என்று ஓரிடத்தும், 'தலைமகன் பார்ப்பாரை முன்னிட்டு அருங்கலங்களொடு வரைவு வேண்டி விட்டவிடத்துத் தந்தையுந் தன்னையன்மாரும் வரைவு மறுத்தார்; மறுப்பார் சூழ்தலும் அருந்தலு முடைமையான். நூற்றியாண்டைக் கற்றவரோடு எண்ணிச் செய்யப்படுமாகலாற் சூழப்படும் இனிக் கண்டோரே தம் மகளை வேண்டுவாரைப் பார்த்திருந்தாராகாதே, நாம் இந் நூற்றிடைக் கரும நூற்றுவரே, இவர்களிடை மகட் பெறுவார் யாரெனவும் பெறுதற்கு அருமை யுடைத்தெனவுங் கருத அருந்துப. இனிக் கண்டோரே தம் மகளை வேண்டுவார் உரைப்பனவும் பொய் போலும், வேண்டுதற்கு இடையின்றியே பெற்றாராதலின். இவ்வகை விரைந்து கொடுத்தாராவென்னும் புறவுரை நோக்கியும் அருந்துப: இனி உலகியலானும் அருந்துப.'† என்று பிறிதோரிடத்தும் இறையனாரகப்பொருளுரையாசிரியர் உரை கூறுவதும் இவ்வுண்மையைப் புலப்படுத்தும்.

தலைவியின் வீட்டார் மகட் கொடைக்கு இசைந்த பின்னர், தலைவியின் வீட்டிலேயே திருமணம் நிகழு மென்பதும் மேற்காட்டிய 'பூரண பொற்குடம் வைக்க' வென்னுந் திருக்கோவையார்ப் பாட்டினாலும், அதன் விளக்க வுரையினாலும், பிற குறிப்புக்களாலும் நன்கு பெறப்படும். இதற்கு இலக்கியச் சான்றாகப் பெரிய புராண மெனப்படுந் திருத்தொண்டர் புராணத்திலுள்ள திருமண நிகழ்ச்சிக் குறிப்புக்களும், மணிமேகலை சீவகசிந்தாமணி நைடதம் இராமாயணம் பாரதம் திருவிளையாடற் புராணம் முதலிய ஏனை யிலக்கியங்களிற் கூறப்படுந் திருமண நிகழ்ச்சிக் குறிப்புக்களும் பிறவுமெல்லாம் திருமணம் பெண் வீட்டில் நடைபெறு மாற்றினையே குறித்து விளக்குவனவாய்க் காணப்படுகின்றன. இஞ்ஞான்றுங்கூட, செல்வ்வாழ்க்கையி லுள்ளாரிற் பெரும்பாலாரும் பெண் வீட்டிலேயே திருமணஞ் செய்யு மியல்பு உலக வழக்கிற் காணப்படுகின்றது. ஆகவே தான் இவ்வாறன்றித் தலைமகன் வீட்டிலே நடைபெறுவதான திருமணத்தினை 'ஒழிந்த திருமண'மென்றே பண்டைப்

---

* இறைய, ௨௧.   † இறைய, ௨௮.

பனுவல்கள் பகராநின்றன. அங்ஙனந் தலைமகன் வீட்டில் நடப்பதுங்கூட உடன்போக்கினை மேற்கொண்டு யார்க்குந் தெரியாமல் நடுநிசியிற் புறப்பட்டுத் தன்தலைவனோடு வெளிப்போந்த தலைமகட்கு மட்டுமே தலைமகன் இல்லத்தில்நிகழுமென்க. உடன்போகிய தலைவிமீண்டுந் தன்தலைவனோடு தன்னில்லமே புக்கு மணஞ்செய்து கோடலுமுண்டு. தப்பித்தவறித் தலைவனில்லத்தே அது நிகழ்ந்த விடத்தும், ஆங்கு நிகழ்ந்த இவ்வொழிந்த திருமணம் எவராலும் ஒப்புக்கொள்ளப்படாமையின் மீண்டும் அம் மணமக்கட்குத் தலைவியின் இல்லத்தே தக்க திருமணஞ் செய்யவே பண்டைத் தமிழர் விரும்பி நின்றார். இவ்வுண்மைக ளெல்லாம், ‘இங்ஙனம புகுந்து பெயர்ந்த பின்றைத் தலைமகன் தன்னகத்தே வதுவைக் கலியாணஞ் செய்வா னெடுத்துக்கொண்டானென்பது கேட்டநற்றாய், ஒழிந்த கலியாணஞ் செய்யினும் நம்மகத்தே வதுவைக் கலியாணஞ் செய்ய நேருங் கொல்லோ காளையைப் பயந்தாளென்னும்’ * என்று தெளித்துரை நிறுத்தும் இறையனாரகப்பொரு ளுரையினாலும்,

> “நும்மனைச சிலம்பு கழீஇ யயரினும்
> எம்மனை வதுவை நனமணங் கழிகெனச்
> சொல்லி னெவனோ மற்றே வென்வேன்
> மையற விளங்கிய கழலடிப்
> பொயவல் காளையை யீன்ற தாய்க்கே” †

என்னும் பழந்தமிழ் நூலான ஐங்குறுநூற்றின் செய்யுட் கருத்தினாலும் நன்கு பெறப்படுகின்றன. இவைதம்மின் மட்டுமன்றிப் பிற்காலத்தெழுந்த நம்பியகப்பொருள் விளக்கத்திலும், தலைவியை உடன்போக்கிற் கூட்டிச சென்ற தலைவன் தன் நாட்டின்கண்ணதோ ரிடத்திலேனும் அல்லது தன மனையிலேனும் ஒழிந்த திருமணஞ் செய்துகொள்வானாயினும், அஃது ஆன்றோ ரெவரானும் ஒப்புக்கொள்ளப்படாமையின் அவன் மீண்டுந் தலைவியில்லம் போந்து அந்தணர் சான்றோரை முன்னிட்டு அருங்கலங் கொடுத்து எல்லாரு மறிய விதிப்படி வதுவைத் திருமணஞ் செய்துகொள்வா னென்னுங் கருத்துடன்,

> “தன்னூர் வரைதலுந் தன்மனை வரைதலு
> மெனனுமிவ் விரண்டொழித் தெவற்றினுங் கிழவோ
> னந்தணா சான்றோர் முன்னிட் டருங்கலந்
> தந்து வரைதல் தகுதி யென்ப” ‡

என்றொரு நூற்பா கூறப்படுகின்றமையாலும், இதனோடொப்பவே, அந் நம்பியகப்பொரு ளிலக்கணத்துக்கு உரிய இலக்கிய நூலாகக் கருதப்படும் தஞ்சைவாணன் கோவைக்கு எழுதப்பட்டுள்ள உரைக்கண், இந நூற்பாவினையே யெடுததுக் காட்டித்

‘தன் (தலைவ)னூர் வரைதலும் தன் (தலைவன்) மனை வரைதலும் என்னும் இவவிரண்டொழிதது ‘எவற்றினுங கிழவோ னந்தணா சான்றோர் முனனிட் டருங்கலங் தந்து வரைத றகுதியென்ப’ என்னுஞ்

---

* இறைய, ௨௯. † ஐங்குறு, ௩௯௯.
‡ நம்பியகப்பொருள், வரைவியல், ௨௯.

ரூத்திர விதியாற் சென்றோன் மீண்டுவந்து அந்தணரையுஞ் சான்றோரையும் முன்னிட்டு வரைந்து கொண்டுழிக் கண்டோர் மகிழ்ந்து கூறல்.'

'வரைதல் என்பது ஐம்பத்தாறு நாள் தலைவன் மீண்டு தலைவியில்லின் வாராநின்றுழி தலைவிதம ரெதிர்கொண்டுபோ யழைத்து வந்தபின் உலக வியற்கையின்படி பலவிதமாக அருங்கல முதலிய வேண்டுவன கொடுத்து அந்தணரையுஞ் சான்றோரையு முன்னிட்டு மணச்சடங்குடனே வதுவை முடித்துழிக் கண்டோர் மகிழ்ந்து கூறல்.'

'இங்ஙனமொரு தலைவனுக்கும் தலைவிக்கும் ஒருகால் மணமுடிப்பதன்றிப் பலகால் மணமுடிந்ததாகக் கூறுதல் உலகின்கண் வழங்குவதன்றே, இவ்வாறு கூறிய தென்னையெனின், உடன்போய்த் தன் (தலைவ) னூரின்கண்ணே வரைதலும் மீண்டுவந்து தன் மனையின்கண்ணே வரைதலும் அந்தணர் சான்றோரை முன்னிட்டுத் தாய்தமரறிய மணச்சடங்கின் முறையே முடியாமையான் அவையிரண்டும் மணமாகா; அஃதென்னையெனின், உலகியல்பின்கண் தாய்தமரறியாது மணச்சடங்குமின்றி ஒருவன் உரிமை கருதித் தாலி கட்டு மணமென்று உலகின்கண்ணுள்ளார் கைக்கொள்ளார்; அவர்க்கே மீண்டும் மணச்சடங்குடனே மணமுடிப்பார்.'*

என்னும் உரைக்கூற்றுகள் உரைக்கப்படுகின்றமையாலும் நிகழ்ச்சி முறைகளோடு கூடிய பண்டைத் திருமணங்கள் பெரும்பாலும் பெண் வீட்டின்கண்ணேயே நிகழ்த்தப்பட்டனவென்பதும், ஆங்கு நிகழ் மணங்களே முறையாகுமென்றுங் கருதப்பட்டன வென்பதுந் தெளியப் புலனாதல் காண்க.

இனித் தலைவியின் இல்லத்தே நிகழ்த்தப்படும் இத்திருமணம் எவ்வெவ்வாறெல்லாம் பண்டு நிகழ்த்தப்பட்டதென்பதற்குப் பண்டைத் தமிழ்ப் பனுவல்களில் விளக்கமான சான்றுகள் யாங்காணக் கிடைத்திலவெனினும், பொதுவான சில செய்திகட்குமட்டும் ஆங்காங்குச் சில குறிப்புகள் காணப்படுகின்றன.

"மைப்பறப் புழுக்கி நெய்க்கனி வெண்சோறு
வரையா வண்மையொடு புரையோர்ப் பேணிப்
புள்ளுப்புணர்ந் தினிய வாகத் தெள்ளொளி
யங்க ணிருவிசும்பு விளங்கத் திங்கட்
சகடம் வேண்டிய துகடீர் கூட்டத்துக்
கடிநகர் புனைந்து கடவுட் பேணிப்
படுமண முழவொடு பரூஉப்பணை யிமிழ
வதுவை மண்ணிய மகளிர் விதுப்புற்று........
மழைபட் டன்ன மணன்மலி பந்தர்
இழையணி சிறப்பிற் பெயர்வியர்ப் பாற்றித்
தமர்நமக் கீந்த தலைநாள்"†

என்று வரும் மிகப் பழையதான அகநானூற்றுச் செய்யுட் பகுதியினால், அக்காலத்தில் நிகழ்ந்த திருமணநாட்களில் நெய்யுங் கனியுங் கூடிய

---

* தஞ்சை வாணன்கோவை, ௩௬௬. † அகம், ௧௩௬.

வெள்ளிய சோறுகொண்டு உறவினரெல்லாரையும் உண்பித்துப் பின்னும் ஆங்குவரும் எல்லா ஏழைகட்கும் அவர்கள் பசியாறும்படி ஈகையெண்ணத்தோடு உணவுபடைத்தல் நிகழ்ந்ததென்பதும், வெண்மதியம் 'சகடம்' * மென்னும் விண்மீனைக் கூடும் நல்ல நாள் பார்த்து மணமக்கட்குத் திருமணம் நிகழ்த்தப்பட்டதென்பதும். திருமணநாளிலே அது நிகழும் இல்லம் காட்சிக்கினிதாம்படி அழகு செய்யப்படுமென்பதும், திருமணம் நிகழ்த்து நேரத்திற் கடவுளை வணங்கியே அதனை நிகழ்த்துவரென்பதும், அந்நாளில் மங்கைப் பெண்களெல்லாருங் கூடி மணப்பெண்ணுக்கு அணியுடையும் மணியிழையும் முதலாயினவெல்லாம் உடுத்திட்டு அழகு செய்வதோடு சிவிறி விசிறுதல் முதலான சிறு பணிகளும் மிகச் செய்வரென்பதும், இங்ஙன நிகழுமித் திருமண நிகழ்ச்சி பூக்களைச் சொரியா நிற்கும் நறுமணமிக்கதொரு நற்பந்தரின்கீழ் நிகழுமென்பதும், பிறவுமான பண்டைத்தமிழரின் திருமண நிகழ்ச்சிப் பழக்கவழக்கங்கள் ஒருவாறு புலனாகின்றன.

மேற்காட்டிய பண்டைத் திருமணநிகழ்ச்சிகளில் திருமணவில்லத்தினைக் கவின்படுத்துவதும், மணநாளன்று வரையாது சோறுபடைப்பதுமான பழந்தமிழ் மக்களின் நாகரிக உணர்ச்சி வளர்ச்சியினைக் காட்டும் இரண்டு உண்மைகளை விளக்கந்தரும் வகையான வேறிரண்டு சான்றுகள் காட்டி இங்குத் தெளியவிளக்குதல் நன்று. திருமணம் நிகழுமில்லத்தில் மல்லிகை முல்லை முதலான நறுமண மிக்க விடு பூக்களும் அவற்றாலான மாலைகளும், சாந்து நாவி முதலான நறுமணப்பண்டங்களும் அவைகலந்த நறுமணக் கலவையும் பயிறலால் அவ்வில்லம் நிரம்பிய மணவீச்சு உடையதாய்த் திகழுமென்பது, நாலாபக்கமும் மணம்வீசும் நறும் பூஞ்செடிகள் நிரம்பிவிளங்கும் மலைச்சாரலுக்குப் பண்டைத் தண்டமிழாசிரியரான இரணியமுட்டத்துப் பெருங்குன்றூர்ப் பெருங்கௌசிகனார் தாமியற்றிய மலைபடுகடாத்தில் மணம் மிக்க திருமணவில்லத்தை உவமையாய்க் காட்டி,

"மணம் இல் கமழும் மாமலைச் சாரல்"†

என்று கூறுகின்றமையாலும், அதற்கு ஆசிரியர் நச்சினார்க்கினியர் 'மணஞ்செய்த மனைபோல மணக்கும் பெரிய மலைப்பக்கம்' என்று உரையெழுதுகின்றமையாலும் நன்குவிளங்கும். இதனோடொப்பவே "மணமனை கமழுங் கானம்" ‡ என்று அகநானூற்றுள்ளும் இந்நறுமணமிக்க மணமனையினையே மணங்கமழுங் கானத்துக்குக் காவிரிப்பூம்பட்டினத்துக் காரிக்கண்ணனார் உவமையாய்க் காட்டினார். இங்ஙனமே, தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியனைப் பாடிய மாங்குடிகிழார், அவன் அப்போரினை வென்ற மகிழ்ச்சிப் பெருக்காற் போர்க்களத்திலே ஒரு வரைதுறையில்லாமல் நிரம்பச் சோறு சமைத்து ஆங்கிருந்த வீரர்க்கும் பிறர்க்குமெல்லாம் வரையாது படைத்துக் களவேள்வி செய்தமைக்

---

* இதனை 'உரோகிணி' யென்பர் சிலப், அரும்பதவுரையாசிரியர், மங், ௫௰.

† மலைபடுகடாம், ௧௫௧.　　　　‡ அகநா, ௱௰.

குத். திருமணவிழா நாட்களில் அங்கு வரும் உற்றார் பெற்றார்க்கும் ஏழை யெளியவாகட்கும் ஒரு வரைதுறையின்றி நெய்ச்சோறு ஆக்கிச் சலியாது தருமாற்றினை எடுத்துக்காட்டும் உவமை,

"ஈனு வேண்மா னிடந்துழந் தட்ட
மாமறி பிண்டம் வாலுவ னேந்த
வதுவை விழவின் புதுவோர்க் கெல்லாம்
வெவ்வாய்ப் பெய்த பூதநீர் சால்கெனப்
புலவுக்களம் பொலிய வேட்டோய்நின்
னிலவுத்திக ழாரமுகக்குவ மெனவே"*

என்று புறநானூற்றுள்ளும் வந்தது.

மேற்கூறியவாற்றால் மணமனையையும் மணமக்களையும் அழகுசெய்தலும், திருமணங் காணவந்தார்க்குச் சோறுபடைத்தலும் பிறசிறு குறிப்புக்களுமட்டும் அறியகிடக்கின்றனவே யன்றி, மணமக்கள் திருமணபந்தர்க்கீழமர்ந்து நன்மணஞ் செய்துகொள்ளு முறைகள் இனையவென்பதும் பிறவும் புலப்பட்டில. ஆயினுந் தமிழ்க்குள்ள ஐம்பெருங் காப்பியங்களுள்ளும் முதற்பெருங் காப்பியமான சிலப்பதிகாரந் தமிழின் வந்த மங்கலவாழ்த்துப் பாடற்கண் அவற்றிற்குச் சில குறிப்புக்கள் காணப்படுகின்றன.

"யானை யெருத்தத் தணியிழையார் மேலிரீஇ
மாநகர்க் கீந்தார் மணம்" †

என்னும் பகுதியில் திருமணம் நிகழ்தற்கு முன்பு மங்கைப்பெண்டிர் சிலரை அழகு செய்வித்து யானைமேலேற்றி நகரெங்குந் திருமண அறிவிப்பினைத் தெரிவிப்பாரென்பது போதரும்.

"அவ்வழி, [குடை
முரசியம்பின முருடதிர்ந்தன முறையெழுந்தன பணிலம்வெண்
யரசெழுந்ததொர் படியெழுந்தன வகலுண்மங்கல வணியெழுந்தது
மாலைதாழ் சென்னி வயிரமணித் தூணகத்து
நீல விதானத்து நித்திலப்பூம் பந்தர்க்கீழ்
வானூர் மதியஞ் சகடணைய வானத்துச்
சாலி யொருமீன் றகையாளைக் கோவலன்
மாமுது பார்ப்பான் மறைவழி காட்டிடத்
தீவலஞ் செய்வது காண்பார்க ணோன்பென்னை"‡

என்பதனால், முரசு முதலிய பல்லியங்க ளியம்பா நிற்க, மணமக்கள் திருமணப்பந்தர்க்கீழமர்ந்து அறநெறியந்தணரை ஆசிரியராகக்கொண்டு, அவர்கள் இறைவனை வணங்கி வழிபடுமுறையினை முன்காட்ட அவ்வாற்றால் மேலேகாட்டிய 'மைப்பறப்புழுக்கி' யென்னும் அகநானூற்றுச் செய்யுளிற்போந்த 'கடவுட்பேணி' யென்னுந் தொடராற் குறிக்கப்பட்ட இறைவன் வணக்கத்தைத் தீயின்வழியாக வணங்கி வழிபடுதலும் வலம் வருதலுஞ் செய்து, அத்தீயுருவான முழுமுதற் கடவுளை உணர்வினைந்து அந்நினைவோடு அவர் முன்பு தாலிகட்டி மணங்கூடுவரென்னும் முதன்மை

---

* புறநானூறு, கஎ௨. † சிலப், மங், ௪௩-௪௪. ‡ ௪௫-௫௩.

யான செய்தி நன்கு வெளிப்படுகின்றது. இன்னானுக்கு இன்னாள் மனைவி யாவாளென்பதற்கு அடையாளமாகத் தமிழ்ப் பெண்டிர்க்கு அணியப்பட்ட தாலியைப்பற்றிய குறிப்பு, ஆயை, உறையூர் ஏணிச்சேரி முடமோசி யார் பாடிய

"ஈகை அரிய இழையணி மகளிர்"*

என்னுந் தொடரிலும் அதன் உரையிலும் புறநானூற்றினுள்ளேயே வந்திருக்கின்றது.

"வால்இழை மகளிர் நால்வர் கூடி"

என்று நல்லாவூர்கிழார் பாடிய செய்யுட்டொடரில் அகநானூற்றுள்ளும் வருதல் காண்க. ஆகவே திருமணத்திற் றலைவிமார்க்குத் திருமணக்குறியாக ஆடவர் தாலிகட்டும் வழக்கம் தமிழ்நாட்டிற் பண்டுதொட்டே நிகழ்ந்துவருகின்றதென்பது பெறப்படும்.

இன்னும்,

"விரையினர் மலரினர் விளங்கு மேனியர்
உரையினர் பாட்டினர் ஒசிந்த நோக்கினர்
சாந்தினர் புகையினர் தயங்கு கோதையர்
ஏந்திள முலையினர் இடித்த சுண்ணத்தர்
விளக்கினர் கலத்தினர் விரிந்த பாலிகை
முளைக்குட நிரையினர் முகிழ்த்த மூரலர்
போதொடு விரிகூந்தற் பொலனறுங் கொடியன்னார்
காதலற் பிரியாமற் கவவுக்கை ஞெகிழாமற்
றீதறு கெனவேத்திச் சின்மலர் கொடுதூவி
யங்க ணுலகி னருந்ததி யன்னாளை
மங்கல நல்லமளி யேற்றினார்"‡

என்னும் அம்மங்கலவாழ்த்தின் மேற்றொடர்ந்த பகுதியினால், திருமணப் பந்தரைச் சூழவிருக்கும் இளமகளிர், விளங்கிய மேனியராய், 'சந்தனமுங் கருப்பூர முதலியனவும் புழுகிலும் பனிநீரிலும் நனையவைத்த' $ நறுமணப்பண்டங்களையும் மலர்களையும் நெய் விளக்குகளையும் அழகிய அருங்கலங்களையும் முளைப் பாலிகைகளையும் தம் கைகளிலே வரிசை வரிசையா யேந்திக்கொண்டு, புன்னகை விளங்கும் முகத்தோடும் ஒதுங்கிய பார்வையோடும் உரையும் பாட்டும் இசைத்தபடியாய்ப் பந்தரைச் சுற்றிவந்து வாழ்த்தும் வழக்கம் வெளிப்படுகின்றது. மகளிராற் செய்யப்படும் இவ்வழக்கமுண்மை சிலப்பதிகாரத்துக்கு முற்பட்ட பத்துப் பாட்டினும்,

"பிடகைப் பெய்த கமழ்நறும் பூவினர்
பலவகை விரித்த வெதிர்பூங் கோதையர்
பலர்தொகு பிடித்த தாதுகு சுண்ணத்தர்"$

என்று மதுரைக்காஞ்சியுள் வந்தது.

இனி, இப்பண்டைத்தமிழரின் திருமணநிகழ்ச்சிப் பழக்கவழக்கங்

---

* புறம், கஉஎ. † அகம், அசு ‡ சிலப், மங், ருச-கூச.

$ மதுரைக்காஞ்சி- ௬௬எ-கூ; நச், உரை.

களைச் செவ்விதின் விளக்கிக் கூறுவதான மற்றொரு அகநானூற்றுச் செய்யுட் கண்ணும்*

"உழுந்துதலைப் பெய்த கொழுங்களி மிதவை
பெருஞ்சோற்று அமலை நிற்ப நிரைகால்
தண்பெரும் பந்தர்த் தருமணல் ஞெமிரி
மனைவிளக் குறுத்து மாலை தொடரி"

எனவும்,

"கோள்கால் நீங்கிய கொடுவெண் திங்கள்
கேடுஇல் விழுப்புகழ் நாள்தலை வந்தென
உச்சிக் குடத்தர் புத்தகல் மண்டையர்
பொதுசெய் கம்பலை முதுசெம் பெண்டிர்
முன்னவும் பின்னவும் முறைமுறை தரத்தரப்
புதல்வன் பயந்த திதலையவ் வயிற்று
வால்இழை மகளிர் நால்வர் கூடிக்
கற்பினின் வழாஅ நற்பல உதவிப்
பெற்றோன் பெட்கும் பிணையை ஆகென
நீரொடு சொரிந்த ஈரிதழ் அலரி
பல்லிருங் கதுப்பின் எல்லொடு தயங்க
வதுவை நன்மணங் கழிந்த பின்றை"

எனவும்,

"கல்லென் சும்மையர் ஞெரேரெனப் புகுதந்து
பேரில் கிழத்தி யாகெனத் தமர்தர
ஓர்இல் கூடிய உடன்புணர் கங்குல்"

எனவும் வருகின்ற பகுதிகளால் முறையே திருமண நாளின் முன்னுளிரவெல்லாம், உழுந்து முதலியவற்றைக் கலந்து குழையச் செய்யப்படுங் 'கூட்டு', 'குழையல்' முதலான கறிவகைகளும் பருப்புச் சிற்றுண்டிகளுங் குழம்புகளுங் கூடிய உணவுவகைகளைக் குவியல் குவியலாகச் சமைத்துச் சேர்த்தல், மனையை அழகு செய்தல் முதலான திருமண முயற்சிகளைச் செய்துவந்து அந்நாள் விடியற் காலையிலேயே அம் மணவினை நிகழ்ச்சியைத் தொடங்குவ ரென்பதும், அப்போது தக்காரான இளமகளிர் சிலர் தலையிலுங் கையிலுமாக நறுமணக் கூட்டங் கலந்த நீர்க்குடங்களை முறைமுறையாகக் கொணர்ந்து முன்னும் பின்னுமாகக் கொடுக்க மக்கட்பேறு வாய்ந்த மணவணியணிந்த மாதரார் (சுமங்கலிகள்) நால்வர் கூடி அம் மணநீரை வாங்கி அதன்கண் மணமலரும் பெய்து, 'கற்புநெறி வழுவாது காதலிற் சிறந்து கணவனுக்கும் விருந்து முதலிய பிறர்க்கும் வேண்டும் நல்லன அளித்து மக்கட்பேறு வாய்ந்து திருவருளால் நின் காதலன் விரும்பும் நன் மனைவி யாகுக'வென வாழ்த்தியபடியாய்க் குளிப்பாட்டி, அதன்பின், முன்பின் பருவத்தின் வேறுபாடு விளக்கி, 'வதுவைமண' மென்பதொன்று அவர் செய்வரென்பதும், மற்றதன்பின், தலைவியை உடையுடீஇ மணியணீஇ மலரீஇ அப்பந்தரமர்த்துப் 'பெருமைபொருந்திய இல்லக் கிழத்தியா'கென நன்மகளிர் வாழ்த்துக்கூற முன் சிலப்பதிகார மங்கலவாழ்த்தின்கட் கூறியாங்குத் திருமணம் நிகழ்த்துவரென்பதும் நன்கு வெளிப்படுகின்றன.

---

* அகம், ௮௬.

இனி,

‘ஆதிக்கரணமும் ஐயர் யாத்த கரணமுமென்னும் இருவகைச் சடங்கானும் ஓர் குறைபாடின்றாய் மூன்று இரவின் முயக்கம் இன்றி ஆன்றோர்க்கு அமைத்தவகையாய்ப் பள்ளி செய்து ஒழுகி நான்காம் பகலெல்லை முடிந்தகாலத்து, களவுப் புணர்ச்சிபோலுங் கற்பினும் மூன்று நாளுங் கூட்டமின்மையானும் நிகழ்ந்த மனக்குறை தீரக் கூடிய கூட்டத்தின்கண்ணும்; அது நாலாநாளை இரவின் கண்ணதாம்.’* என்றும்,

‘முதனாள் தண்கதிர்ச் செல்வர்க்கும், இடைநாள் கந்தருவர்க்கும் பின்னாள் அங்கியங்கடவுட்கும் அளித்து நான்காநாள் அங்கியங் கடவுள் எனக்கு நின்னையளிப்ப யான் நுகரவேண்டிற்று’ என்றும் ஆசிரியர் நச்சினார்க்கினியர் தொல்காப்பியக்கற்பியலுரையில்உரைகிளக்கின்றமையால், மேற்கூறிய முறையிலே நடைபெறுந் தமிழர் திருமணம் மூன்றுநாள் நடைபெற்று முடிய நாலாநாளிரவின்கண் மணமக்கள் கூடுதல் பெறுவரென்று அறியலாம். அற்றன்று, பண்டைத் திருமணம் மூன்றுநாள் விழாவாய் நடைபெற்றதென்பதற்குத் தண்கதிர்ச் செல்வர்கும் கந்தருவர்க்கும் அங்கியங் கடவுட்கும் மணமகளையளித்து நான்காநாளே தலைமகன் அவா கொடுப்பப் பெற்று நுகர்வானென்று நச்சினார்க்கினியர் காட்டும் ஏது தமிழர் கோட்பாடுகட்குங் கற்பு முறைகட்கும் மாறுமாதலின், அவ்வாற்றால் அவர் காட்டும் அவ்வேதுவும், அவ்வேதுக்கொண்டு பண்டைக் காலத்தில் தமிழர்க்குள் மூன்றுநாள் திருமணமே நடைபெற்றதென்னும் வழக்கமும் உண்மையாகாவெனின், அஃது ஒக்கும்; எனினும், இம்மறுப்புரையினால் ஆசிரியர் நச்சினார்க்கினியர் திருமண மூன்றுநாள் விழாவுக்குக் காட்டிய ஏதுக்கள் பொருத்தமாகாவென்பது பெறப்படுமேயல்லாது, மற்று அவ்வேதுக்கள் பிழையாமாறு பற்றித் திருமணவிழவு மூன்றுநாள் நடைபெறுமுண்மையும இல்லையாயொழிதல் யாண்டையதென்க. என்னை? திருமணம் மூன்றுநாள் நடைபெறும் வழக்கம் உண்மையாலன்றோ நச்சினார்க்கினியர் அதற்கோரேதுக் கற்பித்தனரென்பது. மூன்றுநாள் விழவுக்கு நச்சினார்க்கினியர் காட்டிய ஏது பொருத்தமில்லையாயின், வேறு பிற ஏதுக்கள் பொருத்தமாகலாம். மேலும் எல்லாம் வல்ல முழுமுதற்கடவுளுக்கு உலகத்திலுள்ள எல்லாமக்களும் உடைமைப் பொருளாதல்பற்றித் தலைவியின்பாற் கிழமைபாராட்டுதல் வேண்டுந்தலைமகன் அம்முழுமுதற்கடவுளை மூன்றுநாளும் எரியோம்பி வழிபட்டுப் பின்னாளிலே அவளை அவ்வாண்டவனிடமிருந்து பெறுதற்குரியனென்னுந் தமிழர் கொள்கையையே நச்சினார்க்கினியர் ஆங்குக் கூறிய உரைகொண்டு யாம் தெளிதல்வேண்டும்.

தலைவன் மணமகளைத் தீக்கடவுண்மாட்டுப் பெறுதற்குரியனென்று நச்சினார்க்கினியர் கூறுதற்கு இஃது ஏற்றதோரேதுவேயாயினும், அங்ஙனம் அவர்மாட்டுப் பெற்றிடுஞ் செய்கையினை மணமகன் ஒரே நாளிலேயே அவரை வணங்கிப் பெறாது அதற்கு மூன்றுநாள் வணக்கமும் வேறு பிற நிகழ்ச்சிகளும் அவற்கு வேண்டப்படுங் கட்டாயம் என்னையோவெனின், நன்று, திருமணம் முடிந்து கூடப்பெறுங் கூட்டத்துக்கு முன், அக்கூட்டவின்பஞ் சிறத்தற்பொருட்டு இரண்டுமூன்றுநாட் பிரிவேனுந் தலைவன் தலைவியர்க்கு வேண்டப்படுமாதலானும், திருமணம் நிகழும் முதல்நாளிரவே அம்மணமக்கள் கூட்டம் நிகழுமாயின் அதற்கு

* தொல், கற்பு, ௫.

முன்னாளிரவுகளில் அவர்தமக்குட் பிரிவென்பதின்மையால் அம்முதல்நாளிரவின்கூட்டம் அத்துணையாக இன்பஞ் சிறத்தலில்லையாதலாலும், திருமணத்தின் முடிவில் நிகழும் மணமக்கள் கூட்டத்துக்கு முன் அவர்க்கு இரண்டுமூன்றுநாளிரவேனும் பிரிவு நிகழ்தல் நன்றென்பது 'மூன்றுநாளுங் கூட்டமின்மையானும் நிகழ்ந்த மனக்குறை தீரக் கூடிய கூட்டத்தின்கண்ணும்; அது நாலாம்நாளை இரவின் கண்ணதாம்' என்று மேலே காட்டிய நச்சினார்க்கினியருரைக் கூற்றின் பொருணுட்பத்தானுஞ் செவ்விதின் விளங்குமாதலாலும், இவைதாமு மன்றி மூன்று பகலாலும் ஐந்து வேளை தீ வளர்த்து இறைவனைத் தீயுருவின் வழிபடுதன்மேலும், அம்மூன்றுநாட்களின் திருமண நிகழ்ச்சி முறைகளாலும் ஆசிரியர் தொல்காப்பியனார் மெய்ப்பாட்டியலிற் கூறிய 'புகுமுகம்புரிதல், பொறிநுதல் வியர்த்தல், நகுநயமறைத்தல், சிதைவு பிறர்க்கின்மை, கூழைவிரித்தல், காதொன்று களைதல், ஊழணிதைவரல் உடைபெயர்த்துடுத்தல்' என்பனவும், 'அல்குல்தைவரல், அணிந்தவை திருத்தல், இல்வலியுறுத்தல், இருகையுமெடுத்தல்'*என்பனவுமான புணர்ச்சி மெய்ப்பாடுகளிலே மெய்யுறு புணர்ச்சியொன்று நீங்கலாக ஏனையவெல்லாம் ஒன்றன்பின்னொன்றாக அம்மணமக்கட்குள் நிகழ்ந்து அவைதமமால் அவர்தமக்குட் கூடுதல் உணர்ச்சி முறை முறையே வளர்ந்து நாலாநாளிரவின் மெய்யுறுபுணர்ச்சியின் மெய்ந்நல வேட்கை மிகல்வேண்டுங் கட்டாயம் திருமண நிகழ்ச்சிக்கு உண்டாதலாலும், அக்கட்டாயத்திற்காகவே திருமணத்துக்கு நிகழ்ச்சி முறைகள் ஏற்பட்டனவாமாதலாலும் களவொழுக்கத்தின் வழியாய் நிகழும் ஒவ்வொரு திருமணவிழாவும் மூன்றுநாள்நிகழ்ச்சிபெற்று நிகழ்தல் அவ்வியல்புணர்ந்த ஆன்றோர்கட்கு மாறுபாடாதலில்லையென்றும், மற்றது கட்டாயமே யாகுமென்றும் அறிந்துகொள்கவென்பது

இனி ஆசிரியர் நச்சினார்க்கினியரின் உரைக்குரிய நூற்பாத்தொடரான

> "கரணத்தின் அமைந்து முடிந்த காலை
> நெஞ்சுதளை யவிழ்ந்த புணர்ச்சிக் கண்ணும்"

என்னுந் தொல்காப்பியர்மொழியில், திருமணம் நடைபெறும் முதல்நாள் இரவே மணமக்கட்குட் புணர்ச்சி நிகழ்ந்ததென்பதற்கு ஏதொரு சிறு இயையுங் காணப்பட்டிலது அதன்கண் அவரங்ஙனங் கூறல் வேண்டினாராயின், எளிதிலே கூறி முடித்தற்கும் இடுக்கேதுமில்லை. ஆனால் அவர் 'அமைந்து' என்றொரு சொல்லும், 'முடிந்த காலை' என்றிரு சொற்களும் பெய்து வைத்திருக்குஞ் சொற்பொருளியைபுகளின் றிட்ப நுட்பங்களை அமைதியாய் நின்று மெல்ல உற்றாராயின், அஞ்ஞான்று நிகழ்ந்த திருமணம் ஒரு நாளிலேயே முடிவதன்றாய் அவ்வொருநாட்கு மேலும் நிகழ்ந்து பின்னொருநால் முடிவதாயிற்றென்பது செவ்விதின் விளங்கும். இங்ஙனமே மேலெடுத்துக் காட்டிய 'உழுந்து தலைப்பெய்த' வென்னும் அகப்பாட்டின் கண்ணும்,

> "வதுவை நன்மணங் கழிந்த பின்றைக்
> கல்லென் சும்மையர் ஞெரேரெனப் புகுதந்து
> பேரிற் கிழத்தி யாகெனத் தமர்தர
> ஓர்இல் கூடிய உடன்புணர் கங்குல்"

---

*தொல், மெய்ப்பாட்டியல், ௧௩, ௧௪, ௧௫.

என்று வந்தவிடத்து, 'ஓர் இல் கூடிய உடன்புணர் கங்குல்' என்பது ஏதோ வேறோரிரவைப் புணர்ச்சிக்குக் குறித்து நின்றதேயன்றித் திருமணம் நிகழும் அந்நாட் கங்குலைக் குறித்திலது. அற்றன்று;

"மழைபட் டன்ன மணன்மலி பந்தர்
இழையணி சிறப்பிற் பெயர்வியர்ப் பாற்றித்
தமர்நமக் கீந்த தலைநா ளிரவின்"*

என்னும் அகநானூற்றின் வேறொரு செய்யுளில் திருமணம் நிகழ்ந்த முதல்நா ளிரவிலேயே மணநிகழ்ச்சி முடிந்து கூட்டம் நிகழ்ந்ததென்று கூறினராலெனின், அது பொருந்தாது; என்னை? 'தலைநாள்' என்பதை முதல்நாளென்று உரைகூறினால், 'முதல்நாள்' என்னும் அச்சொல்லே 'இரண்டாநாள் மூன்றாநாள் நிகழ்ச்சி'யென்னும் எச்சப்பொருளைத் தந்து நிற்றலினென்பது. 'தலை'யென்று கூறிய அளவானே அச்சொல்லுண்மையினின்றே 'இடை', 'கடை' என்பவைகளின் உண்மைகளும் எல்லார்க்கும் விளங்குவனவேயாம். எனவே 'தலை'நாளென்பதற்கு அங்குச் 'சிறந்தநா'ளென்றே பொருளுரைத்தல்வேண்டும். இவ்வாற்றால் முன்னர்க் கூறிய அகநானூற்றுச் செய்யுட் கருத்துப்போக்குக்கும் அதனால் மேலெடுத்துக்காட்டிய தொல்காப்பியரின் நூற்பாப் போக்குக்கும் தலைநாளிரவின் என்னும் இவ்வகநானூற்றுச் செய்யுட்டொடர்க்கருத்து எதுந் தடைசெய்தலின்றென்பது. எனவே, நச்சினார்க்கினியர் கூறிய மூன்று நாட்களின் திருமணவிழவுண்மையும் பிழையாமென்று கொள்ளுதற்கில்லையென்க. மேலும்,

"களவினுட் டவிர்ச்சி வரைவி னீட்டந்
திங்களிரண்டி னகமென மொழிப"‡

என்னும் இறையனாரகப்பொருணூற்பாவானும், 'இயற்கைப்புணர்ச்சிப் பிறந்தவிடத்துப் பிராயமும் ஈண்டே உரைக்கப்பட்டதாம்; பதினோராண்டும் பத்துத்திங்களும் புக்க தலைமகளோடும் பதினையாண்டும் பத்துத்திங்களும் புக்க தலைமகனைப்போலும் புணர்தல் வேண்டிற்றென்பது பெற்றாம். அவளும் இருதிங்களுங் களவொழுக்கொழுகப் பன்னீராட்டைப் பிராயத்தாளாம். அது மகப்பேற்றுக்குக் காலம்; களவொழுக்கத்திற்குப் பொருந்தாதென விலக்கப்பட்டதாம் ஆசிரியர்களாலென்பது. இவனும் இருதிங்கள் களவொழுக்கொழுகப் பதினாறாட்டைப் பிராயத்தானும்; அஃது ஆண்மை நிலைபெறாத காலமாகலாற் களவொழுக்கிற்கு விலக்கப்பட்டது' என்னும் அதன உரையானும் தலைவன் தலைவியரின் களவொழுக்கம் இரண்டு திங்கட்குமேல் நிகழாதென்பதும், பெரும்பாலும் அக்காலவெல்லைக்கு உள்ளாகவே அது நிகழ்தற்குரியது என்பதும், அதற்குமேல் நிகழுமாயின் திருமணஞ்செய்து கொள்ளுதற்கு முன்னரேயே தலைவிக்குப் பிள்ளைப்பேறுவாய்த்தலும் உண்டாமென்பதும், ஆகவே தலைவிக்குப் பெண்மை தோன்றும் பன்னீரியாண்டின் முடிவிலும் தலைவனுக்கு ஆண்மைதோன்றும் பதினாறாண்டின் முடிவிலுமே திருமணம் கட்டாயம் நிகழ்ந்தே தீருமென்பதூஉந் தெளிவாய் அறியற்பாலன.

---

* அகம், ௧௩௬.　　‡ இறைய, ௩௨.

‘அஃதேயெனின், இருதிங்களென்றது அகமென்றதெற்றிற்கோ வெனின், இருதிங்களுள் ஐந்தானும் ஆறானும் நாள் உளவாகக் களவொழுக்கு ஒழிந்து நின்று வரைந்து புகுவதனோடும் மறுப்பதனோடும் அத்துணைநாளும் புக்கு நிறைந்து நின்ற பின்னை அதுபடின் மிகுவான் புகுமென்பது’ என்று மேல் நூற்பாவுக்கு மேலுந் தொடர்ந்து நக்கீரனார் உரை கூறுதலால், களவொழுக்கத்துக்கெனப் பண்டைத்தமிழர் மேற்கொண்டுவந்த காலமாகிய இரண்டு திங்கள் அல்லது அறுபதுநாட்களுள் அறுபதாநாள் முடிவதற்கு ஐந்துநாட்களோ அல்லது ஆறுநாட்களோ நாளிருக்கும்போதே தலைமகன் திருமணஞ் செய்துகொள்ளத் தொடங்குவனென்பதும், அச்சிலநாட்களாகத் திருமணம் நிகழ்ந்துகொண்டுவந்து அறுபதாநாள் முடிவதற்குள் ஓர் நாள் தலைமகளோடு மெய்யுறு புணர்ச்சிக்குப் புகுவனென்பதும் உணரப்படும். இவ்வுண்மையினைத் தஞ்சைவாணன் கோவையுரையாசிரியர் இவ்விறையனாரகப்பொருளுரைச்சான்றினையே தமதுரைக்கணும் எடுத்துக்காட்டி, ‘இவ்வாறு நாள்முறையாகக் கூறிவந்து ஐம்பத்தாறுநாள் மணமுடிந்ததென்று கூறியதென்னையெனின். ‘திங்களிரண்டினகமென மொழிப’ என்னும் அகப்பொருட்சூத்திரத் துரையில் இருதிங்களும் நாலுநாளுமிருக்க மணமுடிப்பதியல்பென்று இலக்கணங்கூறினமையாற் கூறியதென்றுணர்க’* என்று கூறித் திருமணம் நிகழுநாள் ஐம்பத்தாறுநாள் என்று நாள்குறித்துச் சென்றார். எனவே அன்று தொடங்கி ஏனைத் திருமண நிகழ்ச்சிகளெல்லாம் ஏனையிரண்டு மூன்று நாட்களாக நிகழ்ந்து முடியுமென்க. திருமணம் நிகழுநாட்களில் தாலிகட்டிக் கிழமைகொள்ளும் முதல்நாளே அம்மூன்றுநாட்களுள்ளும் முதன்மையான நாளாக உலகத்தவர்கள் கொள்வராதலாலும், திருமண நிகழ்ச்சிகளெல்லாம் ஒன்றுமுதற் பலநாட்களாக நிகழுமாயினும், திருமணம் என்று முடிக்கப்பட்டதென்று கேட்பார்க்கு அவற்றின் முதல்நாளையே குறிப்பிட்டுப் பின்பு பேசிக்கொள்வது உலகவழக்காதலாலும் அம்முறையில் ஐம்பத்தாறுநாள் மணமுடிந்ததென்று வந்த தஞ்சைவாணன் கோவை யுரைத்தொடரினால், அவ்வைம்பத்தாறுநாட்கு மேலும் இரண்டுமூன்று நாட்கள் விழா தொடர்ந்து நிகழ்ந்ததென்னுங் கருத்து எதுந் தடைப்படுதலில்லையென்றறிதல்வேண்டும். இங்ஙனமே திங்களளவெல்லாம் முப்பத்தொருநாளும்முப்பத்திரண்டுநாட்களுங்கூட உடைமையால் அவ்வேதுபற்றி இரண்டு திங்களென்று காட்டப்பட்ட களவொழுக்கநாட்களின் எல்லை அறுபதாநாளுக்குமேல் ஒன்றிரண்டு கூடி அறுபத்திரண்டுநாட்களின் முடிவாயும் நிற்குமாதலாலும், ‘வரைந்து புகுவதனோடும், என்றதனோடு ‘மறுப்பதனோடும்’ என்றொரு தொடரும் மேலிறையனாரகப்பொருளுரையிற் காணப்படுதலால் அவ்வரைவு மறுப்புச் செய்கைகட்கு மேலும் ஒன்றிரண்டு நாட்கள் செல்லுமாதலாலும், ஆசிரியர் நக்கீரனார் இருதிங்களுள் ஐந்தானும் ஆறானும் நாள் உளவாக வென்று கூறி, நாட்களை மூன்றுநாட்களுக்குமேல் மிகுதியாகக் கூட்டிக் காட்டினமையால், மேற்காட்டிய தஞ்சைவாணன் கோவையுரை காட்டிய ஐம்பத்தாறுநாள் என்னும் நாட்கணக்கும் பிறழ்தலில்லையென்று அறிந்துகொள்ளல்வேண்டும். இவ்வளவும் விரித்துக் கூறியவாற்றாற் பண்டைத் தமிழர் தம் திருமணங்களை மூன்றுநாள் விழாவாக நிகழ்த்திக்கொண்டாடினார்களென்பதும், அது முறையேயாகுமென்பதும் வடுப்படாவென்பது நன்கு விளங்கும்.

---

* தஞ்சைவா, ௫௯௯.

அப்பர் திலகவதியாரிடம் திருநீறு பெறல்.